
Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 24
ஒக்ரோபர் 01 - 07, 2015
ரூபா 30.00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1137



## இலங்கைக்கு அறிக்கை கொடுத்த அதிர்ச்சி



## தொடர்கிறது வன்முறைகள்



## மூப்பு!



## தூர்ந்து போன காகித ஆலை



## ௐ விநாயகரின் அன்புவேண்டுமா?

வக்ரதுண்டர், மஹோத்ரதர், கஜானனர், லம்போதரர், விகடர், விக்னராஜர், தூம்ரவர்ணர், சூர்ப்பகர்ணர் என்று எட்டுவித மான அவதாரங்களை விநாயகப் பெருமான் எடுத்ததாக விநாயக புராணம் கூறுகின்றது. அவர் எதற்காக எட்டுவிதமான அவதாரங்களை எடுத்தார் என்றால், மனிதர்களிடையே காணப்படும் தீயகுணங்கள் எட்டு (காமம், குரோதம், லோபம், மதம், மாச்சர்யம், மமதை, மோகம், அகந்தை) அந்த எட்டு குணங்களையும் நீக்கி நமக்கு ஞானமளிப்பதற்காகவே அவர் எட்டுவிதமான அவதாரங்களை எடுத்தார்.

அந்த எட்டுவிதமான அவதாரங்களையும் நினைவிற்குக் கொண்டு வந்து வணங்க விநாயக மந்திரம் துணைபுரிகிறது. இந்த மந்திரத்தை தினசரி பாராயணம் செய்பவர்கள் அனைத்துவிதமான சந்தோஷங் களையும் அடைவார்கள்.

விநாயகர் அகவல், விநாயகர் கவசம், விநாயகர் சகஸ்ரநாமம், காரிய சித்தி மாலை, விநாயகர் புராணம் ஆகியவற்றை தினமும் படித்து அறுகம்புல்லால் விநாயகனை வழிபட்டுவந்தால் விநாயகரின் அருள் நமக்குக் கிடைக்கும்.

## மனம் திரும்புபவன் பெரியவன்

இன்று வாழ்க்கையில் நடக்கும் பெரிய போராட்டம் 'யார் பெரியவன்' என்பது. இந்த போராட்டத்தால் முதல் மனிதன் முதல் கடைசி மனிதன்வரை போராடி பொருளையும் நேரத்தையும் செலவிட்டு, தன்னையும் பிறனையும் அழித்து நிம்மதியின்றி வாழ்கிறான். ஆதாம் தொடங்கிவைத்த இந்த 'யார் பெரியவன்' என்ற போராட்டம் இயேசுவின் வாழ்விலும் போதனையிலும் திருப்பத்தை ஏற்படுத்துவதை இங்கு காண்கிறோம்.

இயேசுவின் பார்வையில் மனம் திரும்புபவன் பெரியவன். தன் தவறை திருத்திக்கொள்பவன் பெரியவன். தன் குற்றத்தை, பலவீனத்தை, ஏற்றுக்கொள்பவன் பெரியவன். தன் குறைகளை, பாவீனத்தை, பாவத்தை ஏற்றுக்கொள்பவன் தன்னைத் தாழ்த்துகிறான்.

இவ்வாறு தன் தவறுகளை ஏற்றுக்கொள்பவன், தான் யாருக்கு எதிராக தவறு செய்தோமே அவர்களை தன்னைவிட பெரியவர்களாக ஏற்றுக்கெள்கிறான். தன்னை ஒரு குழந்தைபோல தாழ்த்தி நல்லவர்களையும் பெரியவர்களையும் சார்ந்திருக்கும் குழந்தையாக தன்னில் பெரிய மனமாற்றத்தை உண்டாக்கிக்கொள்கிறான். இவனே பெரியவன்.

## படிப்பினையூட்டும் பாத்திமா(றழி)யின் திருமணம்

ஏழ்மையான திருமணத்தையே இறைவன் விரும்புகின்றான். ஆடம்பரமான திருமணத்தை அல்லாஹ் விரும்புவதில்லை. அதற்கு ஓர் உதாரணம் அண்ணல் நபியின் அருமைப் புதல்வி பாத்திமா (றழி) யின் திருமணம். இத்திருமணம் ஹிஸ்ரி 2ஆம் ஆண்டு நடைபெற்றது. அலி (றழி) அவர்களுக்கும், பாத்திமா (றழி) அவர்களுக்கும் அன்று அத்திருமணம் நிகழ்ந்தது. அலீ (றழி) அவர்களிடம் இருந்த கவசம் அப்போது விற்கப்பட்டு அத்தொகைப் பணம் மணப்பெண்ணுக்கு மஹராகக் கொடுக்கப்பட்டது. வலீமா விருந்தும் அங்கு வழங்கப்பட்டது. அவை பேரீச்சம் பழங்களே. ஏழ்மையான திருமணத்திற்கு இது ஒரு எடுத்துக்காட்டவல்லவா?

அல்லாஹ் அல்குர் ஆனில் கூறுகிறான். உண்ணுங்கள். பருகுங்கள். ஆனால் அதிகமாக செலவுசெய்து வீணாக்காதீர்கள். ஏனென்றால் வீணாக்குவோரை அல்லாஹ் விரும்புவதில்லை. ஆம் பெண்ணிற்கு பெருமை தேடிக்கொடுத்த பாத்திமா(றழி)யின் இல்லற வாழ்க்கை இவ்வுலக மாந்தர்களுக்கு மண வாழ்க்கையில் மனத்திருப்தியைத் தரும். அல்லாஹ் விரும்பும் ஆண், பெண் திருமணங்கள் ஆய்வுசெய்ய படிப்பனையூட்டும் பாத்திமா (றழி)யின் திருமணம்.

எம்.சி.கலீஸ், கல்முனை – 05.

---

### கவிதைப்போட்டி 1134



● பாராட்டுக்குரியது ●

## கடவுள் தந்தது

யுத்தம் தந்தது
நினைவுப் பரிசு
தந்தையை இழந்து
தாயை பறிகொடுத்து
நட்டாற்றில் - நான்
நிற்கவிட்டான்
கடவுள்.

க.வித்தியன், வவுனியா.




# கவிதைப் போட்டி இல 1137



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பிவையுங்கள்.
அனுப்பவேண்டிய கடைசித் திகதி 12. 10. 2015
கவிதைப் போட்டி இல. 1137 தினமுரசு வாரமலர்,
த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## விடிவு

வீதியோரம் காத்திருந்து
பழம் விற்கும் நிலைக்கு
விதி வந்து கௌவியது.
விரைவில் விடிவு
வரும் காத்திரு மகனே!!

எஸ்.கவிதா, யாழ்ப்பாணம்.

## நிழல்கள்

சுட்டபழம் - சுடாத பழம்
இப்பாலகன் விற்பதோ
நிஜங்களின் நிழல்கள்
தந்த வேதனை
எனும் பழத்தை.

ம.குந்தவை, புதுக்குடியிருப்பு

## காட்சிப்பொருளா?

வீதியோரம் நாவற்பழம்
விற்கும் காட்சிப்பொருளா?
இவன்???

கே.சுபா, திருநெல்வேலி.

## கனக்கிறது மனம்

கட்டாய வேலைக்கு
அமர்த்தி பணம்
சம்பாதிக்கும் சிலரின்
அற்பத்தனமான ஆசையை
எண்ணி கனக்கிறது மனம்.

ம.புஸ்பலதா, மன்னார்.

## மனிதராகமாட்டார்

சிறுவர் வேலைக்கு
அமர்த்துதல் தப்பென
நினைக்காதவர்
ஆறறிவு
மனிதராகமாட்டார்.



எஸ்.கஜன், சுன்னாகம்.

# உங்கள் பக்கம்

## சனசமூக நிலையத்தை கவனிக்காமை ஏன்?

மட்டக்களப்பு மாவட்டம் ம.தெ.எ.ப களுவாஞ்சிக்குடி பிரதேச பிரிவுக்குட்பட்ட மகிழூர்முனை மாதிரிக்கிராம கணேஸ் சனசமூக நிலையம் ஆரம்பித்த காலத்தில் இருந்து பத்திரிகைகள். பல ரக புத்தகங்கள் என்பன பார்க்க படிக்கக்கூடிய வாய்ப்பு இக்கிராம மக்கள் மாத்திரம் இன்றி அயல்கிராம சேர்ந்தவர்கள் மாணவர்களுக்கும் வசதியாய் இருந்தது.

இவை கடந்த பல வருடங் களாக எவ்வித செயற்பாடுகளும் இன்றி கட்டிடம் மாத்திரம் வெறுமனே உள்ளன. இதை மீண்டும் செயற்படுத்த உதவுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டியபோதும் எந்த பலனோ. பதிலோ கிடைக்கவில்லை. இதை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்களுக்கு விண்ணப்பித்தும் பதில் எதுவும் கிடைக்கவில்லை.

ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரி களிடம் அவர்கள் மேற்படி எமது மாதிரிக் கிராம சனசமூக நிலைய யத்தை மீண்டும் செயற்பட ஆவன செய்யுமாறு அன்பாக வேண்டு கின்றோம். எமது பிரதேச சபை பேசாத சபையாக உள்ளது.

எனவே உங்கள் பக்கமூடாக உரிய அதிகாரிகள் சிரத்தையுடன் கவனத்தில் எடுக்கவேண்டும். வாசிப்பால் பண்படுவோம். தேசிய வாசி[illegible]கும் ஒக்டோபர் மாதமாகும். ஆன[illegible]யலில்லை.

ஆ.[illegible]லம், மகிழூர்முனை.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தின[illegible]ரமலர்
த.[illegible] 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்: (E-mail):-
thinamurasu@live.com

# வாசகர்சாலை

பிழத்தவை! சூடு, சுவை, சுவாரசியம் குன்றாமல் சிறப்பாய் இருக்கிறது. விளையாட்டு செய்திகள், எக்ஸ்ரே ரிப்போர்ட், பாப்பா முரசு என்பவை எனக்குப் பிழத்தமானது. 24 ஆம் பக்கத் தகவல்கள் அருமையாக உள்ளது.

சு.காவேரி, தெல்லிப்பளை.

**பெருமை!** தினமுரசு பல வண்ணங்களில் எழுச்சிமிக்கதாய் வெளி வருகின்றது. சினிமா, முன்பக்கம் ஆகியவை சிறப்பாக இருக்கின்றது. முன்பக்கத்தை இன்னும் அழகாய் வடிவமைக்கலாம். கலர் பக்கத்திற்கு தின முரசுக்கு நிகர் தினமுரசு-தான். முரசு இதையிட்டு பெருமைப்படவேண்டும்.

என்.தாரணி, கண்டி.

## வேண்டுகோள்!

முரசு அற்புதராஜாவின் எழுத்துக்களை வாசிக்கத் தொடங்கிய நான் இன்றுவரை முரசை வாசித்து வருகின்றேன். ஆனால் இப்போது எமது இடத்திற்கு பத்திரிகை வராதது பெரும் கவலையாக உள்ளது. முரசு இதில் தீவிர கவனமெடுக்க வேண்டுமென்பதே எனது வேண்டுகோள். பல முரசு வாசகர்கள் வாசகர் பக்கத்தில் முரசு வராதது பற்றி முன்வைத்ததை வாசித்தேன். ஆதலால் நானும் இவ்வேண்டுகோளை விடுக்கின்றேன்.


எம்.அஸ்வத், பதுளை



### ஒக்ரோபர் - 01

"நிச்சயமாக நன்மை விளை யும் என உணர்ந்தாலன்றி உள்ளத்தில் உள்ளதை வெளியிடாதே."

# சரியான நிலைப்பாட்டை வெளிப்படுத்துமா தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு?



**ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளரினால் இலங்கை தொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கை அதன்பின்னர் அந்த அறிக்கை தொடர்பில் அமெரிக்க அரசினால் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை வரைவு என்பன தொடர்பில் சரியான நிலைப்பாடொன்றை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிப்படுத்த வேண்டுமென அவர்களுக்கு வாக்களித்த மக்கள் எதிர் பார்க்கிறார்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஈழமக்கள் ஜன நாயக கட்சியின் யாழ். ம்ாவட்ட பிரதம அமைப்பாளருமான கா.வேலும்மயிலும் குகேந்திரன் (வி.கே.ஜெகன்) தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், ஏற்கனவே இந்த தீர்மானங்கள் தொடர்பில் எமது செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் விடுத்துள்ள அறிவிப்பில் அனைத்து தமிழ் கட்சிகளும் இணைந்து இந்த விடயம் தொட்ர்பில் மக்கள் நலன் சார் முடிவொன்றை எடுக்க வேண்டுமென தெரிவித்திருந்தார்.

கடந்த காலங்களைப் போல் அல்லாது மனித உரிமைகள் ஆணையாளரினால் போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கையினை இராஜதந்திர ரீதியில் எவ்வாறு அணுகுவது, இதனூடாக விசாரணைகள் இன்றி சிறைகளில் இருக்கும் தமிழ் இளைஞர்களை எப்படி விடுவிப்பது, காணாமல் போனவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படவேண்டிய அணுகு முறைகள், இன்னும் விடுவிக்கப் படாத எமது மக்களின் காணிகளை எப்படி விடுவிப்பது, போரினால் பாதிக்கப்பட்டு இன்னமும் அவதியுடன் வாழும் மக்களுக்கு புனருத்தானங்களை எப்படி பெற்றுக் கொடுப்பது, அரசியல் தீர்வினை எப்படி பெற்றுக்கொள்வது என்பனவற்றை அனைத்து கட்சிகளும் இணைந்து தீர்மானிக்க வேண்டும் என்ற கருத்தினையே எமது தலைவரின் அறிக்கை வலியுறுத்தி இருந்தது.

ஜெனீவா தீர்மானம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன், சித்தார்த்தன் ஆகியோர் வெளியிட்டுள்ள கருத்துக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கை தொடர்பில் கேள்விகளை எழுப்பியுள்ளது.

போர்க்குற்றங்கள் தொடர்பில் முற்றுமுழுதாக சர்வதேச விசாரணை ஒன்றையே மக்கள் விரும்புகிறார்கள் என சிறிதரனும், சித்தார்த்தனும் கருத்து தெரிவித்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம்வகிக்கும் கட்சிகளில் ஒன்றான ஈ.பி.ஆர்.எல்.எப் பின் தலைவர சுரேஸ் பிரேமச்சந்திரனும் சர்வதேச விசாரணை ஒன்றே வேண்டுமென பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஜெனீவா தீர்மானங்கள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் உள்ளக விசாரணை ஒன்றே நடாத்தப்படும் எனவும், இதனையே அமெரிக்க வரைவு தீர்மானம் வலியுறுத்துவதாகவும் தெரிவித்திருந்தார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போது வடகிழக்கு இணைந்த சமஷ்டி அடிப்படையிலான தீர்வு, விசாரணையின்றி சிறைகளில் இருக்கும் தமிழ் இளைஞர்களை விடுவிப்போம், காணாமல்போனவர்கள் தொடர்பில் ஒரு தீர்வினைப் பெற்றுத்தருவோம், இன்னமும் படையினர் வசமிருக்கும் காணிகளை மீட்டுத்தருவோம், போர்க்குற்றங்கள் தொடர்பில் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி நிற்போம் எனக் கூறியே மக்களின் வாக்குகளைப் பெற்றிருந்தனர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்.

ஆனால் தேர்தல் முடிந்து ஒரு மாதத்திற்கு மேலாகியும் இன்றைய ஆளும் அரசில் அங்கம்வகித்துக் கொண்டிருந்தும், இந்த விடயங்கள் தொடர்பில் எந்த முன்னெடுப்புகளையும மேற்கொள்ளாதது மட்டுமல்ல, ஜெனீவா தீர்மானம் தொடர்பிலும் முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்டு வருவது மக்களை மேலும் குழப்பத்திற்கு உள்ளாக்கியுள்ளது. முன்னைய காலங்களைப்போல இவர்கள் அளித்த இந்த தேர்தல் வாக்குறுதிகளும் காற்றில் பறக்கவிடப்படுமா? என்கின்ற கேள்வியே மக்கள் மத்தியில் தற்போது எழுகிறது.

இது தொடர்பில் வடமாகாண சபையின் முதலமைச்சர் திரு.விக்கினேஸ்வரன் அவர்களாலேயே முன்மொழியப்பட்டு சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வன்னிப் போரில் இடம்பெற்றது இனப் படுகொலையே எனத் தெரிவிக்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் அவர்கள் வெளியிட்ட அறிக்கை இன அழிப்பு நடந்ததற்கான எந்த சான்றுகளும் இல்லை எனத் தெரிவித்திருந்தது.

இடம்பெற்றது இன அழிப்பா? அல்லது போர்க்குற்றமா? என்பதிலேயே மக்களை குழப்பிக் கொண்டிருக்கும் இவர்கள் தற்போது சர்வதேச விசாரணையா? அல்லது உ்ள்ளக விசாரணையா? என்பதிலும் குழப்பமான கருத்துக்களை வெளியிட்டு மக்களை மேலும் மேலும் அதிருப்திக்கு உள்ளாக்கிவருகின்றனர்.

எமது தலைவர் அடிக்கடி கூறுவது போல கிடைத்த வாய்ப்புகள் அனைத்தும் பாழடிக்கப்பட்டமையே வன்னி போரின் அனர்த்தங்களுக்கும், மக்கள் அழிவுக்கும் காரணமாகின என்பதுபோல, தற்போதைய இந்த சந்தர்ப்பமும் கூடுதலான நாடாளுமன்ற ஆசனங்களைக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் ஒருமித்து அணுகப்படாவிட்டால் இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டாக்கனியாக போய்விடுமோ எனவும் மக்கள் அங்கலாய்க்கின்றனர் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புல்லுக்குளத்தின் குளக்கட்டு சேதம்

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள புல்லுக்குளத்தின் அணைக்கட்டின் தெற்கு பகுதியிலுள்ள மேடை இடிந்து குளத்துக்குள் விழுந்து சேதமடைந்துள்ளது.

குளத்திலிருந்த கழிவுகள் அகற்றப்பட்டு, குளத்தைச் சுற்றிலும் கல் இருக்கைகள் அமைக்கப்பட்டன. புனரமைக்கப்பட்ட இந்தக் குளம் தொடர்ந்தும் பேணும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. கடந்த வருடம் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணம் வருகை தந்த போது, இந்தக் குளம் துப்பரவு செய்யப்பட்டது. அதன பின்னர் குளம் பராமரிப் பின்றியிருந்தது.

நகர அபிவிருத்தி அதிகார சபையும் மாநகர சபையும் இணைந்து, புல்லுக்குளத்தைச் சுற்றுலா மையமாக மாற்றும் நடவடிக்கையின் கீழ் 2012ஆம் ஆண்டு குளம் புனரமைக்கப்பட்டு, அணைக்கட்டுக்கள் பலப்படுத்தப்பட்டன.

இக்குளத்தின் அணைக்கட்டு, கல் இருக்கைகள் உடைந்தும் குளத்தின் நீர் குப்பைகளால் அசுத்தமாகியும் உள்ளதால் உரிய அதிகாரிகள் கவனத்தில் கொள்ளவேண்டும்.

# அமெரிக்காவுக்கு ஏன் போனேன்? ஜனாதிபதி மகன் விளக்கம்

அமெரிக்காவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ஐக்கிய நாடுகள் மாநாட்டுக்கு, தான் ஏன் போனேன் என்பது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகன் தஹாம் சிறிசேன, தன்னுடைய முகப் புத்தகத்தில் விளக்கமளித்துள்ளார்.


இந்த மாநாட்டுக்கு அவர், சென்றமை தொடர்பில் ஊடகங்களில் பல்வேறான கருத்துக்கள் வெளியாகியிருக்கின்றன. அதுமட்டுமன்றி எதிர்மறையான விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டுள்ளன.

அவர், தனது முகப்புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம், இந்த மாநாட்டில் பங்கேற்குமாறு தன்னுடைய தாய்க்கு அழைப்பிதழ் வந்துள்ளது. அவரால், இந்த மாநாட்டில் பங்கேற்க முடியாமையால், அந்த சந்தர்ப்பம் தனக்கு கிடைத்தது.

அதில், புத்தாயிரமாம் ஆண்டு அபிவிருத்தி இலக்குகள் என்ற தொனிப்பொருளில் இளைஞர்களுக்காக நடத்தப்பட்ட மாநாட்டில் பங்கேற்பதற்கு தனக்கு சந்தர்ப்பம் கிட்டியது. அதனூடாக பல முக்கியமான நோக்கங்கள் தொடர்பில் கவனத்தை செலுத்த முடிந்தது என்றும் குறிப்பிட்டுள்ளார்.


இந்த மாநாட்டில் தான் பங்கேற்றமை எப்படி எதிர்மறையாக இருக்க முடியும் என்றும் அவர் வினவி உள்ளார்.

எவ்வாறாயினும் தன்னுடைய பங்குபற்றல் தொடர்பில் கடந்த கால ஆட்சியுடன் ஒப்பிடவேண்டாம் என்றும் அதுவும் தன்னுடைய குடும்பமும் நேரெதிரே வேறுபட்டது என்றும்



அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எவ்வாறாயினும் தன்னுடைய பங்குபற்றல் நாட்டுக்கு சாதகமானது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# பாலியல் வன்கொடுமையாளர்களுக்கு தகுந்த தண்டனை கிடைக்கும்: போப் பிரான்சிஸ்



பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான இளம்பெண்கள் காப்பாற்றப்படுவர் எனவும், இதற்குப் பொறுப்பானவர்களுக்கு தகுந்த தண்டனை கிடைக்கும் எனவும் பொப் பிரான்சிஸ் தெரிவித்தார். மேலும், குழந்தைகள் பாலியல்வன்கொடுமைகளுக்கு உள்ளா கும போது, அதற்கு வருந்தி கடவுள் அழுகிறார் எனவும் அவர் தெரிவித்தார்.

அமெரிக்காவுக்கு சுற்றுப் விஜயம் மேற்கொண்டிருந்த போப் பிரான்சிஸ், தனது பயணத்தின் இறுதி நாளான கடந்த ஞாயிற்றுக்கிழமை(27) அந் நாட்டின் பென்சில்வேனியா மாநிலத்தில் உள்ள பிலடெல்பியா நகருக்குச் சென்று அங்கு மதகுருமார்களால் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான பெண்களைச் சந்தித்து பேசும்போதே இதனைத் தெரிவித்தார். சுமார் முந்நூறு மதகுருக்கள் குழுமியிருந்த இடத்தில் பேசிய பொப், பாலியல் கொடுமைகளைச் செய்பவர்களை இனி ஒளித்து வைக்கவேண்டாம் எனவும், இவர்களுக்கு தக்க தண்டனை வழங்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

கடந்த 2012ஆம் ஆண்டு வாடிகனில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின்படி சுமார் ஒரு இலட்சம் குழந்தைகள், அமெரிக்கா முழுவதிலும், பாலியல் வன்கொடுமைகளுக்கு உள்ளாகியிருப்பதாக தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 2020 ஒலிம்பிக்கில் புதிய போட்டிகள் அறிமுகம்

ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடைபெறவுள்ள 2020 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டிகளில், கராத்தே மற்றும் பேஸ்போல் உள்ளிட்ட 5 விளையாட்டுக்களை அறிமுகம் செய்வதற்கு போட்டி ஒழுங்கமைப்புக் குழு பரிந்துரை செய்துள்ளது.

2020ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டிகள் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் அவ்வாண்டில் ஜூலை 24ஆம் திகதி முதல், ஓகஸ்ட் 9 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.



வட மாகாண சபை அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட யாழ். முஸ்லிம் கலாசார நிகழ்வில் கல்வி அமைச்சர் கௌரவ த. குருகுலராசா அவர்கள், யாழ். எழுத்தாளர் அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (ஜே.பி) அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து, 'யாழ். முஸ்லிம் இலக்கிய ஜோதி' பட்டமளித்து விருதும், விருதுபெற்ற எழுத்தாளர்களுடன் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராசா, காணப்படுவதையும் படத்தில் காணலாம்.

தினமுரசு
த.பெ.இல:- 167. யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## காலத்தின் அவசியம்!

அமெரிக்காவுக்குச் சென்றிருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. அங்கு வாழும் பௌத்த மக்களை சந்தித்தபோது விரைவில் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் என்று கூறியிருந்தார்.

அதனூடாக சுதந்திரம். ஜனநாயகம். மனித உரிமைகளை பலப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என்று கூறியிருந்தார். கூடவே பத்தொன்பதாவது திருத்தத்திற்கு அமைவாக சுயாதீன ஆணைக்குழுக்களை அமைக்கப் போவதாகவும் கூறியிருந்தார்.

ஆனால் புதிய அரசியல் அமைப்பின் ஊடாக இலங்கையில் நீண்டகாலமாக தீராப்பிரச்சினையாக இருக்கும் அரசியல் பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட்டு இலங்கை மக்கள் அனைவரும் சம உரிமையோடும். ஐக்கியத்துடனும் வாழும் சூழலை ஏற்படுத்துவோம் என்று ஜனாதிபதி குறிப்பிடவில்லையே என்பது தமிழ் மக்களுக்கு ஏமாற்றமாகவே அமைந்துள்ளது.

அண்மையில் ஐக்கிய நாடுகள் சபையில் உரையாற்றிய வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீர தனது உரையில். நாட்டில் புதிய அரசியலமைப்பு ஒன்று கொண்டுவரப்படும் என்றும் அதனூடாகச் சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும் என்று குறிப்பிட்டிருந்தார்.

ஜனாதிபதி கூறியதும். வெளி விவகார அமைச்சர் கூறியதும் ஒரே அரசியலமைப்பா? அல்லது வேறு வேறு அரசியலமைப்பா? என்பதை தெளிவுபடுத்தவேண்டும். இரண்டும் ஒன்றாக இருந்தால் ஜனாதிபதி சிறுபான்மை மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும் என்பதை வெளிப்படையாக கூறியிருக்கலாமே.

மனித உரிமைகள் ஆணையகத்தின் பரிந்துரையிலும். புதிய அரசியலமைப்பு ஒன்றின் ஊடாக சிறுபான்மை மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆகவே நல்லிணக்கமும். ஐக்கியமும் வாய்ப்பேச்சளவில் மட்டுமே கொண்டிருக்காமல், அர்த்தபூர்வமாக செயல்வடிவம் பெறவேண்டுமாக இருந்தால். இலங்கையில் புதிய அரசியலமைப்பு ஒன்று கொண்டுவரப்பட்டு சிறுபான்மை மக்களின் அரசியல் பிரச்சினைக்கு நியாயமான தீர்வு வழங்கப்படவேண்டும்.

அரசியல் தீர்வும். அதிகாரப் பகிர்வும் சர்வதேசத்தை சமாளிப்பதற்கான சம்பிரதாயமாக இல்லாது. பெரும்பான்மை சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ளும்வகையிலும் அது அமையவேண்டும்.

அரசாங்கம் புதிய அரசியலமைப்பு ஒன்றை ஏற்படுத்துவதற்கான அவசியத்துக்கு முகம்கொடுத்துள்ள இத்தருணத்தை தமிழ்த் தலைமைகள் ஓரணியாக திரண்டு எமது அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காக அர்ப்பணிப்போடு பாடுபடுவது அவசியமாகும். தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு கிடைத்து விட்டால். நமக்கு அரசியல் எதிர்காலமே இல்லாதுபோய் விடுமே என்று தமிழ்த் தலைமைகள் கபடத்தனமாக எண்ணி ஒற்றுமைப்படாமலிருந்தால் அவர்களை வரலாறு அலங்கோலமாக தண்டிக்கும். காலம் எப்போதும் சரியான தீர்மானங்களையே எடுத்துவந்துள்ளது. இனியும் எடுக்கும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# இலங்கைக்கு அறிக்கை கொடுத்த அதிர்ச்சி



ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணையகத்தின் இலங்கை தொடர்பான அறிக்கை ஏற்படுத்திய பரபரப்புக்கள் இன்னும் முடிவுக்கு வரவில்லை. இம்மாதம் முப்பதாம் திகதியே மனித உரிமை ஆணையகத்தின் முப்பதாவது மகாநாடு நிறைவுபெறும்.

மனித உரிமைகள் ஆணையகத்தின் ஆணையாளர் அல் செய்த் உசைன் அறிக்கை வெளியாகியதிலிருந்து அந்த அறிக்கை தொடர்பாக மனித உரிமை ஆணையகத்தின் உறுப்பு நாடுகளும் அந்த நாடுகளின் தலைவனான அமெரிக்காவும் இலங்கை தொடர்பான பல கருத்துக்களை முன்வைத்தனர்.

இலங்கையில் போர்க்குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் நடைபெற்றுள்ளது. அவை சர்வதேச பங்குபற்றுதலுடனான விசாரணை ஊடாக விசாரணை செய்யப்பட வேண்டும் என்றும், பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிகாரம் காணப்படவேண்டும் என்றும், நல்லிணக்கத்துக்கான அடித்தளமாகவும், நடந்து முடிந்த அழிவு யுத்தத்தின் காரணங்களை கண்டறிந்து அடிப்படைப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை வழங்குவது தொடர்பாகவும் இலங்கை அரசு சில முடிவுகளுக்கு வரவேண்டும் என்றும் அந்த அறிக்கை பரிந்துரைத்திருந்தது.

யார் கொல்லப்பட்டார்கள்?, யாரால் கொல்லப்பட்டார்கள்? யாருடைய அறிவுறுத்தலோடு இவை நடந்து முடிந்துள்ளன என்பதை தெளிவாக சுட்டிக்காட்டாவிட்டாலும், இலங்கைப் படையினரும், புலிகளும் இச்சம்பவங்களோடு தொடர்புபட்டிருக்கின்றார்கள் என்று சுட்டிக்காட்டியுள்ளது.

புலிகள் தற்போது இல்லை என்ற நிலையில், மறுதரப்பான இலங்கைப் படையினரும், படையினருக்கு உத்தரவுகளை வழங்கியவர்கள் என்றவகையில் அக்காலகட்ட ஆட்சியாளர்களையுமே விசாரிக்க வேண்டும் என்ற மறைமுகச் செய்தியாக அது இருந்தது.

இந்த அறிக்கையானது இலங்கை அரசுக்கு உள்நாட்டில் பல்வேறு நெருக்கடிகளை ஏற்படுத்தும் அம்சங்களைக் கொண்டிருந்தது. முக்கியமாக படையினரை குற்றவாளியாக ஏதேனும் ஒரு பொறிமுறைக்கு முன்னால் நிறுத்தினால் அது ஆட்சியாளர்களுக்கு நெருக்கடிகளை கொடுக்கும். மறுபக்கத்தில் யுத்தம் தொடர்பாக சிங்கள மக்களின் கருத்துக்களை உள்வாங்கியிருக்கவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவையும், அவரது படைத்தளபதிகளையும் குற்றவாளிகளாக அடையாளம் காட்டுவதானது யுத்தத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட வெற்றியை காட்டிக் கொடுப்பதாக அமைந்துவிடும்.

இதுதவிரவும், சர்வதேச தலையீட்டுடன் இலங்கையில் நீதி மன்றமொன்று அமைவதும், விசாரணைகள் நடைபெறுவதும் இலங்கையின் நீதித்துறையையும், இறைமையையும் பாதிக்கும் நடைமுறையென்ற குற்றச்சாட்டுக்களையும் அரசாங்கம் எதிர்கொள்ளவேண்டும். இந்த நிலையிலேயே சர்வதேச பங்களிப்புடன் விசாரணை என்பதை இலங்கை அரசு கடுமையாக நிராகரித்தது.

மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரையில் இலங்கையின் உள்ளக விசாரணைப் பொறிமுறை என்பதை ஆணையாளர் நிராகரித்திருந்தார். சர்வதேச சமூகமும், பாதிக்கப்பட்ட தரப்புகளும் இலங்கையின் உள்ளக விசாரணைப் பொறிமுறையை நம்பத் தகுந்ததாகக் கருதவில்லை. என்பதை கடந்த கால உள்ளகப் பொறிமுறைகளின் செயற்பாடுகளை குறிப்பிட்டுக் காட்டி நிராகரித்திருந்தார்.

மனித உரிமை ஆணையாளரின் இறுக்கமான நிலைப்பாட்டை, தளர்த்தி இலங்கையின் கால் அவகாசக் கோரிக்கையையும், உள்ளக விசாரணை கோரிக்கையையும் நியாயப்படுத்தும் விதமாக அமெரிக்கா கொண்டுவரும் புதிய தீர்மானம் அமையும் என்று எதிர்பார்த்திருந்து இலங்கை அரசுக்கு அமெரிக்காவின் தீர்மான வரைபு பேரதிர்ச்சியைக் கொடுத்தது.

அமெரிக்காவின் புதிய அறிக்கையின் வரைபானது, மனித உரிமைகள் ஆணையகத்தின் தீர்மானத்தை முழுக்க முழுக்க ஆதரிப்பதாக அமைந்திருந்தது. அமெரிக்காவின் வரைபை இலங்கை வெளிப்படையாக நிராகரித்தது. 26 பந்திகளைக் கொண்ட அமெரிக்காவின் வரைபில் 14 பந்திகளை நீக்கவேண்டும் என்றும் மேலும் சில திருத்தங்களைச் செய்யவேண்டும் என்றும் இலங்கை கோரிக்கைவிடுத்தது.

இந்த நிலையிலேயே திருத்தப்பட்ட அமெரிக்காவின் வரைபு வெளியாகி உள்ளது. அதில் சர்வதேச பங்களிப்புடன் என்பதை திருத்தி, பொது நலவாய மற்றும் சர்வதேச நீதிபதிகள், விசாரணையாளர்கள், சட்டத்தரணிகள், அடங்கிய உள்ளகப் பொறிமுறை ஊடாக குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளை நடத்தவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை மனித உரிமைகள் ஆணையகம் வெளியிட்ட அறிக்கையின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறும், பொறுப்புக்கூறல், மற்றும் நல்லிணக்க செயற்பாடுகளை தொடர்ந்து கவனிக்குமாறும், அது தொடர்பான வாய்மூல அறிக்கையை ஐ.நா மனித உரிமை ஆணையகத்தின் 32ஆவது கூட்டத்தொடரில் சமர்ப்பிக்குமாறும், அது தொடர்பான பரந்துபட்ட அறிக்கையை 34ஆவது கூட்டத்தொடரில் முன்வைக்குமாறும் ஐ.நா பேரவையை அமெரிக்கா கோரியுள்ளது.

அமெரிக்காவின் இந்த அறிக்கையை இலங்கை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டு உள்ளார். ஆனால் பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் எதிர்க்கட்சிகள் மாறுபட்ட நிலைப்பாட்டைக் கொண்டு இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

அமெரிக்காவின் தீர்மானத்தை ஜனாதிபதி மைத்திரிபால ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் முப்பதாம் திகதி வாக்கெடுப்புக்கு விடப்படாமலே தீர்மானம் நிறைவேற்றப்படும் என்று அமெரிக்கா நம்பிக்கை தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பை ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ மூன், அமெரிக்காவின் இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி, உள்ளிட்ட முக்கிய தரப்புக்கள் வரவேற்றுள்ளன.

ஆனால் இலங்கையின் களநிலவரம் வேறு மாதிரியாக இருக்கின்றது. பிரதமரோ, உண்மையைக் கண்டறிய வேண்டும் என்பதற்காக யாரையும் வேட்டையாட முடியாது என்றுகூறி இருப்பதோடு, அதிக அழிவுகளுக்குக் காரணமான புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கு எதிராகவும், அதன் தலைவர் பிரபாகரனுக்கு எதிராகவும் முதலில் வழக்குத் தொடர வேண்டும் என்று கூறியிருக்கின்றார். ஒரு தரப்பினருக்கு எதிராக மட்டும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவது நியாயமாகாது என்று கூறியிருக்கின்றார்.

தென் இலங்கையின் மற்றுமொரு பிரதான கட்சியான ஜே.வி.பியும், ஐ.நா.வின் அறிக்கையையும், விசாரணைப் பொறிமுறையையும் கடுமையாக எதிர்த்து வருகின்றது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த உள்ளக விசாரணை நடைபெறலாம் என்று இணங்கியதன் காரணமாகவே இப்போது நாம் அதற்கு இணங்கவேண்டியுள்ளது என்று தனது நிராகரிப்பை அரசின் பங்காளியான ஜாதிக ஹெல உறுமய வெளிப்படுத்தியுள்ளது.

இதைவிடவும் சர்வதேசத்தை எதிர்கொள்வதற்காக தற்போதைய அரசாங்கம் எடுக்கும் தீர்மானங்கள், முடிவுகள், எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ள செயற்பாடுகள் தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதங்களை நடத்தவேண்டியிருக்கும் என்பதோடு, பெரும்பான்மை சிங்கள மக்களின் கருத்துக்கள், எதிர்ப்புக்களையும் எதிர்கொள்ள வேண்டிய அவசியம் இருக்கின்றது.

சிங்கள மக்கள் மற்றும், சிங்கள ஊடகங்கள் நல்லிணக்கம் மற்றும் அரசியல் முரண்பாட்டுக்கு நியாயமான தீர்வுகாணப்படுவதை ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆனால் இறைமையையும், நீதியையும் இழந்து சர்வதேசத்தின் அடிமைகளாக இருந்துவிடக்கூடாது என்ற கருத்தியலைக் கொண்டிருக்கின்றனர்.

ஆகவே ஐ.நா பரபரப்புக்கள் இம்மாதம் முடிவுக்கு வந்தபிறகு, தென் இலங்கையில் தனது இரண்டாம் சுற்றுப் பரபரப்பை ஆரம்பிக்கும் என்றும், அதன்விளைவானது இலங்கை அரசுக்கு அரசியல் நெருக்கடி ஒன்றை ஏற்படுத்தக்கூடியதாகவும் இருக்கும் என்று சூழலை அவதானிப்போர் எதிர்வு கூறுகின்றனர்.

ஆகவே ஐ.நா சபையில் அமெரிக்காவின் தீர்மானத்தை இலங்கை ஏற்றுக்கொண்டிருந்தாலும், அதைநோக்கிய பயணம் கடினமானதாகவே இருக்கப்போகின்றது.



# கூர்ப்படையும் மனிதர்...





தற்போது மருத்துவ வளர்ச்சியின் உதவியுடன் இத்தொற்றுக்கள் வேகமாக பரவாமல் கட்டுப்படுத்தப்பட்டாலும் எதிர்காலத்தில் இவற்றைவிட மிக உக்கிரமான நோய்க்கிருமிகள் தோன்றுவதற்கான வாய்ப்புகள் நிறையவே உண்டு. புராதன விண்வெளி கோட்பாடாளர்கள் பூமியில் புதிதாக தோன்றும் நோய்க்கிருமிகளுக்கு காரணம் வேற்றுக்கிரகவாசிகளே என்றும் இது மனிதனது பரிணாம வளர்ச்சியை நெறிப்படுத்துவதற்கான ஒரு முயற்சியாக இருக்கலாம் அல்லது பூமியானது அவர்களால் புதிய நோய்க்கிருமிகளை பரிசோதித்து பார்ப்பதற்கான களமாக பயன்படுத்தப்படுவதாக இருக்கலாம் என அனுமானிக்கிறார்கள்.

அந்தவகையில் இரண்டு இலட்சம் ஆண்டுகளுக்கு முன் தோற்றம்பெற்ற மனித இனம் இன்றுவரை உடற்கூற்றியல்ரீதியாக பாரிய மாற்றங்கள் எதனையும் எட்டவில்லை. மனித இனத்தின் எதிர்கால பரிணாம வளர்ச்சி தொடர்பாக கருத்து தெரிவிக்கும் ஆய்வாளர்களில், தொல்லுயிரியலாளரான இயன் டெரெர்சோல் மனித இனமானது சிறிய சிறிய குழுக்களாக பிரிந்து தனிமைப்படுத்தப்படாமல் ஒன்றாக இருப்பதோடு அதற்குள் உள்ள வேறுபட்ட மனிதவர்க்கங்கள் தொடர்ச்சியாக தங்களுக்குள் இனப்பெருக்கத்தில் ஈடுபட்டுவருதால் மனித இனத்தினது மரபணுத் தொகுதியில் குறிப்பிடத்தக்க பிறழ்வுகள் ஏற்பட்டு அது நிலைத்தன்மை அடைந்து அதனூடாக மாற்றங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்பு மிக அரிதென கூறுகின்றார்.

மேலும் நவீன மருத்துவ தொழிநுட்ப உதவிகளால் சூழலுடன் ஒத்துவாழ முடியாத பலவீனமான மனிதர்களும் தமது ஆயுட்காலத்தை அதிகரித்து இனப்பெருக்கத்தில் ஈடுபடுவதால் டார்வினின் இயற்கைத் தேர்வு முறையானது நவீன மனித இனத்தினால் ஓரங்கட்டப்பட்ட ஒரு விடயமாகவேயுள்ளது. இதனால் மனிதன் மேலும் கூர்ப்படைவதற்கான வாய்ப்புகள் மிகக்குறைவென வாதிடுகிறார்.

நவீன டார்வின் கோட்பாட்டின் உருவாக்கத்தில் முக்கிய பங்கு வகித்த ஜுலியன் ஹக்ஸ்லி எனும் உயிரியலாளர் மனிதனானவன் தற்போது உடற்கூற்றியல்ரீதியாக பரிணாமவளர்ச்சியின் உச்சத்திலிருப்பதாகவும் இனிமேல் ஏற்படும் பரிணாம வளர்ச்சியானது மனம்சார்ந்ததாகவே இருக்குமெனவும் அது அடுத்தகட்ட பாய்ச்சலுக்கான வாசல்படியில் உள்ளதெனவும் கூறியுள்ளார். அந்தவகையில் மனிதன் இன்னும் சிறிதுகாலத்தில் பேர் மனம் படைத்தவனாக பரிணாம வளர்ச்சியடைய வாய்ப்புண்டு. மனவளர்ச்சி ஏற்படவேண்டுமெனில் அதற்கு மூளையும் வளர்ச்சியடைய வேண்டுமென கருதும் சில விஞ்ஞானிகள் கூர்ப்பில் மூளையின் பருமன் மும்மடங்காக அதிகரித்திருப்பதை ஆதாரம் காட்டி மேலும் மூளையின் பருமன் கூர்ப்பினூடாக அதிகரிக்கும் என எதிர்வு கூறியுள்ளனர். ஆனால் சில விஞ்ஞானிகள் அதற்கு எதிரான கருத்தை முன்வைக்கின்றார்கள்.

எவ்வாறெனில் நமது மூளையானது ஏற்கனவே உடலில் பிறப்பிக்கப்படும் சக்தியின் 20 வீதத்தினை தனது பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதாகவும் இது தனி ஒரு அங்கத்திற்கு தற்போது உள்ள மனித உடலால் வழங்கப்படக்கூடிய சக்தியின் உச்ச அளவென்பதாலும் மூளையின் பருமன் கூர்ப்பிலே மேலும் அதிகரிக்கும்போது அதன் அதிகரித்த சக்திப் பயன்பாட்டை பூர்த்திசெய்ய அதிகளவு குருதி மிக வேகமாக இருதயத்தினால் கூடிய விசையுடன் குருதிக்கலன்களினுள் வெளித்தள்ளப்படவேண்டிவருவதால் இருதயத்தின் பருமனும் அதற்கேற்றால் போல் ஏனைய உடல் அங்கங்களினது பருமனும் விருத்தியடையவேண்டும் என்கிறார்கள். அதனால் மூளையின் பருமன் மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் மிகக்குறைவு.

அத்தோடு நரம்புக்கூற்றியலாளர்கள் மனித மூளையின் பருமனுக்கும் அது கொண்டுள்ள நுண்ணறிவுக்கும் சம்பந்தமில்லையெனவும் அது மூளை எவ்வளவு வினைத்திறனாக தனது ஏனைய பகுதிகளுடன் நரம்பு கணத்தாக்கு தொடர்புகளை கொண்டுள்ளது என்பதினாலும் பெற்றுக்கொண்ட அனுபவத்தினாலுமே தீர்மானிக்கப்படுவதாக கூறுகின்றனர். இருபதாம் நூற்றாண்டின் மேதையான அல்பேர்ட் ஐன்ஸ்டீனின் மூளையை ஆராய்ந்த பேராசிரியர் சாண்ட்ரா விட்டில்சன் அவரது மூளையானது சாதாரண நுண்ணறிவுடைய மனிதன் ஒருவனின் மூளையின் பருமனை ஒத்ததாகவே இருந்ததாக கருத்து தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் நவீன மனிதனில் மூளையின் பருமனுக்கும் அதன் நுண்ணறிவுக்குமுள்ள தொடர்பை நிராகரித்த விஞ்ஞானிகள் கூடிய நுண்ணறிவுடைய மனிதர்களின் மூளையானது அதனது ஏனைய பகுதிகளுடன் மிக வின்னத்திறனாக தொடர்புபட்டிருப்பதாகவும் அவர்கள் மூளையின் அதிகளவு சதவீதத்தினைப் பாவிப்பதாகவும் கூறுகின்றனர். சராசரி மனிதன் மூளையின் 10 வீதத்தினையே பாவிக்கிறான் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

எனவே பரிணாமவளர்ச்சியில் மூளையின் 100 வீதத்தினையும் பாவிக்குமாற்றல் வரப்பெற்றவனாக மனிதன் தோற்றம்பெற வாய்ப்புண்டு. அம்மனிதன் பேர்மன ஆற்றல் படைத்தவனாக இருப்பான்.

இவ்வாறு பேர்மன ஆற்றல் பெற்ற மனிதன் தனது மனவாற்றலால் இருந்த இடத்திலிருந்து கொண்டே பல செயல்களை செய்து முடிக்கும் ஆற்றலை பெறுவதோடு புதிய புலனறிவுகளையும் கைவரப்பெறுவான். அவற்றில் முக்கியமானவையாக ரெலிபதி, ரெலிகை னெசிஸ் ரெலிரான்ஸ் போடேசன் என்பவற்றைக் கொள்ளலாம். இவ்வாற்றல்களை இன்று சில மனிதர்கள் கொண்டுள்ளார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் அது ஆரம்பநிலையில் இருப்பதாகவே விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அவை முழுமையாக விருத்தியடையின், ரெலிபதிமூலம் மனிதன் உலகின் எம்மூலையிலிருந்தாலும் தனக்கு வேண்டியவருடன் மனவாற்றல்மூலம் தொடர்பை ஏற்படுத்தமுடியும். இதனால் உலக தொலைபேசி தொடர்பாடல் முறைமை முற்றாக அழிந்துபோகலாம். எண்ணங்கள்மூலம் மனிதன் உரையாட ஆரம்பிப்பதால் மொழிக்கான தேவையும் அற்றுப்போக வாய்ப்புண்டு. இவ்வாற்றலை அதிகளவு கைவரப்பெற்றவர்கள் தமது எண்ணங்களை மற்றையவர்களின் மூளைக்குள் பலவந்தமாக புகுத்தி அவர்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரவும் இடமுண்டு. ரெலிகைனெசிஸ் மூலம் தூர இருந்துகொண்டே பொருட்களை தனது மனவாற்றலால் இயக்கும் ஆற்றல் படைத்தவனாக இருப்பான்.

அதன்போது அவன் கால-வெளி எல்லைகளைக் கடந்தவனாகவும் இருப்பான். மேலும் மனிதன் தனது பேர்மனத்தின் உதவியுடன் அட்டமா சித்திகள் அனைத்தையும் கைவரப்பெற்று அதனை அநாயசமாக பாவிக்கும் ஆற்றல் கொண்டவனாக தோற்றம்பெறும் சாத்தியப்பாடுகளும் நிறையவேயுண்டு.


இயற்கைத்தேர்வினூடாக மெதுவாக நடைபெறும் கூர்ப்புச் செயன்முறையானது பல்வேறுபட்ட தொழிநுட்பங்களுடன்கூடிய மனித தலையீடுகள் காரணமாக எதிர்காலத்தில் எவ்வாறு, எத்திசையில் பயணிக்கும் என்பதை யாராலும் அறுதியிட்டுக் கூறமுடியாதுள்ளது. இந்தவகையில் பரிணாமவளர்ச்சியின் போக்கை மாற்றக்கூடிய ஆற்றல் கொண்ட தொழிநுட்பங்களாக மரபணுப் பொறியியல் செயற்கை நுண்ணறிவு படியாக்கம் நனோ தொழிநுட்பம் எந்திர அறிவியல் போன்றன கருதப்படுகின்றன.

இருபது வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற மனித மரபணு கருத்திட்டம்மூலம் மனிதனது 23 நிறமூர்த்த சோடிகளிலும் உள்ள DNA களில் காணப்படும் மரபணுக்கள் பற்றிய தகவல்கள் திரட்டப்பட்டன. இதன்மூலம் ஒவ்வொரு மரபணுவும் உடலின் எத்தகைய தொழிற்பாட்டில் பங்குபற்றுகின்றது என அறியப்பட்டது. இதில் முக்கியமானது பரம்பரையாக கடத்தப்படும் நோய்களுக்கு காரணமான மரபணுக்களையும் கல வயதாதலை கட்டுப்படுத்தும் மரபணுக்களையும் கண்டறிந்ததே. இம்மரபணுக்களை மரபணுப் பொறியியல் முறைமூலம் அகற்றிவிட்டு ஒரு மனிதனை உருவாக்கும்போது அவன் பல பரம்பரைநோய்கள் அற்றவனாகவும் ஆயிரம் வருடங்களுக்குமேல் உயிர் வாழ்பவனாகவும் இருப்பான். மேலும் இம்முறை யால் நுண்ணறிவையும் அதிகரித்துக் கொள்ளலாம் எனக் கருதப்பட்டது. ஆனால் ஒப்பீட்டளவில் இது ஒரு மெதுவான செயன்முறையாகும்.

தொழிநுட்ப உதவிகளோடு மனிதனது அறிவு, உடல், உளசார்ந்த திறன்களை அதிகரித்து இறுதியில் அமரத்துவத்தை அடையலாம் என்பது பற்றிய கருத்தை முன்வைக்கிறது. இந்தவகையில் நுண்ணறிவை அதிகரிக்க முயலும் மனிதன் இலத்திரனியல், நனோ தொழிநுட்பம் போன்றவற்றின் உதவியுடன் சிலிக்கானால் ஆக்கப்பட்ட மூளை மேம்பாடுகளை மூளையில் பொருத்தி பாவிக்க தொடங்கும்போது அவன் HOMO CYBERNETICUS என்ற புதிய இனமாக தோற்றம் பெறுவான். மனிதன் இயந்திரமாக மாறும் காலகட்டத்தில் ஏற்படும் சில தவறுகள் மனிதகுலத்தை அடியோடு அழிப்பதற்கும் வழிவகுக்கும். பாரிய மாற்றங்களை எதிர்நோக்கி நிற்கின்ற இக்காலகட்டத்தில் இனம், மதம், சாதி என பல பிரிவுகளாக பிளவுபட்டு இருக்கும் நமது மனித இனமானது இக்குறுகிய நோக்குடைய சிந்தனைகளை உடைந்தெறிந்து ஒரு ஆரோக்கியமான முன்னோக்கிய பாய்ச்சலுக்கு தன்னை தயார்ப்படுத்துமா? அல்லது இப்பிளவுகள் காரணமாக தன்னையே மாய்த்துக் கொள்ளுமா என பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

(முற்றும்)

# நிலமெல்லாம் இரத்தம்




172

பா.ராகவன்

அப்படியென்றால் உலகம் முழுவதுமே அமெரிக்க ஆதரவு நிலை எடுத்ததா என்றால் இல்லை. அந்தச் சந்தர்ப்பத்தில் குவைத்தை விழுங்கிய ஈராக்மீது ஒரு சர்வதேச வெறுப்பு ஏற்பட்டிருந்தது என்பது உண்மை.

அந்த வெறுப்பை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்ளவும், குவைத்துக்கு மறுவாழ்வு அளிப்பதன்மூலம் மத்தியகிழக்கில் தன்னுடைய வேர்களைப் படர விடவும் அமெரிக்கா திட்டம் சந்தேகத்தில் எப்படியாவது சதாமின் கொட்டத்தை அடக்கியாகவேண்டும் என்று அத்தனை பேருமே நினைத்தார்கள். தம்மால் முடியாத ஒரு காரியத்தை அமெரிக்கா செய்ய முன்வருகிறதென்றால், அதற்கு உதவி செய்யமுடியாவிட்டாலும் ஒதுங்கி நின்று வழிவிடுவதே சிறந்தது என்று அனைத்துத் தலைவர்களும் நினைத்தார்கள்.

இதன்மூலம் அமெரிக்கா எப்படியும் சிலபல இலாபங்களைப் பார்க்காமல் விடாது. இன்றைக்கு ஈராக்கிடமிருந்து காப்பாற்றி



தீட்டியது.

இப்படியொரு நெருக்கடியான சந்தர்ப்பத்தில், சம்பந்தமே இல்லாத பலஸ்தீனிய விடுதலை இயக்கமும் அதன் தலைவரான யசீர் அரபாத்தும் சதாம் உசேனுக்குத் தங்கள் ஆதரவைத் தெரிவித்தார்கள். யசீர் அரபாத், சதாம் உசேனைச் சந்தித்த புகைப்படம் வெளியாகி சர்வதேச மீடியாவைக் கலக்கியது. இது, பி.எல்.ஓ.மீது உலக நாடுகளுக்கு இருந்த கொஞ்சநஞ்ச அனுதாபத்தையும் சுத்தமாக வழித்துத் துடைத்துக் கழுவிக் கவிழ்த்துவிட்டது.

உலகத்தின் பார்வையில் அன்றைய திகதியில் பி.எல்.ஓ. ஒரு போராளி இயக்கம்தான். அரசியல் முகமும் கொண்டதொரு போராளி இயக்கம். ஆனால் சதாம் உசேன் என்பவர் ஒரு சாத்தானாக மட்டுமே அடையாளம் காணப்பட்டுக் கொண்டிருந்த நேரம் அது. இன்றைக்கு அத்துமீறி குவைத்தில் நுழைந்தவர், நாளை எந்த தேசத்தை வேண்டுமானாலும் அப்படி ஆக்கிரமிக்கக்கூடும் என்கிற அளிக்கும் குவைத்தை நாளை அமெரிக்காவே கபளீகரம் செய்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்பது வரைகூட மத்திய கிழக்கின் தலைவர்கள் யோசித்துவிட்டார்கள்.

ஆனால், சதாம் உசேன் என்கிற பொது எதிரி முதலில் ஒழிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் அத்தனைபேருமே கருதியதால்தான் பேசாமல் இருந்தார்கள்.

அதுவும் அப்போது அமெரிக்க அதிபர் புஷ் நடந்துகொண்ட விதத்தைக் கவனியுங்கள். நேரடியாக அமெரிக்கப் படைகளை ஈராக்கில் கொண்டுவந்து நிறுத்தாமல், "உங்கள் படைகளை ஈராக் எல்லையில் அணிவகுத்து நிறுத்துங்கள்" என்று சவுதி அரேபிய அரசுக்குக் கட்டளையிட்டது அமெரிக்கா.

"இது உங்கள் பிரச்சினை நான் உதவிசெய்ய மட்டுமே வருகிறேன்" என்றுசொல்லாமல் சொல்லும் விதம் அது. அதன்படி சவுதி அரசுதான் தன்னுடைய இராணுவத்தை முதல் முதலில் ஈராக்குக்கு எதிராக அணிவகுத்து நிறுத்தியது.

(தொடரும்)

அல்ஹாஜ் எம்.எப்.எம். இக்பால் (J.P)
யாழ்ப்பாணம்

22




# விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா

தென்னாபிரிக்காவின் தேசத் தந்தையாக மட்டுமல்லாமல், உலக மக்களின் உள்ளங்கவர் கள்வராகவும் வாழ்ந்து விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை அந்த மக்களுக்கு பெற்றுக்கொடுத்த விடுதலை வீரர் நெல்சன் மண்டேலா அவர்களின் வாழ்க்கைப் பாதையை மீண்டுமொரு தடவை புதிய சிந்தனையுடன் மீட்டுப்பார்ப்பது பொருத்தம் என்ற அனேக வாசகர்களின் வேண்டுகோளுக்கு ஏற்ப புதிய பகுதி தொடங்கப்படுகின்றது. வாசிப்பதோடு மட்டுமல்லாமல் வாசகர்கள் தமது அபிப்பிராயங்களையும் முரசுக்கு அனுப்புங்கள். அதையும் இதே பகுதியில் பிரசுரித்து அனைவரும் மகிழ்ச்சியடைவோம்.

ஜோங்கிந்தாபாவின் சகோதரர் அங்குள்ள மாஜிஸ்ட்ரேட்டிற்கு ஏற்கனவே அறிமுகமாக இருந்தபடியால் பயண உரிமம் உடனே தயாரானது. வந்த வேலை சிக்கலின்றி சுலபமாக முடியப்போகிறது என்று நினைத்து இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து புன்னகைத்துக்கொண்டனர். அவர்களது புன்னகை வெகுசீக்கிரத்திலேயே மாறப்போகிறது என்பதை பாவம் அவர்கள் அறிந்திருக்கவில்லை.

பயண உரிமத்தில் எல்லா ஆவணங்களும் பூர்த்திசெய்யப்பட்டு அரசாங்க முத்திரையும் பதித்தாகி விட்டது. இனி அதை இருவரின் கைகளிலும் ஒப்படைப்பதுதான் மாஜிஸ்ட்ரேட்டின் வேலை. அந்த தக்க தருணத்தில் மாஜிஸ்ட்ரேட்டின் உதவியாளர் வந்து அவரை பார்த்து "இந்தப் பகுதி, உம்டாடா வட்ட அலுவலகத்தின் கீழ்தான் செயற்படுகின்றது. எதற்கும் நாம் அங்குள்ள மாஜிஸ்ட்ரேட்டிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு இவர்களுக்கு உரிமத்தை வழங்குவோமே" என்று ஆலோசனை கூறியவுடன்



மாஜிஸ்ட்ரேட்டும் நல்ல யோசனை என்றுகூறி தொலைபேசி எண்களை அழுத்தத் தொடங்கினார். மண்டேலாவுக்கும் ஜஸ்டிஸுக்கும் பயத்தால் வியர்க்கத் தொடங்கிவிட்டது. தொலைபேசியின் மறுமுனையிலிருந்து "ஆம், கொடுத்துவிடுங்களேன். எத்தனை பேர்?" என்று பதில் வர இங்குள்ள மாஜிஸ்ட்ரேட் "இரண்டு இளைஞர்கள் ஜோங்கிந்தாபாவின் பிள்ளைகள்" என்று பதில் கூறியவுடன் தொலைபேசியின் மறுமுனையிலிருந்து "அட, ஜோங்கிந்தாபா அரசரின் பிள்ளைகளா? அரசர் இப்போது என்னுடன் கதைத்துக் கொண்டு என் அருகில்தான் இருக்கிறார். அவருடன் பேசுகிறீர்களா?" என்று தொலைபேசியின் மறுமுனையிலிருந்து பதில்வந்ததும், மண்டேலாவும் ஜஸ்டிஸும் அதிர்ந்துபோனார்கள். இருவரும் இதை கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை. பயத்தில் என்ன செய்வது ஏது செய்வதென்று தெரியாமல் திக்குமுக்காடினர்.

ஜோங்கிந்தாவின் ஒரு வார பயணத்தில் அவர் உம்டாடாவும் செல்லவிருக்கிறார் என்ற விஷயம் பாவம் இருவரும் அறிந்திருக்கவில்லை. அலுவல் விஷயம் பேசுவதற்காக அரசர் உம்டாடாவின் மாஜிஸ்ட்ரேட்டை சந்திக்க அங்கு சென்றிருக்கிறார். அந்த நேரம்தான் இந்த தொலைபேசி உரையாடல் நடந்துகொண்டிருந்தது.

உம்டாடா மாஜிஸ்ட்ரேட் தொலைபேசியை ஜோங்கிந்தாபாவின் கையில் கொடுத்து விஷயத்தை அவருக்கு சொன்னதும் சிலநிமிடங்களில் ஜோங்கிந்தாவின் முகம் சிவந்துவிட்டது. அவர் அங்கே கோபத்தில் கத்தியது இங்கே தொலைபேசியில் இவர்களுக்கு தெளிவாகக் கேட்டது. "உடனே இருவரையும் கைது செய்யுங்கள், தப்பிக்கவிடாதீர்கள், நம்பிக்கை துரோகிகள், என்னை ஏமாற்றிவிட்டு அங்கேயா வந்திருக்கிறார்கள். கைது செய்து கூண்டில் அடையுங்கள்" என்று சினத்தில் சீறிப்பாய்ந்தார். இங்குள்ள மாஜிஸ்ட்ரேட் கொதித்து போய் இருவரையும் முறைத்து பார்த்து விட்டு "பொய்யர்களே, தந்தையை ஏமாற்றிவிட்டு நாடகமா ஆடுகிறீர்கள்?

(தொடரும்)



# தூர்ந்து போன காகித ஆலை!

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

முன்னரெல்லாம் ஒரு சிறந்த, நேர்த்தியான, சுறுசுறுப்பான, இயற்கை எழில் மாறாமல் பராமரிக்கப்பட்ட தொழிற்சாலையாக இயங்கிவந்த வாழைச்சேனை கடதாசி ஆலை இப்பொழுது பார்ப்பதற்கு மயானம்போல் காட்சி தருகின்றது.

தொழிற்சாலையின் பாரிய உற்பத்திக் கட்டடங்கள் இடித்து நொருக்கப்பட்டு சேதமடைந்து கிடக்கின்றன. ஆயிரக் கணக்கான குடும்பங்களுக்கு வாழ்வளித்த இந்த காகித ஆலை இப்பொழுது நாற்புறமும் காடுமண்டிக் கிடக்கின்றது.

ஆலையின் கட்டிடங்களில் குரங்குகள் ஆயாசமாய் சுற்றித் திரிகின்றன. அதன் கீழேதான் தற்போது மீதப்பட்டிருக்கும் தொழிலாளர்கள் தமது போராட்டத்தை முன்னெடுக்கின்றார்கள்.

இந்த ஆலையின் உயர் நிருவாகப் பணிகளில் நியமிக்கப்பட்டிருந்தோர் ஆட்சியாளர்களின் அதிகார அனுசரணையில் அளவுக்கதிகமாக ஊழல் புரிந்திருக்கின்றார்கள் என்று தற்போது தமது சம்பளத்துக்காகப் போராட்டம் நடத்தும் ஆலை ஊழியர்கள் கூறுகின்றனர்.

அதற்கு ஆதாரமாக இங்கு இடம் பெற்ற பல சம்பவங்களை அவர்கள் அடுக்கிக்கொண்டு போகின்றார்கள். இந்த உற்பத்தி ஆலையின் இயந்திராதிகளும் இரும்புக் கம்பிகளும்கூட ஆலை உயரதிகாரியால் விற்பனை செய்யப்பட்டு பணம் சுருட்டப்பட்டிருக்கின்றது.

இந்தப் பணம் ஒரு சில ஆயிரம்கள் அல்ல. கழிவு இரும்பு விற்ற பணம் சுமார் 4 கோடி ரூபாவைத் தாண்டுகிறது என்று ஆலை ஊழியர்கள் தெரிவிக்கின்றார்கள்.

இந்தப் பணத்தைக் கொண்டு இலங்கை மின்சார சபைக்குச் செலுத்த வேண்டிய நிலுவையைச் செலுத்தி விடுவதாகவும் உறுதியளிக்கப்பட்டதாக இலங்கை மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். ஆனால் அந்தப் பணம் எங்கோ சென்று மறைந்துவிட்டது.

கடைசியில் இலங்கை மின்சார சபைக்கு காகித ஆலையினால் செலுத்த வேண்டிய பாக்கிப் பணம் 35 கோடியை எட்டியிருக்கின்றது.

ஆலை பணியாளர்கள் இப்பொழுது ஊழியமின்றியும் ஊதியமின்றியும் தவிக்கின்றனர். ஊழலுக்கு முடிவு வேண்டும் என்பதை நாடும் நாமும் எதிர்பார்த்து நிற்கும் இவ்வேளையில் இந்த மிகப்பெரிய ஊழல் விவகாரம் மறைக்கப்பட்டு விடக்கூடாது என்று பாதிக்கப்பட்டோர் வலியுறுத்துகின்றனர். அவர்களுக்கு வழங்கப்படவேண்டிய 5 மாத ஊதியத்தை வழங்குமாறு கோரி வாழைச்சேனை கடதாசி ஆலை ஊழியர்கள் மார்ச் 16ஆம் திகதியிலிருந்து 16 நாட்களாக எதிர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டு வந்திருந்தனர்.

கைத்தொழில்துறை அமைச்சின் செயலாளருடன் வாழைச்சேனை காகித ஆலையின் தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் ஆலையின் உயரதிகாரிகள் ஆகியோர் கடந்த ஏப்ரல் முதலாம் திகதி கொழும்பில் பேச்சுவார்த்தை நடத்தியதன் பயனாக மூன்று மாத சம்பளம் கடந்த 02.04.2015 அன்று வழங்கப்பட்டதை அடுத்து, அங்கு பணிபுரிந்த ஊழியர்கள் 16 நாட்களாக இடையறாது நடத்திவந்த எதிர்ப்பு நடவடிக்கை தற்காலிகமாக முடிவுக்கு வந்தது.

கிழக்கிலங்கை கடதாசி ஆலை என்று முன்னர் அழைக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை நெஷனல் பேப்பர் கம்பனி லிமிட்டெட்டில் கடமையாற்றும் ஊழியர்கள் தங்களது 5 மாத சம்பளத்தைக்கேட்டு வீதிக்கு வந்து, கூடாரமடித்து தங்கியிருந்து சுழற்சி முறை உண்ணாவிரதத்தை ஆரம்பித்திருந்தனர்.

கொழும்பு மட்டக்களப்பு நெடுஞ் சாலையிலேயே இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. குறைந்தபட்சம் அக்கறையுள்ள வழிப்போக்கர்களின் கண்ணிலாவது தமது துயரங்கள் கரிசனைக்கு வரட்டும் என்பதே இவ்வாறு இந்தப் போராட்டத்தை தெருவுக்கு இழுத்து வந்ததன் பிரதான நோக்கமாகும் என்று போராட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

மார்ச் 31ஆம் திகதி அந்த ஊழியர்கள் ஆலையின் முன்னால் டயர் போட்டு எரித்து, கூரைமீதேறி நின்றுகூவி ஆர்ப்பாட்டம் செய்திருந்தார்கள்.

இங்கு கடமையாற்றும் பல்வேறு படித்தரங்களிலுள்ள 154 ஊழியர்களினதும் ஐந்து மாத சம்பளம், ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி என்பன நிருவாகத்தினரால் வழங்கப்படவில்லை என்பதே ஆலை ஊழியர்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டுவந்த போராட்டித்திற்குக் காரணமாகும்.

சிறுபான்மையினர் கடமைபுரியும் வாழைச்சேனை கடதாசி ஆலை ஊழியர்கள் இனவாத நோக்கில் புறக்கணிக்கப்படுவதாகவும் ஊழியர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

இதன்படி கடந்த 2014ஆம் ஆண்டில் மார்ச், ஏப்ரல் மாதங்களுக்குரிய சம்பளமும், நடப்பாண்டான 2015இல் ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களுக்குரியதுமாக மொத்தம் ஐந்து மாதச் சம்பளம் வழங்கப்பட்டிருக்கவில்லை.

இதனிடையே கடந்த 2012ஆம் ஆண்டில் இருந்து தமது சம்பளப் பணத்திலிருந்து ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி ஆகியவற்றுக்கான கொடுப்பனவுகள் கழிக்கப்பட்டிருக்கின்றபோதும் அது தமது ஊழியர் சேமலாப நிதியத்திற்கு இன்னமும் செலுத்தப்படவில்லை என்றும் போராட்டக்காரர்களான ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறிருக்க, கடந்த வாரமும் வாழைச்சேனை காகித ஆலை ஊழியர்கள் தமது 2015ஆம் ஆண்டின் ஜூலை, ஓகஸ்ட், செப்ரெம்பெர் மாதங்களுக்கான சம்பளத்தைக் கோரி மீண்டும் போராட்டத்தில் இறங்கினர்.

அதன்பின்னர், அமைச்சர் றிஸாத் பதியுதீனின் முயற்சியால் அந்தக் கொடுபடாத சம்பளம் வழங்க ஏற்பாடு செய்யப்படுவதாகக் கிடைத்த வாக்குறுதியை அடுத்து போராட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. இதனிடையயே 2015, பெப்ரவரி 09ஆம் திகதியிலிருந்து மேற்படி கடதாசி ஆலைக்கான மின்விநியோகத்தை இலங்கை மின்சார சபை துண்டித்துள்ளது.

வாழைச்சேனை காகித ஆலை சார்பாக இலங்கை மின்சார சபைக்குச் செலுத்த வேண்டிய நிலுவைப் பணம் 35 கோடி 20 இலட்சம் ரூபாய் செலுத்தப்படாததே மின் துண்டிப்புக்குக் காரணம் என்று இலங்கை மின்சார சபையின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதனால் அங்கு தற்போது எந்தவிதமான உற்பத்தி நடவடிக்கையும் இன்றி ஆலை இருளில் மூழ்கியுள்ளது. நல்ல வேளையாக ஆலை உற்பத்திகள் நிறுத்தப்பட்டபின்னர் வாகனேரிக் குளத்திலிருந்து ஆலையின் நீர்க்குழாய் வழியாக நீரைப்பெற்று பாசிக்குடாவிலுள்ள உல்லாச விடுதிகளுக்கு அந்நீரை வழங்கும் இலங்கை ஹொட்டேல் கோபரேஸன் வாழைச்சேனை கடதாசி ஆலை ஊழியர்களுக்கு கொஞ்சம் தண்ணீரையும் மின்சாரத்தையும் வழங்குகிறது. இல்லையேல் வாழைச்சேனை ஊழியர்கள் குடிநீரின்றியும் மின்விசிறி வசதியின்றியும் அவஸ்தைப்பட வேண்டியிருந்திருக்கும்.

இது ஒருபுறமிருக்க, வாழைச்சேனை ஆலை நிருவாகம் ஓட்டமாவடி பிரதேச சபைக்கு ஒரு கோடி ரூபாவுக்கு மேல் சோலை வரி செலுத்தாமல் இருந்து வந்துள்ளது என்ற விடயமும் இப்பொழுது தெரியவந்துள்ளது.

வாழைச்சேனை ஆலைக்கு உமி வழங்கிய ஒரு தனியார் ஒப்பந்தக்காரருக்கு வாழைச்சேனை ஆலை நிருவாகம் 25 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் தரவேண்டும் என்றும் கழிவு இரும்பு தருவதாகக்கூறி தன்னிடம் வாழைச்சேனை காகித ஆலை நிருவாகத்தினால் 10 இலட்ச ரூபாய் மோசடி செய்துள்ளதாக அரிசி ஆலை உரிமையாளரான என்.நாஸர் தெரிவித்தார்.

இதுகுறித்து தான் அமைச்சர் றிஸாத் பதியுதீனிடம் புகார் கொடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். ஆலை நிருவாக உயரதிகாரி ஆலைக்குச் சொந்தமான 115 ஆலை உற்பத்தி இயக்கு மோட்டார்களை களவாக எடுத்துச் செல்லும்போது பிடிபட்டு அது சம்பந்தமான வழக்கு இன்னமும் நிலுவையிலுள்ளது.

கோடானகோடி ஊழல் இடம்பெற்ற இந்த விவகாரங்களையெல்லாம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹவின் கவனத்திற்குத் உடனடியாகக்கொண்டு செல்ல உதவி புரியவேண்டும் என்று போராட்டக்காரர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இலங்கையின் மிகப்பெரிய கடதாசி உற்பத்தித் தொழிற்சாலையாக வாழைச்சேனை கடதாசி ஆலை முன்னொரு காலத்தில் இயங்கிவந்தது. அங்கு மூவாயிரத்துக்கும் அதிகமானோர் பயங்கரவாதம் நிலவிய காலத்திலும்கூட கடமையாற்றினர்.

ஆனால் பின்னாட்களில் பெரும்பாலானோர் சுயவிருப்பத்தின் அடிப்படையில் விலக்கப்பட்டுவிட்டனர். தற்சமயம் இயங்காமல் இருக்கும் இந்த கடதாசி உற்பத்தித் தொழிற்சாலையில் 139 ஊழியர்கள் மாத்திரமே மீதப்பட்டுள்ளனர்.

இதனிடையே வாழைச்சேனை கடதாசி ஆலைக்குப் பதிலாக தென்னிலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட எம்பிலிப்பிட்டிய கடதாசி உற்பத்தித் தொழிற்சாலை சகல வளங்களோடும் அபிவிருத்தி செய்யப்பட்டு சிறந்த உற்பத்தித் தொழிற்சாலையாக வளர்ச்சி கண்டுள்ளது.

அங்கு பணியிலீடுபடுவோர் அனைவரும் பெரும்பாலும் பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்தோர் என்பதால் அவர்களது நலன்கள் அதிகாரத் தரப்பினால் அக்கறையோடு கவனிக்கப்படுகின்றன என்று வாழைச்சேனை கடதாசி ஆலையில் தமது மாதாந்தச் சம்பளத்திற்கே போராட்டம் நடாத்தும் வாழைச்சேனை கடதாசி ஆலையின் சிறுபான்மைச் சமூக ஊழியர்கள் ஆதங்கப்படுகின்றனர்.



# தொடர்கிறது வன்முறைகள்...

• அளவெட்டி ப. உதயகுமார் •

வடக்கு, கிழக்கு உட்பட்ட இலங்கைத் தீவுமுழுவதும் சிறுமிகள், பெண்கள் அச்சமின்றி, பாலியல் தொல்லைகளின்றி, வாழக்கூடிய சூழ்நிலைகள் இல்லாத ஒரு நாடாக மாறிவருகின்றது.

இனம், மதம், மொழி வேறுபாடுகளின்றி சகல பகுதிகளிலும், பாலியல் கொடுமைகள் மிக வேகம் பெற்று வருகின்றன. இதனால் சிறுசுகள், பெண்கள் தனித்து இருக்கவோ, அன்றி தனித்து போய்வரவோ முடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது. இது ஒரு ஆரோக்கியமான நாட்டினை உருவாக்கத் துடிக்கும் அரசுகளுக்கு அபகீர்த்தியினை உண்டு பண்ணி வருகின்றன.

ஒரு காலமதில் வயதுக்குவந்த பெண்களுக்கே பாலியல் பயம், பாலியல் தொல்லைகள் என்பன காணப்பட்டன. ஆனால் இப்போது அதுவும் விஞ்ஞான முன்னேற்றம் அதிகரித்துக் காணப்படும் இன்றைய சூழலில் மூன்று வயது, நாலு வயது பச்சிளம் பாலகர்கள் பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாகி வருகின்றமை அதிர்ச்சித் தகவல்களாக உள்ளன. வடக்கு, மற்றும் தென்னிலங்கையில் கடந்த சில மாதங்களுக்குள் பல சின்னஞ்சிறுசுகள் மூன்று வயது, நாலு வயதுக் குழந்தைகள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டுக் கொல்லப்பட்டு உள்ளனர். இது பெரும் கொடுமை. ஒவ்வொரு இலங்கையர்களும், வெட்கித் தலைகுனியவேண்டிய சம்பவம். வயதுக்குவந்த பெண்கள் கொடுமைக்கு அதாவது பாலியல் பலாத்காரமானால் கூடத் தாங்க முடியாதநிலையே காணப்பட்டுவரும் இன்றைய சூழலில் பச்சிளம் பாலகர்கள் பாலியல் துஸ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள் என்ற செய்தி அவலம் நிறைந்த செய்திகளாகவே காணப்படுகின்றன.

அண்மையில் பாடசாலை மாணவி வித்தியா மிருகத்தனமாக பாலியல் துஸ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்தினை தமிழ், சிங்கள, முஸ்லிம் தேசமெங்கும் கண்டித்து ஆர்ப்பாட்டங்கள் செய்தனர்.

நீதியின் பிறப்பிடமாக, நீதி தேவதை குடியிருக்கும் புனித இடமான நீதி மன்றை சூழநின்று வித்தியாவுக்கு நியாயம் கேட்டனர். மக்கள் வீதிகளை மறித்துப் போராட்டங்கள் செய்தனர்.

ஆனாலும் இத்தகைய கொடுமைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சூழலில்கூட மறுபுறத்தே பல பெண்கள், சிறுமிகள் பாலியல் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றனர். இந்தக் கொடுமைகளுக்கு முடிவே இல்லையா?! இது ஒரு தொடர்கதையா? இதற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டியது யார்?

இதற்கு விடை இல்லை. இலங்கையின் மாண்புமிகு ஜனாதிபதியவர்கள், பாலியல் பலாத்காரம் உள்ளிட்ட சில சம்பவங்களுக்கு மரண தண்டனை கொண்டுவரப்படல் வேண்டும் என்றும், சாவுத் தண்டனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் பெறப்படவுள்ளது எனும் தகவலையும் வெளிக்காட்டியுள்ளார். இந்தக் கருத்தினை எல்லோரும் ஒன்றுபட்டு ஆதரவு தெரிவித்து சாவுத்தண்டனை நிறைவேற்றம் செய்யப்படல் வேண்டும்.

இத்தகைய சம்பவங்கள் நடைபெறுவதற்கு பலவகை காரணங்கள் காணப்படுகின்றன.

* வறுமை காரணமாக தாய் வெளிநாடு சென்றபின் பராமரிக்க, பாதுகாக்க சரியான உறவுகள், இல்லாமையால் சிறுமிகள் பாலியல் துன்பங்களுக்கு ஆளாகின்றனர். இவர்கள் பெற்ற தந்தை, மாமன், மச்சான், சிறிய, பெரிய தந்தைமார், அயலவர்கள் மற்றும் பராமரிப்பவர்களினால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். இப்படியான சிறுமிகள் தொடர்ச்சியான வல்லுறவுகளுக்கு உள்ளாக்கப்பட்டு வரப்படுகின்றபோதிலும் சம்பவங்கள் பெரும்பாலும் வெளிவராமலே மறைபொருளாக இருக்கின்றன.

* இன்றைய பொருளாதார சுட்டெண் அதிகரிப்பினாலும், பொருட்களின் விலை உயர்வு மற்றும் வாழ்க்கைச் சுமையினை சமாளிக்க இயலாத்தன்மையாலும் தாயும் தந்தையும் வேலைக்குப் போகும்நிலையிலே பாடசாலை விட்டுவந்து தனிமையில் நிற்கும்போது திட்டமிட்டு சிறுமிகள் வதைக்கு உள்ளாக்கப்படுகின்ற சம்பவங்கள் நடைபெறுகின்றன.

* இனிப்பு, ரொபி, கன்டோஸ் என்பவற்றினை வாங்கிக்கொடுத்து, ஏமாற்றி மறைவிடங்களுக்குக் கூட்டிச்சென்று வல்லுறவுக்கு உள்ளாக்கிவிட்டு கொலை செய்யப்படல்.

* கடத்திச் செல்லப்பட்டு பலரும் பகிர்ந்து பின் கொல்லப்படுதல். இடப்பெயர்வு முகாம்கள் மற்றும் அதிகரித்த சனத்தொகையினர் ஒன்றுகூடி இருக்கும்நிலையிலே கொடுமைகள் நடைபெறல்.

* சிறுவர் இல்லங்கள் எனும் பெயரிலே, தாய், தந்தை பாதுகாவலர்கள் அற்றவர்களை பராமரிக்கும் நிலையங்களிலும் அதிகரித்த அளவிலே சிறுவர் துஸ்பிரயோகங்கள் நடைபெற்று வருகின்றன.

* இன்னொரு வகையிலான வன்முறை யாக நெருங்கிய உறவினர்கள் அதாவது இரத்த உறவுகளினால் உள்வீட்டுக்குள் வைத்தே வன்கொடுமைகள் நடக்கின்றன. வன்கொடுமை நிறைவடைய யாருக்கும் சொல்லாதே என்று ஐம்பது, நூறு அல்லது இனிப்பு, பிஸ்கட் போன்றவற்றினை கொடுத்து குற்றச்செயல்கள் வெளியிலே வெளிவராமல் தடுத்துவருகின்றனர்.

நிலைமை இவ்வாறிருக்கும்போது, வெளிநாடுகளில் இருந்து உல்லாசப் பயணிகள் எனும் போர்வையிலே இலங்கைக்கு வரும், வந்துசேரும் உல்லாசப் பயணிகளுக்கு எமது நாட்டின் சிறுவர்கள் பாலியல் தொழிலுக்காக விற்பனை செய்யப்பட்டு வரப்படுகின்றன எனும் செய்தி நாட்டுக்கு பெரும் அபகீர்த்தியாகும். உல்லாசப் பயணிகளின் உல்லாசத் தேவைகளுக்காக ஏழைச் சிறுமிகளை உல்லாச விடுதிகளுக்கே கூட்டிச்சென்று பெரும் பணம் பெறுவதற்கென்றே இடைத்தரகர்கள் கூட்டம் இருக்கின்றன.

இப்படியான குற்றச்செயல்கள் பெரும்பாலும் தென்னிலங்கையில் உள்ள கடற்கரைகளை அண்டியுள்ள விடுதிகளிலே நடைபெறுகின்றன. கடற்கரையை அண்டியிராத வேறு பல இடங்களிலும் சிறுமிகள் விருப்பத்தின் பெயரினால் அவர்கள் நாசமாகிவருகின்றனர். இவற்றுக்கெல்லாம் வறுமையே காரணமாய் அமைகின்றது.

வறுமையினால் ஏழைச் சிறுமிகள் துஸ்பிரயோகங்களுக்கு உள்ளாகி வருவதுடன் மட்டும் குற்றச்செயல்கள் நிறைவு பெற்றுவிடுவதில்லை. பாலியல் கொடுமைகள் நடைபெறுவதனை இரகசியமாய் வீடியோ படமாக்கி அதனை அதிகளவு பணத்துக்கு விற்றும் வருகின்ற கொடுமைகள் நடைபெறுகின்றன.

ஒன்றுமே அறியாத சின்னஞ்சிறுசுகள் பூவிலே சருகாகிவிடுவதுடன் எயிட்ஸ் போன்ற கொடிய உயிர்க்கொல்லி நோய்களுக்கும் ஆளாகிவரும் நிலையும் காணப்படுகின்றன்.

இன்றைய சிறார்களே நாளைய தலைவர்களாகின்றனர். நாட்டின் நற்பெயரினை காத்துக்கொள்ள வளரவேண்டியவர்களை பாலியல் எனும் கொடுமையுடன் கொலையும் செய்துவிடுகின்றனர். எவ்வளவு தூரம் முன்னேற்றிவிட்டனர் காமுகர்கள்.

அண்மையிலே தென்னிலங்கையில் நாலரை வயதுடைய அழகிய சிறுமி ஒருத்தி பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு கழுத்து நெரித்துக்கொல்லப்பட்ட சம்பவம் முழு இலங்கையையும் வெட் கித் தலைகுனிய வைத்துள்ளது. இதைவிட அண்மையிலே கிளிநொச்சிப் பகுதியில் மூன்றரை வயதுடைய சிறுமியின் சடலம் நெல்வயலுக்குள்ளிருந்து மீட்கப்பட்டுள்ளது. இவர்கள் இருவருமே ஐந்து வயதுக்குட்பட்டவர்கள் என்பது ஒரு கொடுமையானது.

எதுவுமே புரியாத அறியாத பச்சை மண்ணுகள், இவ்வாறு கொடுமைப் படுத்துப்படுவதுடன் கொல்லப்படும் சம்பவங்களும் நடந்தேறிவருவது வார்த்தையினால் வர்ணிக்கவேமுடியாத கொடுமையாகும்.

இவற்றுக்கெல்லாம் காரணகர்த்தாவாக போதைப்பாவனையே இருக்கின்றது. இந்தப் போதை மருந்துகள், போதை மருந்துக் குளிசைகள் என்பன புதுப் புது வடிவங்களில், உருவங்களிலே வந்துசேர்வதாகத் தகவல்கள் கூறுகின்றன. இவை எல்லாம் பாடசாலை மாணவர்களையே இலக்கு வைக்கப்பட்டுவருகின்றன.

சிறந்த பொருளாதாரக் கொள்கை என்பதுபோல, திறந்த பாலியல் கொள்கைகள் இணையங்களிலே ஈடேற்றம் பெற்று வருகின்றது. கட்டுப்பாடுகள் கடல்கடந்து செல்லாக் காசாகிவிடக் தொலைபேசியும் கையுமாகத் திரிவோர் கண்ட கண்ட கீழ்த்தரமான படங்களினால் பாதை மாறிப் பயணித்து, துணிவுக்கும் தைரியத்துக்கும் போதைமருந்துகள் துணைபுரிய சிறுசுகளையும், பெண்களையும் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கிவருகின்றனர்.

கடந்த வாரம் வேலணைப் பகுதியிலே இரவுநேரம் ஆயுதங்களுடன் வீடுபுகுந்து தூக்கத்திலிருந்த இளம் பெண்ணை அதுவும் திருமணமாகி ஏழு மாதங்களேயான பெண்ணைக் கடத்திச்சென்று பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கிவிட்டு தப்பியோடியவர்களை காவல்துறை கைதுசெய்துள்ளனர்.

இவ்வாறு கைதானவர்கள் வயது குறைந்தவர்கள், கிளிநொச்சிப் பகுதியில் நெல்வயலுக்குள்ளிருந்து மீட்கப்பட்ட சிறுமியை வல்லுறவு புரிந்த 15 வயதுக்குட்பட்டவர் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

இவர்களுக்கு எங்கிருந்து துணிச்சல், தைரியம் வருகின்றது! பாலியல் தொல்லை, சேட்டைகள், வல்லுறவுகள், என்பன தினசரி நடைபெற்றவண்ணமே இருக்கின்றன. இரண்டு வயது, மூன்று வயதுடைய சிறுமிகளுக்கே இப்படியான வன்முறைகளைக் கையாளும் காமுகர்களுக்கு அரேபிய நாடுகள் வழங்கும் தண்டனைபோல கல்லெறிந்து கொல்ல சட்டம் கொண்டுவர வேண்டும் அல்லது மரண தண்டனை உடனே அமுலாக்கவேண்டும் என்று பொதுமக்கள் கோரிவருகின்றனர்.

இவ்வகையான தண்டனைகளை விட அதிகளவான தண்டனை வழங்கினால் கூட பாவமில்லை எனும் கருத்தும் நிலவிவருகின்றது. எது எப்படி அமைந்தாலும், ஒவ்வொரு பெற்றோரகளும் ஒரு வயதுக் குழந்தையைக் கூட கண்ணும் கருத்துமாக கவனித்துக் கொள்ளவேண்டும்.

இளம் பெண்களைப் பின் தொடர்வோர், அங்கச் சேஷ்டைகள் புரிபவர்களை உடனே காட்டிக்கொடுத்து கைதாக நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமானது. என்னுடைய பிள்ளை இல்லை என்றுவிட்டு அலட்சியமாக எவரும் இருந்துவிடாமல் ஒவ்வொரு குடிமகனும் கண்காணித்துக் கொள்ளப் பழகவேண்டும்.

வித்தியாவின் கொலைக்குப் பின் எவ்வளவோ போராட்டம், கதவடைப்பு ஆர்ப்பாட்டமென்றெல்லாம் நடைபெற்றபோதிலும் ஒவ்வொரு மணிநேரமும் எங்கோ ஒரு மூலையிலே பாலியல் கொடூரங்கள் நடைபெற்றவண்ணமே உள்ளன.

வன்முறைகள் தடுக்க எவருமின்றி தொடர்கதையாகிக் கொண்டுபோகின்றது. பெண்களின், குழந்தைகளின் வாழ்க்கை கேள்விக்குறியாகியுள்ளது. எனவே தொடரும் வன்முறைகளைத் தடுப்பது யார்? எனும் கேள்விக்கு விடைதெரியாத வினாவாகவே உள்ளது.

**ஐப்பசி 1 தொடக்கம் 7 வரை நடைபெறும் முதியோர் தினத்தை முன்னிட்டு சமூக சேவை திணைக்கள அரச முதியோர் இல்லம், முதியோர் தினத்தை விழிப்புணர்வு வாரமாக கொண்டாடுகின்றது.**



# மூப்பு!

மூத்த பிரஜைகளின் வாழ்வினை பின்நோக்கி திரும்பிப் பார்ப்பது இன்று வேண்டப்படும் ஒரு விடயமாக அமைந்துள்ளது. சனத்தொகையில் 20 வீதமாகவுள்ள மூத்த பிரஜைகள் இன்று பாரியள விலான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றார்கள். பூதாகரமாய்ப் போயுள்ள பிரச்சினைகளின் நிலைத்த, தன்மை நிரந்தர வைப்பிலிடப்பட்ட தன்மையை எட்டியுள்ளது.

அறுபது வயதுக்கு மேற்பட்ட முதிய வர்களை இன்று காட்சிப்பொருளாக்க பலர் முனைகிறார்கள். முதியோர் இல்லங்கள் முதியவர்களின் பிரச்சினைகளுக்கு ஓரளவு தீர்வாக அமைந்தாலும் இவை நிரந்தரமானவையல்ல. மூத்த பிரஜைகளின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அல்லது குறைப்பதற்கான பயணத்தில் அணிவகுத்துக் கொள்வதன் அவசியம் உணரப்பட்டு இருக்கின்றதா?. உணர்த்தப்பட்டு இருக்கின்றதா? வினாக்களின் நெருடல் முதியவர் ஒருவரை அரச முதியோர் இல்லத்தில் பேசவைக்கின்றது.

"தம்பி இன்றைக்கு ஐப்பசி ஒன்று" அவரது குரல்கள் தடித்து சுரமேறிக்கொள்கின்றது. கண்களின் இமைகளுக்குள் கண்ணீர் ஊற்றாகிக் கொள்கின்றது. வார்த்தைகளை கோர்வையாக்கிக் கொள்கிறார்.

எங்களை இண்டைக்கு மட்டும் நினைச்சுப் பார்க்கிறார்கள். வருடத்திற்கு ஒரு முறை இப்படி எங்களுக்கு கௌரவம் தரும் நிலையை பாருங்கோ. முன்பெல்லாம் கூட்டுக் குடும்பமாக வாழும்போது எங்களுக்கு இருந்த கௌரவமும் பாதுகாப்பும் முக்கியத்துவமும் எங்கேயோ போட்டுது. எங்களுடைய கதையை கேட்க ஆட்களில்லாமல் போச்சுது... குடும்பத்தின்ர ஆணிவேராக இருந்த முதியவர்கள் என்றநிலை இல்லாமல் போச்சுது. அவரது எண்ணங்களில் கனதி மிகுதியாக என் இருதயம் சூடேறிக் கொள்கின்றது.

கோட்டிலயும், றோட்டிலயும் குடும்ப சண்டைகள் சூடு பறக்குது. கேட்டால் வீட்டுக்கு வீடு வாசல்படி என்று சமாதானம் சொல்கிறார்கள். கணவன் -கணவனின் உறவுகளையும் மனைவி - மனைவியின் உறவுகளையும் குறைப்பதற்கு அல்லது கூட்டுவதற்கு எத்தனிக்கும்போது மூன்றாம் நபர் குடும்பத்தில் மூக்கை நுழைக்கின்றார். இதுதான் குடும்பச் சீர்குலைவின் வரவை உறுதிப்படுத்தும் முதல் சம்பவமாக அமைகின்றது. முன்பு தாலி கட்டேக்க அபசகுனம் கேட்கக் கூடாது என்பதற்காக 'கெட்டி மேளம் பலமாக ஒலிக்கும்" இன்றைக்கு வீடியோக்காரர் கொஞ்சம் பொறுங்கோ அப்படியே தாலியை பிடியுங்கோ என்ற கட்டளைகள் வந்ததாலோ, என்னவோ கன குடும்பங்கள் விவாகரத்தில் நிற்குதுகள் என்ற அவரது வார்த்தைகளில் சமூக அக்கறை அமர்ந்துகொள்கின்றது.

என்ன இன்னும் கேப்பியளோ? அவரது கேள்வியில் ஆதங்கம் தொக்கிக் கொள்கின்றது. மூத்த பிரஜைகளின் அனுபவப்பட்டறிவு என்பது சமூகத்தின் விழுமியங்களை விழுதுகளாக்கி கொள்கின்றது. சிறுவர்களும், முதியவர்களும் ஒன்று என்பார்கள். ஒரு அரசனைப்போல பிள்ளைகளை வளர்க்கிறார்கள். பிள்ளைக்கு உணவூட்டுவதற்கு எத்தனை பேர் ஈடுபடுகின்றார்கள்.

அதுபோல் படுத்த படுக்கையான முதியவர்களை பராமரிப்பதற்கு தனி நபரால் முடியாது. அரசனைப் போன்ற கௌரவம் முதியவர்களுக்கும் கிடைக்கின்றதா? அவர்களின் பராமரிப்பிலும் வினைத்திறன் தெரிகின்றதா? இவை பற்றி விடையைத் தேடுவதற்கு புலனாய்வு செய்யப்படவேண்டும். வயசான காலத்தில் எனக்கு எல்லாம் அடங்கிப்போச்சு. வாய் மட்டும் குறையேல்ல... கூறிக்கொண்டு வாய்விட்டுச் சிரித்தவாறு விடை பெற்றுக்கொண்டார் அந்த முதியவர்!

**"சமூகத்தில் வைத்து பிள்ளைகளால் அல்லது உறவுகளால் முதியவர்கள் பராமரிக்கப்படவேண்டும்"**

**"சுமையில்லாமல் முதுமையடைதலே சுகமானது"**

**"நேரிடையான எண்ணங்களால் முதுமையை புதுமையாக்குவோம்"**

**"ஆரோக்கியமான முதுமைக்கு அணி செய்வோம்"**

என்ற வாசகங்களை தாங்கியவாறு பதாதைகள் இல்லத்தில் கம்பீரமாக காற்றில் அசைந்துகொண்டிருந்தன. கைதடி அரச முதியோர் இல்லத்தில் வாழும் முதியவர்கள் அப்பதாதைகளின் கீழாக அமர்ந்து அளவளாவிக் கொண்டிருந்தனர். முதியோர் பராமரிப்பின் தேடல்களில் அவர்களது எண்ணங்கள் இறக்கை கட்டிப் பறந்து கொண்டிருந்தன.

சமூகத்தில் மூத்த பிரஜைகள் இன்று பணத்தை வைத்துக்கொண்டு கூட ஒரு நேர உணவைக்கூட வாங்கி உண்ணமுடியாமல் இருக்கின்றார்கள். அந்த உணவை நம்பிக்கையுடனும், அன்புடனும் பரிமாறிக் கொள்வதற்கு இன்று மனிதர்கள் இல்லாது போய்விட்டார்கள். முதுமையில் கொடுமை 'தனிமை' என்பார்கள். தனிமையை தாராளமாக சமூகத்தில் அமர்த்திவிட்டு அனைவரும் காணாமல் போனார் பட்டியலில் இணைந்து விட்டார்களா? முதியவர்களின் பேச்சுக்களின் மூச்சுக்களாக இந்த எண்ணமும் வீழ்படிவாகிக் கொள்கின்றது.

உறவுகள் இருந்தும், இறந்தும், பிறந்தும் இருந்தாலும் மறந்தும் தன்னம்பிக்கையை இழக்கக்கூடாது. ஒவ்வொரு உயிரினத்தையும் படைத்த இறைவன் அவர்களின் ஆத்மாக்களுக்குள்ளேயே வாழ்ந்து விடுகின்றான். முதியவர் ஒருவரின் வார்த்தைகள் என்னுள் விழிப்புணர்வு ஊர்வலமாக பயணித்துக்கொள்கின்றது.

அரசின் முதியோர் பகல் நிலையங்கள் கிராமந்தோறும் உருவாகி சமூகமயமாக்கலுடன் அந்த நிலையங்கள் உயிரூட்டப்படும் போது இந்நிலை மாறுமா? ஒத்த வயதினர் பகலில் ஒன்றுகூடி தமது அனுபவங்களை பகிர்ந்துகொண்டு சமூக மேம்பாட்டுக்கும் களம் அமைத்து முதுமையின் புதுமையான சுமைகளை அடுத்த சந்ததிக்கு பாடமாக்கிய, முன்னோக்கிய நேரிடையான தீர்வு என்ற முனைப்பான தன்மையை அந்தச் சூழல் நிறைத்துக் கொண்டது. கனதியான எண்ணங்களால் அதிர்ந்துகொண்ட சூழலை வீதியால் சென்றுகொண்டிருந்த வாகனங்களின் இரைச்சல்கள் விழுங்கித் தீர்த்துக்கொள்கின்றன.

மனநிலையால் பாதிக்கப்பட்ட முதியவர்களை வீட்டில் வைத்திருப்பதில் பாரிய இடைவெளிகள் இருக்கின்றன. வைத்தியசாலையில் அனுமதித்துவிட்டு மாயமாக மறைவது... தெருக்களில் அலைய விட்டுவிட்டு தெரியாததுபோல் நடிப்பது. வீட்டில் வைத்து சரியாக மருந்துகளை வழங்காது திகைப்பது போன்ற சமூக மேலீடுகள் மனநல காப்பகத்தின் தேவையை பிரசவித்து நிற்கின்றது. நட்புச் சூழலிலும், குடும்ப சூழலிலும் இத்தகைய தேவையின் வரவும் பதியப்பட்ட ஒன்றாக தொடர்கின்றது.

மூத்த பிரஜைகளின் பிரச்சினைகளுக்கான தீர்வு மையங்கள் தேவை. வழிகாட்டும் ஏற்பாடுகள் தேவை. முதியோர் சேவையாளர்கள் தேவை. தனிமைக்கு சுதந்திரம் அளிக்கும் கனவான்கள் தேவை.... கலந்துரையாடலின் சாராம்சம் கச்சிதமாக முன்னெழுந்து முகவுரையாகிக் கொள்கின்றது. மூத்தோரின் அங்கலாய்ப்புகள் உயிர்பெற போகின்றதா?, மரணமாக போகின்றதா? எங்களின் கரங்களில் பாரிய ஒரு சமூக பொறுப்பு தரப்படுகின்றது. இதை செய்வதற்கு சிந்தனையில் இறக்கைகள் கட்டப்பட்டு விடப்படுகின்றது. முதியவர்களின் சிந்தனை சிதறல்கள் என் எண்ணங்களை வண்ணங்களாக மாற்றிக் கொண்டது. மனதினுள் புதிய சிந்தனைகளை நிறைத்துக்கொண்டு நிமிர்ந்துகொள்கிறேன்.

"எனது பெற்றோர்கள் சிறுவயதில் இறந்தமையால் அவர்களுக்குரிய கடமைகளை செய்யமுடியவில்லை. இலலத்தில் அத்தகைய சேவைகளை எனது பெற்றோர்களை போன்ற இவர்களுக்கு ஒரு மாதம் செய்ய அனுமதி கிடைக்குமா...?" வருகை தந்திருந்த முதியவர் ஒருவரின் வேண்டுதல் என்னுள் ஊர்வலமாகிக் கொள்கின்றது. தனது முதுமையில் புதுமையான சிந்தனைகளை சுமந்துநின்ற அந்த முதியவர்


**திரு. த. கிருபாகரன்,**
அத்தியட்சகர், அரச முதியோர் இல்லம், கைதடி

என்னுள் உயர்ந்து நின்றார். ஒரு மனிதன் தொடர்ந்து கோபமாக இருக்கமுடியுமா? முடியாது. ஆனால் ஒரு மனிதன் தொடர்ந்து மகிழ்வாக இருக்கமுடியும். இதற்கு நேரான எண்ணங்களால் இதயத்தை நிரப்பிக்கொள்வது அவசியமாகிறது. இப்போது முதியோர் இல்லத்தில் அசரீதியாக ஒலித்துக்கொண்ட வார்த்தைகள் வளிமண்டலத்தை நிறைத்துக்கொண்டது போன்ற உணர்வு மேலீட்டை ஏற்படுத்திக் கொள்கின்றது. இளைஞர்கள் மத்தியில் முதுமை பற்றிய கௌரவம் முனைப்படையும்போது மூத்த பிரஜைகளின் பிரச்சினைகள் முற்றுப்புள்ளியாகிவிடும். எனவே மனிதனுக்கு மூப்பு ஆப்பு அல்ல என்ற அசத்தலான நம்பிக்கையில் என் பேனாமுனையும் ஓய்வெடுத்துக் கொள்கின்றது.



# பாப்பா முரசு

**இப்பகுதிக்கு சிறுவர்களிடம், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.**



பரமண்ணா

# “விளையும் பயிரின் முளை!”

ஆசிரியரின் அமைதியான வரவும், பரீட்சை முடிவுகளை வெளியிடுவதில் அவர் காட்டிய சுணக்கமும் மாணவர் பொறுமையைச் சோதிப்பதாகவும் அமைந்தது. அதனால் ஒரு சிலர் வெளிப்படையாகச் சலித்தும் கொண்டனர்.

ஆசிரியர் எவ்வித அவசரமும் காட்டாமல் சாவதானமாய் ஆசனத்தில் அமர்ந்து பரீட்சை முடிவுகளை வெளியிட ஆயத்தம் செய்தார். அச்சண வேளையுள் மாணவர்களது முகங்களில் எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டு மறைவதையும் ஆசிரியர் கவனிக்காமல் இல்லை.

“இந்தத் தடவை இங்கே நடைபெற்ற பரீட்சையில் மற்றெல்லா வருடங்களில் இருந்தும் சிறுமாறுதல்... ஒரு திருப்பம் ஏற்பட்டிருக்கிறதென்றுதான் சொல்லவேண்டும்...”

பரீட்சை முடிவுகளைக் கூறமுன் இவ்விதம் ஆசிரியர் பீடிகை செய்யத் தொடங்கியதுமே மாணவர் மத்தியில் உசார்நிலை தோன்றியது என்றால் அவரது கூற்றில் தொனித்த மாறுபட்ட கருத்துத்தான்.


இதுவரை காலமும் சந்திரனும் சேகரனும் முதலிரண்டு இடங்களையும் பிடித்து வந்ததில்கூட அத்திருப்பம் ஏற்பட்டிருக்கலாம் எனவும் கருதினர்.

ஆசிரியர் மேற்கொண்டு பேசப்போவதை கேட்பதற்காகக் காதுகளைக் கூர்மை ஆக்கியவர்களாய் நிமிர்ந்து அமர்ந்துகொண்டனர்.

“இந்த மாறுதல் என்னவென்றால்... கடந்த வருடங்களில் முதல் இடத்தைப் பிடித்துவந்த சந்திரனையும் முந்திக் கொண்டு சேகரன் தோற்றி இருப்பதுதான்...”

ஆசிரியர் இப்படிக் கூறி முடித்தாரோ இல்லையோ ஏனைய மாணவர் முகங்களில் ஈயாடவில்லை. இருளோடி கௌவிக்கொண்டது. சந்திரன் சேகரனைப் பார்த்துப் பூரித்தவனாகத் தட்டிக்கொடுத்தான்.

ஆசிரியர் ஏனைய முடிவுகளையும் வெளியிட்ட பின்பாகப் பருவகால விடுமுறையை அறிவித்து வகுப்பையும் கலைத்து வைத்து மாணவர்களிடம் விடைபெற்றுக் கொண்டார்.



(தொடரும்)

## வாரம் ஒரு திருக்குறள்



### அன்புடைமை

**அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்**
**மறத்திற்கும் அஃதே துணை.**

அறியாதவர், அறத்திற்கு மட்டுமே அன்பு துணையாகும் என்று கூறுவர் ; ஆராய்ந்து பார்த்தால் வீரத்திற்க்கும் அதுவே துணையாக நிற்கின்றது.

குறள் : 76

## அணுகுண்டு செய்திகள்



- அமெரிக்கா அணுகுண்டு செய்த ஆண்டு எது? 1941ம் ஆண்டு.
- அமெரிக்கா ஜப்பான் ஹிரோசிமாமீது எத்தனையாம் ஆண்டு அணுகுண்டைப்போட்டது? 16.08.1945
- உலகிலே முதல் அணுகுண்டுப் பரிசோதனை செய்யப்பட்ட இடம் எது? எப்போது நடாத்தப்பட்டது?
  அமெரிக்காவின் நியு‘மெக்சிக்கோ பாலைவனத்தில் அலமக்கோடா என்னும் இடத்தில் 16.07.1945 அதிகாலை 5.30 மணிக்கு மேற்கொள்ளப்பட்டது.
- அமெரிக்கா பரிசோதித்த அணுகுண்டின் ஒளி எத்தனை மைல்களுக்கப்பால் தெரிந்தது? 250 மைல்களுக்கப்பால்.
- அமெரிக்கா செய்த அணுகுண்டின் பெயர் என்ன? சின்னப்பையன்.
- சின்னப்பையனின் சக்தி எவ்வளவு? 20000 ரி.என்.ரி குண்டின் சக்தி.
- அமெரிக்கா ஹிரோசிமாமீது போட்ட அணுகுண்டு விமானத்தில் இருந்து நிலத்தில் விழ எவ்வளவு நேரம் எடுத்தது? 43 செக்கன்.
- அமெரிக்கா ஹிரோசிமாமீது போட்ட அணுகுண்டு ஏற்றிச்சென்ற விமானத்தின் பெயர் என்ன? அதில் சென்ற விமானி யார்? பீ 29 ரக இனோடா கிறே என்ற வான் ஊர்தி ஓட்டுனர் கேணல் ரிப்பெற்ஸ் என்பவர்.
- அணுகுண்டின் தந்தை யார்? திரு.ஒப்பன் கெய்மர்
- அணுக்கொள்கையை கண்டுபிடித்தவர் யார்? ஜோன்டால்டன்.

## பொம்மை

**பொம்மை பொம்மை பொம்மை பார்**
**புதிய புதிய பொம்மை பார்**

**கையை வீசும் பொம்மை பார்**
**கண்ணைச் சிமிட்டும் பொம்மை பார்**

**தலையை ஆட்டும் பொம்மை பார்**
**தாளம் போடும் பொம்மை பார்**

**எனக்கு கிடைத்த பொம்மை போல்**
**ஏதும் இல்லை உலகிலே.**





## இரவு விளக்குகளால் பக்க விளைவுகள்

இரவுநேரத்தில் தூங்கும்போது படுக்கை அறைகளில் குறைந்த ஒளியை உமிழும் இரவுநேர விளக்குகளை பயன்படுத்துவது பெரும்பாலானோரின் வழக்கமாக உள்ளது. ஆனால் இத்தகைய விளக்குகளால் பக்க விளைவுகள் ஏற்படும் என அமெரிக்காவில் உள்ள ஓகியோ பல்கலைக்கழகத்தின் நரம்பியல் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இரவுநேர மங்கலான அளவில் விளக்கு ஒளி இருந்தால் கூட மூளைக்குள் இரசாயன மாற்றங்களை ஏற்படுத்துவதுடன் மூளையின் கட்டமைப்புகளையும் மாற்றிவிடும் என ஆய்வறிக்கையில் கூறியுள்ளனர். குறிப்பாக குழந்தைகளின் படுக்கை அறைகளில் இத்தகைய விளக்குகள் தேவையில்லை என்ற அறிவுறுத்தி உள்ளனர். இது தொடர்பாக எலிகளை வைத்து சோதனை செய்தபோது 8 வாரங்களில் அவற்றின் மூளையில் மாற்றங்கள் ஏற்பட்டது தெரியவந்தது.

## உலகத் தந்தையர்கள்





தோமஸ் குக்



திமீத்ரி இவனோவிச் மெண்டெலீவ்.



பேடன் பவல்



கோப்பர் நிக்கஸ்




மார்க்கோனி



சேர் ஐசாக் நியூட்டன்

01. நவீன விஞ்ஞானத்தின் தந்தை – சேர் ஐசாக் நியூட்டன்.
02. சாரணியர் இயக்கத்தின் தந்தை – பேடன் பவல்.
03. நவீன சுற்றுலாவின் தந்தை – தோமஸ் குக்.
04. நவீன வானவியலின் தந்தை – நிக்கனஸ் கோப்பர் நிக்கஸ்.
05. வானொலியின் தந்தை – மார்க்கோனி.
06. எண்களின் தந்தை – பித்தாகரஸ்.
07. மருத்துவத் துறையின் தந்தை – ஹிப்போகிரட்டீஸ்.
08. ஆவர்த்தன அட்டவணையின் தந்தை – திமீத்ரி இவனோவிச் மெண்டெலீவ்.
09. ஐதரசன் குண்டின் தந்தை – எட்வேர்ட் டெல்லர்.
10. ஐக்கிய நாடுகளின் தந்தை – கோர்டல் ஹல்.
11. மரபியலின், அறிவியலின் தந்தை – கிரிகோர் ஜோஹன் மெண்டல்.



சிறந்த வர்ணந்தீட்டிப்
பரிசு பெறும்

**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிடவேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு புத்தகமொன்று பரிசாகக் காத்திருக்கிறது. அனுப்ப வேண்டிய கடைசித் திகதி: 12.10.2015

**வர்ணம் தீட்டும் போட்டி இல.1115**
**தினமுரசு வாரமலர்**
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 1115**

**எம்.இர்பான்,**
**புத்தளம் றோட், குருநாகல்.**

பரிசுக்குரியவர்: 1113

பாராட்டுக்குரியவர்கள்

01. டொ.அஸ்வின், கச்சேரி வீதி, யாழ்ப்பாணம்.
02. எம்.ரிம்லா, ரெட்பானா, விசுவமடு.
03. ஜே.சியாட், 14ஆவது வீதி, மஸ்கெலியா.
04. ர.பாபுஜி, மலபார் வீதி, கம்பளை.
05. வே.பிரசாத், காந்தி நகர், திருமலை.
06. என்.ரஞ்சித், சந்தை வீதி, புல்மோட்டை.
07. கே.நிரோசன், பரகாதெனிய, தெஹியோவிட்ட.
08. சி.பவனீதா, கல்குடா வீதி, வாழைச்சேனை.

# உண்மைத் தொடர்

## அதிர் இடி 108

"ஒன்றைப் பெறவேண்டும் என்றால் இன்னொன்றை இழந்தாகவேண்டும். இப்போது நீ உன்னைத் தருகிறாய். உன்னைப்பெற நான் என்னைத் தருகிறேன். உயர்ந்த வேலையும் தருகிறேன்!" கண்ணடித்தான். அசிங்கமாக இருந்தது அவன் செய்தது எல்லாமே.

அவனையே சகித்துக்கொண்டவள் இடிஅமீனை பகைக்க விரும்பவில்லை. தவிர அவளுக்கு கணக்கொன்றும் தீர்க்கவேண்டியிருந்தது. இடி அமீனை வைத்தே அந்த உயரதிகாரிக்குப் பாடம் புகட்டநினைத்தாள். அவன் தனக்குச் செய்த வக்கிரங்களுக்குப் பதிலடி கொடுக்க சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த தீர்மானித்தாள்.

அவளது நீண்ட யோசனையின் போது அமீன் அவளருகே வந்திருந்தான். தன் விரலைநீட்டி அவளது உதடுகளை உரசிப் பார்த்தபோதுதான், அவள் யோசனையில் இருந்து மீண்டாள்.

"என்ன யோசனை? இன்ப அதிர்ச்சியா?" என்றான். அவள் துணிந்து பொய் கூறினாள். "ஆம், இருக்காதா? நான் எங்கே? தாங்கள் எங்கே?"

அவள் பேசும்போதும் விரல்களை அவளின் உதடுகளில் இருந்து அமீன் விலக்கவில்லை. அதனால் அவன் விரல்களில் உதடுகள் அதிகம் உரசின. மென்மையான அந்த ஸ்பரிசம் அமீனை மேலும் கிளர்ச்சிகொள்ளச் செய்தது.

"நீயும் இங்கேதான், நானும் இங்கேதான். எங்கும் போகவில்லை. இனித்தான் போகவேண்டும். எங்கெங்கோ, மேலே மேலே போக வேண்டும்" என்றவன் சட்டென்று அவள் முன்பாக முழங்காலிட்டு அமர்ந்தான்.

அமர்ந்தவன் அவள் வயிற்றில் முத்தமிட்டான். அவன் கைகள் நீண்டு அவளது பின்னழகுகளில் தங்கிநின்றன.

தன் வயிற்றில் முகம் புதைத்து அவன் செய்த விஷமத்தால் அவள் சிலிர்த்துப்போனாள்.

அமீனின் தலை அவளது வயிற்றுக்கு கீழேயும் நழுவிக் கொண்டிருக்க, அமீன் காதல் லீலைகளில் ஒரு பயங்கரவாதி என்பது புரிந்தது. அவளும் அவனது செய்கைகளை ரசிக்கவும், விரும்பவும் ஆரம்பித்து, தலையை தன் கைகளால் வருடியும் கோதியும் விட்டபடி முனகினாள், முணுமுணுத்தாள்.

அன்று கட்டிலில் அவளை முழுமையாக அடைந்தபின்னரே, அன்றிரவு அவளை திருமணம் செய்துகொண்டான்.

திருமணத்திற்கு சியம்பா உட்பட முக்கியமான இராணுவ அதிகாரிகள் சிலர் மட்டுமே அழைக்கப்பட்டிருந்தனர்.

அமீனின் மனைவியரில் ஒருத்தியும் திருமணத்திற்கு வந்திருந்துதான் சியம்பா உட்பட ஏனையோரை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

"என் புது மனைவி, அதுதான் உன் சகோதரி எப்படி இருக்கிறாள்?" என்று அனைவர் முன்பாகவும் மனைவியிடம் கேட்டான் அமீன்.

அவளும், "நன்றாகத்தான் இருக்கிறாள். உங்கள் தேர்வு பிழைக்குமா என்ன? என்று கேட்டாள்.

என்ன குடும்பமடா இது? என்று சியம்பா தனக்குள் எரிந்து கொண்டாலும், வெளிக்கு ஒரு புன்னகையைக் கட்டாயமாக உதிர்ந்தார்.

அந்தத் திருமணம் நடந்து சரியாக பன்னிரண்டாவது நாள் விமான நிறுவன உயரதிகாரியை மரணம் தேடி வந்தது. அமீனிடம் அந்த அதிகாரி தன்னை அடைய ஆசைப்பட்டதாகவும், அதுமுடியாததால் இப்போதும் நாக்கை தொங்கப் போட்டுக்கொண்டு அலைவதாகவும் அவள் கூறினாள்.

தன்னுடன் அவன் உறவு கொண்டதை மறைத்துவிட்டாள். ஏனோ அதனை அமீனிடம் கூற அவளுக்குத் தோன்றவில்லை.

புது மனைவி, இளம் மனைவி, அவள் ஆசையை நிறைவேற்றாமல் இருப்பானா அமீன்?

தன் ஆட்களை அனுப்பி உயரதிகாரியை தீர்த்துக் கட்டினான். நிறுவனத்தில் இருந்த பணமும் கொள்ளையிடப்பட்டது.

"கொள்ளையர்கள் கைவரிசை, எதிர்க்க முற்பட்ட அதிகாரியை சுட்டுக்கொன்றனர்!" என்றுதான் செய்திகள் வெளியாகின.


"முஸ்லிம் தீவிரவாத சக்திகள் அரசை ஆட்டிப்படைக்க நினைக்கின்றன. அவர்கள் தலையெடுப்பதை அதிபர் அவர்கள் தடுத்து நிறுத்த வேண்டும்" என்று கிறிஸ்தவ பிரமுகர்கள் இருவர் காட்டமாக அறிக்கை கொடுத்திருந்தனர்.

அறிக்கை கொடுத்தவர்களுக்கு தலா ஐம்பதாயிரம் ரூபாய் அனுப்பி வைத்தான் அமீன். முஸ்லிம் தீவிரவாதிகள்தான் அமீனை நிர்ப்பந்திக்கிறார்கள். அமீன் நல்லவன்தான். இன, மத பேதங்களுக்கு அப்பாற்பட்டவன் தான் என்று மக்களை நம்ப வைக்கத்தான் அந்த அறிக்கைகள்.

முஸ்லிம் தீவிரவாதிகள் என்று யாருமே கிடையாது. அமீன்தான் முஸ்லிம் பிரமுகர்கள் சிலரை அழைத்து விஷயோசனைகளைத் தூவிவிட்டான்.

"உகண்டாவை முஸ்லிம் நாடாக மாற்றவேண்டும் என்று பத்திரிகைகளுக்குக் கடிதம் எழுதுங்கள். கட்டுரைகள் எழுதுங்கள். முடிந்தால் சுவரொட்டிகளும் ஒட்டுங்கள்" என்று பணம்கொடுத்து அனுப்பினான்.

அவ்வாறே செய்யப்பட்டதால் முஸ்லிம் தீவிரவாதிகள் உருவாகிவிட்டதாக ஒரு தோற்றம் ஏற்பட்டிருந்தது. "எத்தகைய மத தீவிரவாதங்களுக்கும் உகண்டா அரசு இடமளிக்காது! எந்த மதத்தினருக்கும் தீங்கு இழைக்க நான் அனுமதிக்கமாட்டேன்!' என்று இடி அமீன் பத்திரிகை ஒன்றுக்குப் பேட்டியளித்தான். **(தொடரும்...)**



"நீயும் இங்கேதான், நானும் இங்கேதான். எங்கும் போகவில்லை. இனித்தான் போக வேண்டும். எங்கெங்கோ, மேலே மேலே போக வேண்டும்" என்றவன் சட்டென்று அவள் முன்பாக முழங்காலிட்டு அமர்ந்தான். அமர்ந்தவன் அவள் வயிற்றில் முத்தமிட்டான். அவன் கைகள் நீண்டு அவளது பின்னழகுகளில் தங்கிநின்றன.

# இடி அமீன்

---

**வாசக நெஞ்சங்களே! உங்கள் சிந்தனைக்குத் தீனிபோடும் வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன் பங்குகொண்டு பரிசுகளையும், பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.**

# முரசு குறுக்கெழுத்துப் போட்டி

## குறுக்கெழுத்துப் போட்டி - 644

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | | 21 | 22 | 23 | 24 |
| 25 | | 27 | 28 | 29 | |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 |

## குறுக்கெழுத்துப் போட்டி 642 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 நீ | 2 தி | 3 ம | 4 ன் | 5 ற | 6 ம் |
| 7 ர் | 8 வா | 9 னோ | | 11 ம | 12 கி |
| 13 க் | 14 த | 15 ர | 16 கு | | 18 ர |
| 19 கா | 20 ந் | 21 தி | 22 மா | 23 ன் | |
| 25 க | 26 ன | 27 ய | 28 ர் | 29 டி | 30 ன் |
| 31 ம் | 32 ஆ | 33 ம் | 34 ல | 35 பு | |

### மேலிருந்து கீழ்

01. கருமங்கள் செய்யும்போது இலகுவாக எமக்கு அமைந்துவிடுவதை இப்படிச் சொல்வர்.
02. சித்திரப்பாவை. துரோபதி. (கடைசி எழுத்து விடுபட்டு குழம்பியுள்ளது)
03. அன்னதானம். அறிவுத்தானம் என்ற வரிசையில் இதுவும் ஒன்று. (குழம்பியுள்ளது)
04. கட்டாயம். (குழம்பியுள்ளது)
06. ஓர் இராசி. (திரும்பியுள்ளது)
17. குமரி. பருவ மாது.

### இடமிருந்து வலம்

01. பிரகாஸ்ராஜ் நடிப்பில் தேசிய விருது பெற்ற ஒரு தமிழ் சினிமா படம்.
07. காலின் வெடிப்பு. பித்தவெடிப்பு (குழம்பியுள்ளது)
13. அந்தி மாலைப்பொழுது. (குழம்பியுள்ளது)
21. மயக்கம். தேவன்.
27. கோழை. காசநோய். (திரும்பியுள்ளது)
31. திரிகாலம். முக்காலம். (குழம்பியுள்ளது)
35. ஒப்பு. சம்மதிக் குறிப்பு (திரும்பியுள்ளது)

### போட்டி விதிகள்:

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **12.10.2015** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்பவேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல - **644**
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-167, யாழ்ப்பாணம்.
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக. சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு, அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

**குறுக்கெழுத்துப் போட்டி இல.642 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

ம.சர்வேந்திரன்,
சலங்கண்டி தோட்டம், டிக்கோயா.

**பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.**

01. கு.ஜெயப்பிரதா, குருநாகல் வீதி, சிலாபம்.
02. எம்.நந்தன், வெட்டுவாய்க்கால் வீதி, காரைதீவு -12
03. த.காவியா, தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரி.
04. ஆர்.திலகம், பழைய கல்குளி வீதி, கல்கிசை.
05. என்.நிசாந்தன், வாசல வீதி, கொட்டாஞ்சேனை,
06. எம்.நசார், 5ஆம் வட்டாரம், சம்பூர்.
07. என்.கெனடி, அம்பாறை வீதி, மல்வத்தை.
08. து.சாளினி, கிறிநொச்சி, பரந்தன்.
09. எஸ்.பெவன், கடற்கரை வீதி, மன்னார்.
10. எம்.எலன் கார்த்தி, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

# கதாநாயகிகள் மத்தியில் கடும் போட்டி-தமன்னா

திரையுலகில் நிறைய புதுமுக நடிகைகள் வருகிறார்கள். சம்பள விவகாரம், கால்ஷீட் பிரச்சினை போன்றவற்றால் டைரக்டர்களும் புதுமுகங்களுக்கே வாய்ப்பளிக்கின்றனர். முன்னணி கதாநாயகர்களும், இளம் நடிகைகளுடன் ஜோடிசேர ஆர்வம் காட்டுகின்றனர். இதனால் பிரபல நடிகைகள் அக்காள், அண்ணி வேடங்களுக்கு தள்ளப்படுகின்றனர். நயன்தாரா, திரிஷா போன்ற சில நடிகைகள் மட்டுமே 10 வருடங்களை தாண்டியும் மார்க்கெட்டை தக்க வைத்துக்கொண்டு உள்ளனர். அவர்களும் காதல் படங்களுக்கு பொருத்தம் இல்லை என்று ஒதுக்கப்பட்டு பேய் படங்களில் நடித்துவருகின்றனர். திரையுலகின் இந்த போக்கு பற்றி நடிகை தமன்னா கருத்து தெரிவித்து உள்ளார். அவர் கூறியதாவது:-

“சினிமாவில் நடிகைகளின் மார்க்கெட் கொஞ்சக்காலம்தான். முந்தைய காலங்களில் கதாநாயகிகள் குறைவாக இருந்தனர். போட்டியும் இல்லாமல் இருந்தது. இதனால் அவர்கள் கதாநாயகிகளாக அதிக காலம் நீடித்தனர். ஆனால் இப்போது அப்படி இல்லை. புதுமுக நடிகைகள் நிறையப்பேர் வந்தவண்ணம் இருக்கிறார்கள். போட்டியும் கடுமையாக இருக்கிறது.

எனவே, கதாநாயகியாக நிலைத்து நிற்பது சுலபம் அல்ல. இந்த போட்டியிலும் நீடிக்கவேண்டும் என்றால் கதாநாயகிகள் இன்னும் தங்களை திறமையாளர்களாக வளர்த்துக்கொள்ளவேண்டும். இப்போதைய காலகட்டத்துக்கு ஏற்ப தங்களை புதிதாக மாற்றிக்கொள்ளவும் வேண்டும். நான் பாகுபலி படத்தில் அப்படித்தான் என்னை வெளிப்படுத்தினேன். அது அற்புதமான படம். எப்போதாவதுதான் அதுமாதிரி படம் அமையும். இதுபோன்ற நல்ல படங்களுக்காக காத்து இருக்கிறேன், நல்ல படங்களில் நான் இருக்கவேண்டும். அதுமாதிரி கதைகளை தேர்வு செய்கிறேன் இவ்வாறு தமன்னா கூறினார்.





# விக்ரமுடன் மோதும் டார்லிங் 2



கடந்த வருடம் வெளியாகி படங்களில் சூப்பர் ஹிட்டான படம் டார்லிங். இதில் ஜி.வி.பிரகாஷ் நாயகனாகவும் நிக்கி கல்ராணி நாயகியாகவும் நடித்திருந்தார்கள். இப்படத்தை ஞானவேல் ராஜா தயாரித்திருந்தார். தற்போது இப்படத்தின் தலைப்பு இன்னொரு படத்தின் வெற்றிக்கு வழிவகுக்க இருக்கிறது.

கலையரசன், ரமீஸ் ராஜா, மாயா, காளி வெங்கட், அர்ஜவூன், முனீஸ்காந்த், மெட்ராஸ் ஜானி ஆகியோர் நடிப்பில் உருவாகியிருக்கும் படத்துக்கு டார்லிங் -2 எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. டார்லிங் முதல் பாகத்தை தயாரித்த ஞானவேல் ராஜா இந்தப் படத்தை வெளியிடுவது குறிப்பிடத்தக்கது. சதீஷ் சந்திரசேகரின் இயக்கத்தில் உருவாகியிருக்கும் இந்தப் படத்துக்கு முதலில் ஜின் எனப்பெயரிடப்பட்டு இருந்தது.

இதுகுறித்து சதீஷ் சந்திரசேகர் கூறும்போது, இரண்டாம் பாகம் என்பது முதல் பாகத்தின் தொடர்ச்சியாகதான் இருக்கவேண்டும் என்பது கட்டாயமில்லை. அதே நடிகரோ, அதே இயக்குனராக இருக்கவும் வேண்டாம். முந்தைய பாகத்தின் கதை கருவை ஒட்டிய கதைதான் இரண்டாவது பாகத்துக்கு மிக முக்கியம். ஐந்து நபர்கள் சுற்றுலா செல்லும்போது, அவர்களுடன் அழையாவிருந்தாளியாக வரும் ஒரு ஆவி அவர்களிடையே ஏற்படுத்தும் குழப்பத்தை, நகைச்சுவையுடன், காதலும் கலந்து கொடுத்திருக்கிறார் இயக்குனர் சதீஷ் சந்திரசேகர்.

இந்தக் கதைக்கு டார்லிங் -2 தலைப்பு நன்றாக இருக்கும் என்பதை படம் பார்த்த ஒரு நொடியில் தீரமானித்தேன். ஒக்டோபர் மாதம் 21ம் திகதி வெளிவர உள்ள டார்லிங் -2 அனைத்து தரப்பு மக்களையும் சென்று அடையும் என்பதுல் சந்தேகமே இல்லை என்றார் ஞானவேல் ராஜா.

இப்படம் வெளியாகும் அதே திகதியில் விக்ரம் நடிப்பில் உருவாகியுள்ள பத்து எண்றதுக்குள்ள படம் வெளியாக உள்ளது. ஐ படத்திற்குப் பிறகு விக்ரம் நடிப்பில் இப்படம் வெளியாவதால் ரசிகர்கள் மத்தியில் பலத்த எதிர்பார்ப்பு நிலவி இருக்கிறது. இவ்விரு படங்கள் ஒரே நாளில் வெளியாவதால் ரசிகர்கள் அதிகம் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

# 150 தியேட்டர்களில் உனக்கென்ன வேணும் சொல்லு

ஸ்ரீநாத் ராமலிங்கம் இயக்கத்தில் உருவாகியுள்ள படம், உனக்கென்ன வேணும் சொல்லு. சிங்கப்பூர்-தமிழ்நாட்டை சேர்ந்த 2 குடும்பங்களிடையே பல்வேறு அதிசய சம்பவங்கள், தந்தை-மகள் உறவை மையப்படுத்தி உருவாகியிருக்கும் இந்த படம் சென்னை, மைசூர் மற்றும் கேரளா 150 தியேட்டர்களில் வெளியாகியது. சிங்கப்பூரிலும் வெளியாகிவிட்டது. இதுதவிர தெலுங்கில் டப்பிங் செய்து ஆந்திராவில் ரிலீஸ் செய்ய உள்ளனர்.

இப்படத்தில் தீபக் பரமேஷ் நாயகனாகவும், ஜாக்லின் பிரகாஷ் நாயகியாகவும் அறிமுகமாகிறார்கள். இவர்களுடன் சிங்கப்பூர் குணாளன் மோகன், மோர்ணா அனிதா ஆகியோரும் நடித்துள்ளனர். முக்கிய கதாபாத்திரத்தில் அனு என்ற சிறுமி நடித்துள்ளார். அனைவரும் புதுமுகங்கள்.

இப்படத்தின் தயாரிப்புக்காக சிங்கப்பூரின் ஊடக வளர்ச்சி ஆணையம், 39 ஆயிரம் சிங்கப்பூர் டொலர்களை வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது

# தனி ஒருவ… பாராட்டிய …

ஜெயம் ரவி நடிப்பில் சமீபத்தி… திரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடி… படம் தனி ஒருவன். இதில் ஜெயம் ர… நயன்தாரா நடித்திருந்தார். மேலும் வி… சாமி நடித்திருந்தார். இப்படத்தில் அ… கதாபாத்திரம் அனைவராலும் பேசப்ப… மேலும் பல சினிமா பிரபலங்களும் த… படத்தை பாராட்டி வாழ்த்துக்களை தெ… வருகின்றனர். இந்நிலையில், இயக்கு… படத்தை பார்த்து வாழ்த்துக்களை கூ…

படத்தை பற்றி சங்கர் கூறும்போது… தனி ஒருவன் படத்தை பார்த்தேன். மி… பிடிந்திருந்தது. இயக்குனர் ராஜா திற… இயக்கியிருக்கிறார். அற்புதமான நடிப்… ரவி வெளிப்படுத்தியிருக்கிறார். அரவி… சிறப்பாக நடித்திருக்கிறார். இசையமை… ஆதியின் பின்னணி இசை அழுத்தமா… பதிந்திருக்கிறது. படக் குழுவினருக்கு… என்னுடைய வாழ்த்துக்கள்” என்றார்.




## அஜித்தின் வேதாளம்

என்னை அறிந்தால்... படத்தை அடுத்து ஏ.எம்.ரத்னம் மிக பிரமாண்டமான முறையில் அஜித்குமாரை வைத்து ஒரு புதிய படம் தயாரித்துவருகிறார். இந்த படத்தின் படப்பிடிப்பு கடந்த சில மாதங்களாக நடைபெற்றுவந்தது. படத்துக்கு பெயர் சூட்டப்படாத நிலையில், இந்த படம் வேகமாக வளர்ந்துவந்தது.

படத்தின் பெயரை அறிந்துகொள்வதற்கு அஜித்குமார் ரசிகர்கள் மிகவும் ஆர்வமாக இருந்தார்கள். மிகுந்த எதிர்பார்ப்புக்கிடையில், கடந்தவாரம் அந்த படத்தின் பெயர் வெளியிடப்பட்டது. அந்த படத்துக்கு வேதாளம் என்று பெயர் சூட்டப்பட்டிருப்பதாக அதிகார பூர்வமான அறிவிப்பு வெளியானது. வேதாளம் படத்தை தீபாவளி விருந்தாக திரைக்கு கொண்டுவர தயாரிப்பாளர் ஏ.எம்.ரத்னம் திட்டமிட்டு இருக்கிறார்.

இந்த படத்தில் அஜித்குமார் ஜோடியாக சுருதிஹாசன் நடித்திருக்கிறார். அஜித்குமாரின் தங்கையாக லட்சுமிமேனன் நடித்துள்ளார். அனிருத் இசையமைத்து இருக்கிறார். சிறுத்தை சிவா டைரக்ட் செய்திருக்கிறார். இவர் ஏற்கனவே அஜித்குமாரை வைத்து, வீரம் படத்தை டைரக்ட் செய்தவர்.



## அரண்மனை-2 படத்துக்காக 103 அடி நீள அம்மன் சிலை

ஹன்சிகா, ராய் லட்சுமி, வினய் நடித்து சுந்தர் சி டைரக்டு செய்த அரண்மனை படம் வெற்றி பெற்றதை தொடர்ந்து அந்த படத்தின் இரண்டாம் பாகம், அரண்மனை-2 என்ற பெயரில் தயாராகி வருகிறது. இது, திகில் நிறைந்த பேய் படம் ஆகும்.

இந்த படத்தில், சித்தார்த் கதாநாயகனாக நடிக்கிறார். கதாநாயகிகளாக திரிஷா, ஹன்சிகா ஆகிய இருவரும் நடிக்கிறார்கள். முக்கிய வேடம் ஒன்றில் சுந்தர் சி நடிப்பதுடன் டைரக்டும் செய்கிறார். படத்தின் பெரும்பகுதி படப்பிடிப்பு முடிவடைந்தது. படத்தின் உச்சக்கட்ட பாடல் காட்சிக்காக சென்னை பின்னி மில் ஸ்டூடியோவில், 103 அடி நீளமுள்ள அம்மன் சிலை அமைக்கப்பட்டு 7 நாட்களாக படப்பிடிப்பு நடக்கிறது.

சித்தார்த், திரிஷா, ஹன்சிகா, 2 ஆயிரம் துணை நடிகர், நடிகைகள், 200 நடன கலைஞர்கள் தினமும் படப்பிடிப்பில் கலந்துகொண்டதாக டைரக்டர் சுந்தர் சி. தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

இந்திய திரையுலகில், படப்பிடிப்புக்காக இத்தனை நீளமான அம்மன் சிலை இதுவரை எந்த படத்துக்கும் அமைக்கப்படவில்லை. தினமும் 300-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் இரவு-பகலாக பணிபுரிந்து 25 நாட்களில் இந்த அம்மன் சிலையை அமைத்தார்கள். பொதுவாக அம்மன் சிலைகள் நின்றபடியோ அல்லது உட்கார்ந்த நிலையிலோதான் இருக்கும். பொள்ளாச்சி மாசாணி அம்மன் சிலை மட்டுமே படுத்தநிலையில், அதுவும் வானத்தை பார்த்து படுத்தநிலையில் இருக்கும். அரண்மனை-2 படத்துக்காக அமைக்கப்பட்டுள்ள அம்மன் சிலை, 103 அடி நீளத்தில் ஒரு பக்கமாக படுத்தநிலையில் உள்ளது. இவ்வளவு நீளம் உள்ள சிலை எந்த கோவிலிலும் இல்லை. இந்த சிலை முன்பு 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கலைஞர்கள் நடனம் ஆடுவது போல் படமாக்குவதற்கு வேறு எங்கும் இடமும் இல்லை என்பதால், மீனம்பாக்கம் அருகே உள்ள பின்னி மில் ஸ்டூடியோ மைதானத்தை தேர்ந்தெடுத்தோம்.


"அலை ஒடுங்கி மலைநடுங்க ஆணவத்தின் சிறகொடிக்க அம்மா வா...வா..." என்ற உச்சக்கட்ட பாடல் காட்சியை அங்கு படமாக்கினோம். இந்த சிலையையும், படப்பிடிப்பையும் பார்ப்பதற்காக பொதுமக்கள் தினமும் குடும்பம் குடும்பமாக வருகிறார்கள். அப்படி வருகிற சில பெண்கள் அருள்வந்து சாமி ஆடுகிறார்கள். அவர்களுக்கு தீபாராதனை காட்டுவதற்காகவே ஒருவரை நியமித்து இருக்கிறோம். இதுவரை எந்த படத்துக்கும் இத்தனை நீளமுள்ள பிரமாண்ட சிலை பயன்படுத்தப் படாததால், இதை லிம்கா சாதனைக்கு விண்ணப்பிக்க இருக்கிறோம். இவ்வாறு டைரக்டர் சுந்தர் சி கூறினார்.





## தனி ஒருவனை பாராட்டிய சங்கர்

ஜெயம் ரவி நடிப்பில் சமீபத்தில் வெளியாகி ...ரையரங்குகளில் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கும் ...ம் தனி ஒருவன். இதில் ஜெயம் ரவிக்கு ஜோடியாக ...ன்தாரா நடித்திருந்தார். மேலும் வில்லனாக அரவிந்த் ...மி நடித்திருந்தார். இப்படத்தில் அரவிந்த்சாமியின் ...பாத்திரம் அனைவராலும் பேசப்பட்டுவருகிறது. ...லும் பல சினிமா பிரபலங்களும் தனி ஒருவன் ...த்தை பாராட்டி வாழ்த்துக்களை தெரிவித்து ...கின்றனர். இந்நிலையில், இயக்குனர் சங்கர் ...த்தை பார்த்து வாழ்த்துக்களை கூறியிருக்கிறார். ...படத்தை பற்றி சங்கர் கூறும்போது, "சமீபத்தில் ...ி ஒருவன் படத்தை பார்த்தேன். மிகவும் ...ந்திருந்தது. இயக்குனர் ராஜா திறமையாக ...க்கியிருக்கிறார். அற்புதமான நடிப்பை ஜெயம் ... வெளிப்படுத்தியிருக்கிறார். அரவிந்த்சாமி ...ப்பாக நடித்திருக்கிறார். இசையமைப்பாளர் ...தியின் பின்னணி இசை அழுத்தமாக ...ந்திருக்கிறது. படக் குழுவினருக்கு ...னுடைய வாழ்த்துக்கள்" என்றார்.



# உறவுகள்

நல்ல மனமுள்ள – ஒரு
நல்ல மனிதனிடம்
நாலு பண வுழைப்பு
நாள் தோறும்
இருக்கு மென்றால் – அவன்
வீட்டிலுள்ள
சோதரன் சோதரிகளுக்கு
உண்ண உணவு வரும்
உடுத்த உடைகள் வரும்
படிக்கப் பணமும் வரும்
பொன்னும் வரும்
பொருள்கள் வரும்
அவரவர்கள் எண்ணுகின்ற
விதம் போலே
ஏற்ற நல்ல
வாழ்வும் வரும்!
இவையெல்லாம் – அந்த
நல்ல மனக்காரனின்
நாளாந்த வருவாயில்
நல்லபடி நடந்தேறும்
நல்ல விடயங்கள்!
கிடைத்தவை யெல்லாங்
கொடுத்த அவனுக்கு – ஏதுங்
கிடைக்காத காலம் வந்து
முடங்குண்டு போனால்
அவன் போலே
அவன் மேலே(யும்)
அக்கறை செலுத்தி
அன்புதவிகள் நல்க
நல்ல மனமில்லாத
நன்றி கெட்ட
உறவினர்கள்.


பாண்டியூர்.
பொன்.நவநீதன்.

# தேன் கிண்ணம்

## பூமாதேவி

மண் என சாதாரணம் கொண்டால்
பொன் என்றும் புகழ் என்றும்
ஒன்றும் காண்பாரில்லை.
மண் போல் தூற்றுபவர்களும் உண்டு.
உழுது உணவு அழிப்பவன்
உள்ளிருந்தும்
பொழுதுக்கு மனை சாலை எனக்
கொள்பவன்
வெளியிருந்தும்
உன்னிடமிருந்து கொள்ளும் பெருமை
இவ்வுலகில் நிகரில்லை.
உன்னிடம் உண்ண உணவும்
அணிந்து கொள்ள ஆபரண
கனிவளங்களும்
இருந்து கொள்ள மனை வாசல்களும்
நடந்து செல்லச் சாலைகளும்
தாகம் தீர்த்திட தண்ணீருமென
அத்தியாவசியங்களுடன்
மானிடன் மட்டுமன்றி
படைக்கப்பட்ட அத்தனைக்கும்
அபயம் அழிக்கும்
பெரும் தகையான தாயே
பூமாதேவியே வணங்குகின்றேன்.

க.தீ.செல்வராசா,
விநாயகபுரம்.




# காதல் புத்தகம்

மஞ்சள் நிலா பிரசவித்த
அஞ்சுகமே – என்
நெஞ்சிலே ஏனடி – நீயும்
தஞ்சம் கொண்டாய் – உன்
கண்களாலே கசியவிட்ட
காதல் துளிகள் எல்லாம்
என்னிலே கவிதை வரிகளாகி
உருவானதே காதல் புத்தகமாகி
அதிலே என்
முகவுரையோ – உன்
முகத்தின் அழகு வரிகளே
வருணனை செய்கிறது – என்
அணிந்துரையோ – உன்
அங்கத்தை மூடிய ஆடையின்
அலங்காரத்திலே பற்றி
நிற்கிறது
அதன் உள்ளடக்கத்திலே – உன்
உதட்டின் வரிகள் விட்ட
கோலத்தின் அழகும்
கற்பு கலையாத – உன்
கன்னங்களில் – என்
கற்பனை முத்தங்களின்
தழும்புகளும் – உன்
கண்களின் குளிர்ச்சியும் – அதன்
காதலின் கவர்ச்சியும் – உன்
புருவத்தின் வளைவும் – அதை
பொறாமை கொள்ளும் பிறையும்
என்பதெல்லாம் அதிலே
அடங்கி இருக்கும்.
இத்தனையும் கோர்த்த – காதல்
புத்தகத்தைப்பதிப்புரை செய்யவோ
உன் இதயத்தின் அச்சகத்திலே
என் படைப்புக்கும் பதிப்புரிமை
தருவாயோ வெகுசீக்கிரம்.

இளம்பிறை யோகன், புத்தளம்.

# நேசம் வென்றவளே



இரும்புக் கயிறுகளால் இழுத்துப் பறித்து
இறுக்கிக் கொண்ட
இன்பவுணர்வுகளெல்லாம்
ஆறுதல் தூவுகின்றன...
விரிசல்களின் விளக்கம் சொல்லி
விரிசல்களில் விரிவு வேண்டாமென
புன்னகைக்கிறது
என்னுள் உன் மனக்குழந்தை...

காதல் சிந்திய பூங்கொத்துக்களில்
மணம் வீசும் ஜோடி மலர்கள்
ரணமாக நியாயம் என்ன???

சிதைந்து போகும் சதியுணர்வுகள்
பதைத்துவிடும் பாசமல்ல நமது...

காமத்திற்கு தடை போட
காதலிற்கு உரம் போட
கண்களிலே கனிவு பேசும் கன்னியுன்
கலக்கம் எதிலோ கூறு...
நம் காதல் அழுது வேதனை
விதைக்கிறது...

நெஞ்சத்தில் நேசம் திழைத்த
வார்த்தைகளில்
வஞ்சத்தில் விஷம்
நுழைத்துப்போனதென்ன விதியோ???

பிடிவாத போர் செய்கிறாய்
முடியாது என்று
ஒன்றுமில்லையடி...

காதலின் உயிருடன்
உழன்று ஒட்டிய
உன்னையுமென்னையும்
உதிர்த்துவிட ஒரு வழியுமில்லை
என்பது
அறிந்துமா பொய்யாக
பூட்டு போடுகிறாய்
நம் பாச மாளிகைக்கு...

உண்மையொன்று சொல்லவா???
ஒருமுறை என் கண்கள் பார்
நம் காதல் கண்ணீர் சிந்த
உன் கன்னங்கள் என்
நெஞ்சு மெத்தை தேடும்
என் நேசம் வென்றவளே...

எஸ்.சிபானி முஹம்மட்,
ஒலுவில்.

# விதவைகளின் தேசமிது

*அவன் வந்திருந்தான்*
*வெளியிலிருந்து...*
*உயிரோடு கலந்த உறவு அவன்!*

*"சமர் ஹொலிடேய்ஸ்"*
*செம வெப்பமாம்...* U.K *இல்*
*சல்லாபமாகும் அது*
*உல்லாசமான காலமாம்...*

*வெப்பம்! வெள்ளைக்கல்ல*
*கலப்பு... கறுப்பு...*
*கலருக்கும் தான்!*

*தனியனானாலும்*
*சோடியானாலும்*
*ஓய்வு தேவை...!*

*எப்படி வாழ்ந்தாலும்*
*இப்படி ஒரு பயணம்*
*தேவையானதே...!*
*மாறுதலுக்காக...*
*ஓய்வுத்தேவை...*
*ஒரு காலத்தில்*
*அமெரிக்க தேசத்தின்*
*சிக்காக்கோ...நகரத்தையே*
*உலுக்கி எடுத்திருந்தது!*
*அது... மேதின ஞாபகம்...!*
*மதிப்புக் குறையா*
*மனதோடு 'மாமா' என்று*
*அன்பாக அழைத்தவன்*
*விருந்தாளி அல்ல*
*மருந்தானவன்*
*அக்கா மகன்!*
*உழைத்து களைத்து வந்தவருக்கு*
*ஓய்வுடன் ஒரு துணையும் தேவை!*
*வயசு-எகிறி போகிறது!*

*வினவினேன் நாசூக்காக நான்*
*அக்காவும்... தன்பாட்டில்*
*சிரித்துக்கொண்டாள்.*
*வேறு பொறுப்பு இல்லைதானே!*
*விபரமானவன் போல்*
*தெரிந்தவன் வெளிச்சமாக*
*பேசினான் " அம்மா விதவையாக*
*இருந்தால் பரவாய் இல்லை..."*
*போச்சடா, போச்சு...*

*அக்காவின் முகம்*
*பேய் அறைந்த மாதிரி*
*ஆயிற்று...!*
*தூக்கிவாரி போட்டதெனக்கு!*

*அவன் தெளிவாகவே*
*இருந்தான்!*
*விழுப்புண்.. காயம்...*
*பட்டவளும் சரியே!*
*அங்கம் குறைந்தாலும்...*
*பிள்ளைகள் ஒன்று... இரண்டு...*
*இருந்தாலும்... மோசமில்லை.*

*திகைத்துப்போனேன்*
*இனமானமும்... தேசாபிமானும்...*
*தியாகமும் இன்னும்... இன்னும்...*
*உயிர்பிழைத்திருக்கும்! இந்த*
*விதவைகள் தேசத்தில்.*


மண்டைதீவு மகிழ்நன்.

# கனவிலும் என்னைக் காதலித்தாய்

சத்தியமாய் நான்
இரவு கூட
கனவு கண்டேன்
காதலி!!!
நமக்கு இரு
குழந்தைகள்
இருப்பதாக!!!
நீ நல்லவள்!!!
அதுதான் என்
கனவிலும் நீ
என்னை...
காதலிக்கிறாய்...!

கே.வாலேந்திரன், கொள்ளுப்பிட்டி.





- ஜோசப் கிருஷ்ணா -



# மின்னல் வீரன்

ஐரோப்பா முழுவதும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த வகையில் ஒன்றுதான் ஜேர்மனியின் பண்டஸ் லீகா உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி. இந்தச் சுற்றுப் போட்டியில் பேயன் மியூனிக் அணிக்கும் வுல்ஸ்பேக் அணிக்கும் இடையிலான போட்டியொன்றில் ஒரு சாதனை நிகழ்த்தப்பட்டிருக்கிறது.

பேயன் மியூனிக் 1-0 என்று பின்தங்கி இருந்தவேளை அணியின் தியாகோவுக்கு மாற்றுவீரராக றொபட் லெவ்டொன்ஸ்கி களம் இறங்குகிறார். இவர் மைதானத்தில் இறங்கிய ஆறாவது நிமிடம் முதல் கோலை அடிக்கிறார். அதன்பின் மளமளவென்று கோல்களை அடிக்கிறார். அதாவது மொத்தம் ஒன்பது நிமிடங்களில் ஐந்து கோல்களை அடிக்கின்றார். இது பண்டஸ்லீகா வரலாற்றில் ஒரு சாதனையாகப் பதியப் பட்டுள்ளது. ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான உதைபந்தாட்டப் போட்டிகளில் இத்தகைய குறுகியநேர கோல் சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளதா என்று தெரியவில்லை.

எனினும் 1991இல் ஜேர்மன் லீக் சுற்றுப் போட்டியில் மைக்கல் ரொனிஸ் ஐந்து கோல்கள் அடித்திருந்தார். இது இவர் டுயிஸ் பேக் அணிக்காக விளையாடியபோது பெற்றுக் கொண்டதாகும். இவர் தற்போது றொபட்டுக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளார். இன்னும் சிறிது பின்னோக்கிப் பார்த்தால் 1977இல் கொலோன் அணிக்காக விளையாடிய டெய்டர் முல்லர் ஆறு கோல்கள் அடித்துச் சாதனை புரிந்திருந்தார். அதுவே இன்னும் சாதனையாக இருக்கிறது.

ஆனாலும் இந்த முன்னைய கோல் சாதனைகளைவிட றொபட்டின் சாதனையில் ஒரு முக்கியத்துவம் இருக்கிறது. அதாவது 9 நிமிடத்தில் ஐந்து கோல்கள் என்பதே அது. மேலும் இரண்டு இரண்டு கோல்கள் அடிக்கும் சந்தர்ப்பம் இருந்தும் அதனை றொபட் தவறவிட்டது துரதிர்ஸ்டம். அப்படி நடந்திருந்தால் எந்தவகை ஒப்பீட்டிலும் றொபட் முதன்மை பெற்றவராக இருந்திருப்பார். இந்தச் சாதனையாளர் போலந்து நாட்டைத் தாயகமாகக் கொண்டவர். போலந்து தேசிய அணி யில் ஒரு வீரர் தற்போது ஜேர்மனியின் பேயன் மியூனிக் அணிக்காக விளையாடிக் கொண்டிருக்கிறார்.



# இவர்கள் வேண்டாம்

அடுத்த வருடம் பெப்ரவரி மாதத்தில் பாகிஸ்தான் சுப்பர் லீக் இருபதுக்கு இருபது கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ளன. இந்தச் சுற்றுப்போட்டி டோகா அல்லது ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடாத்தப்பட உள்ளது. இப்பொழுது செய்தி என்னவென்றால் ஆட்டநிர்ணய அக்கினியில் சிக்கித் தப்பிப் பிழைத்து வந்த சல்மான்பட், மொகம்மது ஆமிர், மொகம்மது ஆஸிப் மூவரும் சர்வதேச கிரிக்கெட்டில் நுழையும் சந்தர்ப்பத்தைப் பெற்றிருக்கிறார்கள். அதாவது பாகிஸ்தான் சுப்பர் லீக் ஆட்டங்களில் விளையாட இவர்களுக்குச் சந்தர்ப்பம் உண்டு.

இந்நிலையில் முன்னாள் பாகிஸ்தான் அணித் தலைவரும், இந்நாள் கிரிக்கெட் நேர்முக வர்ணனை யாளருமாகிய ரமீஸ்ராஜா இவர்களின் பாகிஸ்தான் சுப்பர் லீக் மீள்வருகையை வரவேற்கவில்லை. ரமீஸ் கருத்துக் கூறும்போது, இவர்களது வருகையை நான் கடுமையாக எதிர்க்கின்றேன். இவர்கள் கிரிக்கெட் மைதானத்துக்குள் அங்கீகாரத்துடன் நுழைவது கிரிக்கெட் விளையாட்டுக்கே ஆபத்தானதாகும்.

அதுமட்டுமன்றி பாகிஸ்தானின் கௌரவத்துக்கும் ஊறுவிளைப்பதாகும் என்றும் கூறியுள்ளார். முதன்முதலாக ஆரம்பிக்கப்படவிருக்கும் பாகிஸ்தான் சுப்பர்லீக் போட்டிகளில் மதிப்புவாய்ந்த வீரர்களான கெவின் பீட்டர்ஸன், சாகிப் அல்ஹசன், டுவைன் பிராவோ உள்ளிட்ட பல சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் கலந்துகொள்ள இருக்கிறார்கள். அவர்களுக்குச் சமதையாக, தற்போது இந்த மூவரும் கணிக்கப் படுவதை ரமீஸ் ராஜா விரும்பவில்லை போலத் தெரிகிறது.



# இனியும் முடியாது

வரும் டிசம்பர் அல்லது ஜனவரி யில் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் பாகிஸ்தான் இந்திய அணிகளுக்கு இடையிலான இரண்டு டெஸ்ட், ஐந்து ஒரு நாள் போட்டிகள் மற்றும் இருபதுக்கு இருபது போட்டிகள் கொண்ட தொடர் ஒன்று நடைபெறும் என்று எதிர்பார்க்கை இருந்தது, இப்போது அந்த நம்பிக்கை தகர்ந்து கொண்டுபோவது நிதர்சனமாகத் தெரிகின்றது.

இவ்விடயத்தில் பாகிஸ்தான் தீவிர மாக முயற்சித்தும் அது சாதகமாக நடைபெறும் சந்தர்ப்பம் இல்லாமல் போகும் போலத் தெரிகிறது. தற்பொழுது பாகிஸ்தான் கிரிக்கெட் சபையும் பொறுமை இழந்துவிட்டது போல் தெரிகிறது. நாங்கள் இனியும் கெஞ்சிக் கொண்டிருக்கப்போவதில்லை. இவர்கள் சரியான பதிலைக் கூறிவிட்டால் நாங்கள் வேறு சுற்றுப்போட்டிகளை ஏற்பாடு செய்துகொள்வோம்.

மேலும் இது விடயத்தில் ஐ.சி.சி. யிடமும் பேசப்போகிறோம் என்றுகூற, இது இரண்டு நாடுகள் சம்பந்தப்பட்ட விடயம் என்பதால் நாங்கள் இதில் சம்பந்தப்பட விரும்பவில்லை என்று ஐ.சி.சி கூறிவிட்டது. இதேவேளை பாகிஸ்தான் தரப்பில் இந்தியாவிடம் மீண்டும் மீண்டும் வேண்கோள்விடுப்பது தொடர்பில் அதிருப்தி காணப்படுகிறது. முன்னாள் பாகிஸ்தான் அணித்தலைவர் சாஹிட் அப்ரிடியும் இந்தியாவிடம் கெஞ்சிக்கொண்டிருக்கவேண்டாம் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

# இலங்கை - மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் போட்டி

| | | |
|---|---|---|
| ஒக்ரோபர் | 8 - 10 | 3 நாள் பயிற்சி ஆட்டம் |
| ஒக்ரோபர் | 14 - 18 | முதலாவது டெஸ்ட் (காலி) |
| ஒக்ரோபர் | 22 - 26 | இரண்டாவது டெஸ்ட் (சரா ஓவல்) |
| நவம்பர் | 1 | முதலாவது ஒரு நாள் போட்டி (பிரேமதாச மைதானம்) |
| நவம்பர் | 4 | இரண்டாவது ஒரு நாள் போட்டி (பிரேமதாச மைதானம்) |
| நவம்பர் | 7 | மூன்றாவது ஒரு நாள் போட்டி (பல்லேகல) |
| நவம்பர் | 9 | முதலாவது இருபதுக்கு இருபது (பல்லேகல) |
| நவம்பர் | 12 | இரண்டாவது இருபதுக்கு இருபது (பிரேமதாச மைதானம்) |

**அண்மைக் கால பெறுபேறுகள் (வெற்றிகள்)**

டெஸ்ட்: மே.இ.தீவுகள் - 03, இலங்கை - 6, ஒரு நாள் போட்டிகள்: மே.இ.தீவுகள் -27, இலங்கை - 21, இருபதுக்கு இருபது மே. இ.தீவுகள் - 1, இலங்கை - 05.

## மேற்கிந்திய அணி விபரம்

ஜேஸன் ஹோல்டர்(தலைவர்) - பார்படொஸ், கிரெக், பிரத்வைத் (உப தலைவர்) பார்படொஸ், தேவேந்திர பிசு - கயானா, ஜேர்மன் பிளக்வூட் - ஜமெய்க்கா, கார்லொஸ் பிரெத்வைட் - பார்படொஸ், டரன் பிராவோ - டிரினிடாட், ராஜேந்திரா, சந்திரிகா - கயானா, ஷேன் டொவறிச் - பார்படொஸ், செனன் கெப்ரியல் - டிரினிடாட், ஷாய்ஹோப் பார்படொஸ், டினேஸ் ரம்டின் - டிரினிடாட், ஹெமர் றோச் - பார்படொஸ், மார்லன் சாமுவெல்ஸ் - ஜமெய்க்கா, ஜெரோம் டெய்லர் - ஜமெய்க்கா, ஜோமல் வரிக்கான் - பார்படொஸ்.




# பெண் கல்வி ஏற்றம் தந்ததா?



அரை நூற்றாண்டுக்கு முன்னால் பெண்ணுக்குக் கல்வி வாய்ப்பு அத்தனை எளிதல்ல. 'பேதைமை' (அறிவின்மை) பெண்ணுக்கு அழகு என கருதப்பட்டது. கையெழுத்துபோடுவது, கடிதம் எழுதத் தெரிந்தால் நல்லது என்று ஆரம்பக் கல்வி பெண்ணுக்கு அனுமதிக்கப்பட்டது.

பெண் பருவம் அடையும்வரை படிக்க அனுப்புவது. உள்ளூரில் உள்ள பள்ளியில் எந்த வகுப்புவரை உள்ளதோ அதுவரை படிக்க அனுப்புவது என்ற நிலை மாறி சில சேவைத் துறைசார் படிப்புகளுக்குப் பெண்கள் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பப்பட்டனர். பெரும்பாலும் ஆசிரியர் பயிற்சி, செவிலியர் பயிற்சி போன்றவையே பெண்களுக்கான படிப்புகளாக இருந்தன. தொழில்நுட்பம், பொருளாதாரம், அரசியல், பாதுகாப்புத் துறைகள் அவர்களுக்கு மிக அந்நியமான துறைகள்.

பெண்களின் அதிகபட்ச இலட்சியம் ஆசிரியர் அல்லது செவிலியர் ஆவது. கடந்த இருபது ஆண்டுகளில் ஏராளமான மாற்றங்கள் பெண்களின் வாழ்வில் நிகழ்ந்துள்ளன. இதில் கல்வி பெரும்பங்கை வகிக்கிறது.

குறைந்தபட்சம் பள்ளி இறுதி வகுப்புவரை வந்த பெண்கள், பின்னர் கல்லூரிகளில் நுழைந்தனர். இதன்விளைவாகப் பெண்கள் ஒருங்கிணைக்கப்பட்ட பொதுத் துறைகளில் நுழைந்தனர்.

கலையில் தொடங்கி மருத்துவம், பொறியியல், தொழில்நுட்ப அறிவு பெற வழிசெய்தன. கனவுகளோடு, இலட்சியத்தோடு கல்வி கற்று அதிக மதிப்பெண் பெற்ற பெண்களில் பலர் திருமணம். குடும்பம் என வாழ்க்கையை நடத்துகின்றனர். பலர் இதனால் கனவு காண்பதே இல்லை. என்ன கல்வி பயின்றாலும், அது திருமண நோக்குடனேயே பயிலப்படுகிறது.

# குழந்தையின்மை முதற்காரணம்

ஆண்களுக்கு ஹோர்மோன் குறைபாடு, உடல்பருமன், நீண்ட கால புகைப்பழக்கம், மதுப்பழக்கம் மற்றும் ஆண்மைக் குறைவு பிரச்சினைகள், உயிரணுக்கள் குறைந்தோ அல்லது இல்லாமலோ இருப்பது, அவற்றின் அசையும் திறன் குறைந்திருப்பது, உருவ அமைப்பு குறைபாடு, நீரிழிவு நோய் மற்றும் மரபுரீதியான நோய்களால் ஏற்படும் குறைபாடுகள், உளவியல் காரணங்கள், உறுப்பில் குறைபாடு மற்றும் நோய்த்தொற்று போன்ற காரணங்களால் குழந்தையின்மை பிரச்சினை உண்டாகும்.

பெண்களுக்கு கருக்குழாய் அடைப்பு, கருப்பை வளர்ச்சியின்மை, கருப்பைக் கட்டிகள், முட்டை வெளியேறுவதில் பிரச்சினை, சினைப்பை, கருப்பையில் என்டோமேட்ரியோசிஸ் பிரச்சினை, ஹோர்மோன் குறைபாட்டால் கருமுட்டை உற்பத்தி பாதிப்பு, கருச்சிதைவு மற்றும் கருக்கலைப்பினால் உண்டாகும் நோய்கள், உடல்பருமன், நீரிழிவு, இரத்தக்கொதிப்பு, தைரொய்ட் பிரச்சினை போன்ற காரணங்களால் குழந்தைப்பேறு தடைப்படலாம். ஆண்மை குறைபாடு மற்றும் உயிரணு குறைபாடுகளை மருந்துகளை கொண்டு சரி செய்யமுடியும்.

ஆண்களுக்கு உயிரணு பரிசோதனை, அல்ட்ரா சவுண்ட், ஹோர்மோன் பரிசோதனை குறைபாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். மாதவிலக்கு குறைபாடுகள் உள்ள பெண்கள் முன்கூட்டியே பரிசோதிக்கலாம். ஆண், பெண் இருவருமே அதிக உடல் எடையைக் குறைப்பது மற்றும் நீரிழிவு, இரத்த அழுத்தம்போன்ற நோய்களுக்கு முறைப்படி மருந்து எடுத்துக் கொள்ளவேண்டும். குறைபாட்டுக்கு ஏற்ற சிகிச்சை முறையால் குழந்தையின்மை பிரச்சினைக்கு தீர்வுகாணலாம்.

# பவுடர்



பிறந்த குழந்தைக்குக் கூட பவுடர் அடித்து அழகு பார்த்தால்தான் நம்மில் பலருக்கும் நிம்மதி. குளிக்கிறோமா இல்லையா, முகம் கழுவுகிறோமா இல்லையா என்றெல்லாம்கூடக் கவலைப்படாதவர்களுக்கு பவுடர் அடிக்காமல் வெளியே கிளம்புவதென்றால், ஏதோ குறைகிற மாதிரியே உணர்வார்கள். பவுடர் என்பது பளிச் தோற்றத்தின் அடையாளம் என்று காலம் காலமாக மக்கள் மனங்களில் ஊறிப்போன விஷயம். மேக்கப்பிலும் மிக முக்கிய இடம் வகிப்பது பவுடர்.

பவுடர் என்கிற பெயரில் விதம் விதமான மணங்களில் நாம் உபயோகிக்கிற எல்லாம் சரியானவைதானா என்றால் இல்லை என்றே சொல்லவேண்டும். தினசரி உபயோகத்துக்கு ஒன்று... மேக்கப்புக்கு ஒன்று... சருமப் பிரச்சினைகளுக்கு ஒன்று எனப் பவுடர்களில் பலவிதம் உண்டு" என்கிறார் அழகுக்கலை நிபுணர் வசுந்தரா.

பவுடர் என்று சொன்னதுமே குளித்து முடித்ததும் உபயோகிக்கிற பவுடர்தான் நினைவுக்கு வரும். அது டல்க். டல்கம், டல்க் என இரண்டு வகைகள் உள்ளன.

டல்கம் என்பது டல்க்கை நன்கு சலித்து கலர் கலந்தோ அல்லது கலக்காமல் அப்படியே வெள்ளையாகவோ வைத்திருப்பார்கள். டல்க் என்பது சற்றே கொரகொரப்பான பவுடர். உதாரணத்துக்கு வெயில் காலங்களில் வியர்க்குரு போக்க உபயோகிக்கிறோமே, அதுதான் டல்க். அதன் துகள்கள் சற்றே பெரிதாக இருக்கும். அதை நாம் உடம்புக்கு உபயோகிப்பதால் ரொம்பவும் மென்மையாக இருக்க வேண்டும் என்று அவசியம் இல்லை. சாதாரணமாக நாம் குளித்துவிட்டு வந்ததும் ஈரம் இல்லாமல் இருக்கவும், அன்ட்டி பக்ரீரியல் விளைவுக்காகவும். வாசனைக்காகவும், வியர்வையையும், வியர்க்குரு மற்றும் சின்னக் கட்டிகளைத்தடுக்கவும் உபயோகிப்பதுதான் டல்க். வெயில் காலங்களில் இதற்கு நிறைய விளம்பரங்கள் வருவதைப் பார்க்கலாம்.

குளித்து முடித்ததும் உடம்பை ஈரம் போகத் துடைத்துவிட்டு டல்க் போட்டு, பிறகு உடை அணிகிறபோது நீண்டநேரம் புத்துணர்வாக உணர்வோம். ஈரமோ, வியர்வைக் கசகசப்போ இருக்காது. மறுபடி வீட்டுக்கு வந்ததும் அல்லது இரவு தூங்கச் செல்வதற்குமுன் குளித்துவிடவேண்டும். ரொம்ப நேரம் டல்க் நம் உடலில் இருந்தால் சருமத்துவாரங்கள் அடைபடும். அதனால், குறிப்பிட்ட நேரத்துக்குப் பிறகு அதை எடுத்துவிட்டு, உடலை சுத்தமாக்கி, துடைத்துக்கொண்டு. தேவைப்பட்டால் மறுபடியும் போட்டுக்கொள்ளலாம்.

சிலர் இரவு படுக்கப்போகும்போது டல்க் போட்டுக் கொள்வதன் மூலம் ப்ரெஷ்ஷாக இருப்பதாக உணர்வார்கள். ஆனால், எப்போதுமே டல்க் உடன் இருக்கவேண்டாம். அரை நாள் டல்க் உடன் இருந்தால். இன்னொரு அரை நாள் அது இல்லாமல் இருப்பதே நல்லது. முகத்துக்கான பவுடரில் 2 வகைகள் உள்ளன. ஒன்று லூஸ் பவுடர். இன்னொன்று ப்ரஸ்டு பவுடர். பவுடர் உபயோகிப்பதால் முகத்தில் உள்ள சின்னச் சின்ன குறைபாடுகளை மறைக்கமுடியும். சருமம் மிகவும் மென்மையாகவும். எண்ணெய் பசை இல்லாமலும் இருக்கும்.

வெளிப்புற. சுற்றுப்புற மாசுகளில் இருந்து நம் சருமத்தைக் காக்கும் ஒரு கவசமாகவும் பவுடர் வேலை செய்யும். பெரும்பாலும் பவுடர்களின் பிரதான சேர்க்கை என்பது டல்க். சிலநேரங்களில் மைக்கா பேஸ்டு பவுடர்களையும் உபயோகிக்கிறார்கள். டல்க் பேஸ்டு பவுடர் என்பது வெள்ளை நிறத்தில் நாமெல்லாம் வாங்கி உடம்புக்கு உபயோகிப்பது. அதன் துகள்கள் சற்றே பெரிதாக இருப்பதால், பவுடர் போட்டிருப்பது வெளிப்படையாகத் தெரியும். இப்போது பிரபலமாகிவரும் மினரல் மேக்கப்பில் மைக்கா பேஸ்டு பவுடர் உபயோகிக்கிறோம். அது போட்டதே தெரியாது. அவரவர் சரும நிறத்திலேயே கிடைக்கிறது.

பவுண்டேஷனுடன் ஒட்டிக்கொண்டு, பவுடரானது நமது சருமத்துக்கு சீரான ஒரு தோற்றத்தைக் கொடுக்கும். சருமத்தில் உள்ள அதிகப்படியான எண்ணெய் பசையையும், திட்டுத்திட்டான படிவங்களை எடுக்கவும் உபயோகமாகிறது. பவுடர் இல்லாமல் மேக்கப் பண்ணவே முடியாது. இன்னும் சொல்லப்போனால் பவுடர்தான் மேக்கப்பை பளிச்சென எடுத்துக்காட்டும். உதாரணத்துக்கு ஐ ஷேடோ போடுவதென்றால்கூட ஒரு கோட் பவுடர் இருந்தால் இன்னும் பளிச்செனத் தெரியும். கன்னங்களை எடுப்பாக. அழகாகக் காட்ட உபயோகிக்கிற பிளஷர் கூட பவுடருக்கு மேல்தான் போடப்படுகிறது. பவுடர் என்பது ஓர் அடிப்படை. லூஸ் பவுடர் பற்றிப் பார்ப்போம்.

இதில் ஓயில் அல்லது கம் கொஞ்சம் சேர்க்கப்பட்டிருக்கும். இதில் பலவித ஷேடுகள் உள்ளன. முன்பெல்லாம் ரோஸ் பவுடர் எனச் சொல்லிக் கேள்விப்பட்டிருப்போம். இப்போது ரோஸ் மட்டுமில்லாமல் எல்லா கலர்களிலும் கிடைக்கிறது. லைலக் கலர் என ஒன்றுவருகிறது. செயற்கை வெளிச்சத்தில் பார்க்கும்போது பிரமாதமாக இருக்கும். இப்போது எல்லோ பவுடர் என்பது பலராலும் விரும்பப்படுகிறது. வெயிலில் அலைந்து கறுத்துப்போன சருமத்துக்கு இதை உபயோகிக்கும்போது. மிகவும் பளிச்செனத் தெரிவார்கள். சிலரின் சருமத்தில் பருக்களும். சிவப்புநிறத் திட்டுகளும் இருக்கும்.

அவர்களுக்கு லேசான பச்சை கலந்த பவுடர் உபயோகிக்கலாம். இதெல்லாம் அழகுக் கலை நிபுணர்களின் உபயோகத்துக்கு மட்டுமே கிடைக்கும். மிகச் சுலபமாகக் கிடைக்கக் கூடியது என்றால் இரிடீஸன்ட். அதில் ஒருவகையான பளபளப்பு இருக்கும். மாலை நேரத்து மேக்கப்புக்கு உபயோகிக்க ஏற்றது. எல்லா பவுடர்களிலுமே டைட்டேனியம் டை ஒக்சைட் இருக்கும். இது ஒருவிதமான வெள்ளை நிற பிக்மென்ட் கொண்டது. கறுப்பான சருமத்தைக்கூட சற்றே பிரகாசமாகக் காட்ட இந்த மாதிரி பவுடர் உபயோகிக்கலாம். இப்போது அல்ட்ரா பவுண்டேஷன் பவுடர் என வந்திருக்கிறது. இதை கேமரா பேஸ்டு பவுடர் என்றும் [illegible] சொல்லலாம். ஹை டெஃபினிஷன் மேக்கப்புக்கு உபயோகிக்கக் கூடியது. மிக நுணுக்கமான சருமக் குறைபாடுகளைக்கூட இதில் மறைக்கச் செய்யலாம்.

அடுத்தது ப்ரஸ்டு பவுடர். இதில் கம் இருக்கும். இதைத்தான் பெரும்பாலும் மேக்கப்புக்கு உபயோகிக்கிறோம். கெம்பேக்ட் பவுடர் (Compact Powder) என்றும் இதைக் குறிப்பிடலாம். வேலைக்குச் செல்கிற பெண்கள் தினமும் இதை உபயோகிப்பதன்மூலம் ஃப்ரெஷ்ஷாகவும் பளிச்சென்றும் காட்சியளிக்கலாம். கெம்பேக்ட் பவுடரை தேர்வு செய்கிற முறை. பேபி பவுடர் பாதுகாப்பானதா, அதென்ன மெடிக்கேட்டட் பவுடர்? பவுடர் பற்றிய மேலும் பல தகவல்கள் அடுத்த இதழிலும் தொடரும்.

**250/= பரிசு** வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :- 489

கேள்வி: குழந்தையின்மை பிரச்சினைக்கு ஆண்களுக்கு செய்யப்படும் பரிசோதனைகள் எவை?

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 12. 10. 2015

விடையை கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பிவைக்கவும். அனுப்பி வைக்கவேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 489
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167,
யாழ்ப்பாணம்.

பரிசுப் போட்டி இல :- 487 இற்கான விடை :-

**கபிலர்**

பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி :-
ஏ.அஸ்ஜதி,
மாணிக்கமடு, இறக்காமம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

489

பெயர் : ..................
முகவரி : ..................
..................
தே.அ. அட்டை இல : ..................
விடை : ..................
..................
கையொப்பம் : ..................

சாப்பிடும் உணவில்கூடக் கறுப்பு நிறம் இருக்கக்கூடாது என்பவர்கள், சக மனிதர்களை எப்படி ஏற்பார்கள்? திருமணச் சந்தையில் வெள்ளைத் தோலுக்கு இருக்கும் மதிப்பு கறுப்புத் தோலுக்கு ஒருபோதும் இருப்பதில்லை. என்னதான் படித்திருந்தாலும், உயர்பதவியில் இருந்தாலும் கறுப்புப் பெண்கள் இரண்டாம் படிநிலையினர்தாம். கறுப்பு நிறமுள்ள மாப்பிள்ளைப் பையன்கூட அப்படியான பெண்ணை ஏற்றுக்கொள்ளத் தயங்குவது வழக்கமாக உள்ளது. பெண் கறுப்பானால், அதை ஈடுகட்டக் கொஞ்சம் அதிகப்படியாக சீதனம் கொடுக்கவேண்டும் என்ற நிபந்தனைகளும் வழக்கில் உண்டு. அப்படி அதிகப்படியாகக் கொட்டியழுதால் மட்டும் கறுப்புத் தோல் வெளுத்துவிடுமா? இப்படிக் கேள்விகள் எதுவும் கேட்டுவிட்டால், அவளுக்கு அதிகப்பிரசங்கி என்ற பட்டமும் கூடுதலாகச் சேர்ந்துவிடும்.



# கறுப்பும் ஒரு அழகு காந்தலும் ஒரு ருசி

'கறுப்பும் ஒரு அழகு, காந்தலும் ஒரு ருசி" - இப்படி ஒரு சொல் வழக்கு நம்மிடையே உண்டு. அதாவது அழகு என்பது பல வண்ணங்களைக் கொண்டது. அவற்றில் கறுப்பு ஒரு வண்ணம் ஒரு அழகு. அதேபோல ருசி பலவிதமானது. கொஞ்சம் முறுகலாக, கொஞ்சம் காந்தலாகச் சாப்பிடுவதும் ஒரு ருசி.

ஆனால் அன்றாட வாழ்க்கையில் கறுப்பு வண்ணத்தை நாம் எவ்வாறு மதிப்பிடுகிறோம்? ஒரு மாற்றுக் குறைவாகத்தானே! நமது பொதுப் புத்தியிலேயே கறுப்பு என்றால் மட்டம் என்று பதிந்துள்ளது. "கருமை நிறக் கண்ணா" என்று பாடுவோம். ஆனால் ஒரு கருமைநிறக் கண்ணனோ, கண்ணம்மாவோ நம்முன் நின்றால் கொஞ்சம் அசூயை! ஏன்?

நானும் யோசித்துப் பார்க்கிறேன். உணவுப் பண்டங்களையே எடுத்துக் கொள்ளுங்கள். களி மிகவும் ருசியானது. அதிக ஊட்டங்கள் கொண்டது. உளுந்தங்களி, வெந்தயக்களி, அரிசிக்களி, ராகிக்களி என பல விதமான களிகள். அதிலும் இனிப்பு கலந்த களி இன்னும் ருசி. இதில் எனது அனுபவம் என்னவென்றால், இந்த உளுந்தங்களி இருக்கிறதே அதை உளுந்தைத் தோல் நீக்காமல் செய்தால் அது குழந்தைகளுக்குப் பிடிப்பதில்லை. தோல் நீக்காமல்தான் சாப்பிடவேண்டும் என்றால் கேட்கமாட்டார்கள். தோல் நீக்கி வெண்ணிறமாகச் செய்தால் சாப்பிடுவார்கள். அதேபோல கறுப்பு எள்ளில் செய்த பண்டத்தைவிடத் தோல் நீக்கிய வெள்ளை எள்ளில் செய்த பண்டம் என்றால் சாப்பிடுவார்கள்.

ஆனால் ராகியை எப்படி வெளுப்பாக்குவது? அதில் என்ன பண்டம் செய்தாலும் பிடிக்கவே பிடிக்காது. இதை நான் சோதனையாகவே பல குழந்தைகளிடம் செய்து பார்த்துவிட்டேன். காரணம் கறுப்புதான். அதனால்தானே கருப்பட்டி, சர்க்கரை போன்றவற்றுக்கு விடை கொடுத்துவிட்டு வெள்ளைச் சீனியைக் கட்டிக்கொண்டு அழுகிறோம்.

சாப்பிடும் உணவில்கூடக் கறுப்பு நிறம் இருக்கக்கூடாது என்பவர்கள், சகமனிதர்களை எப்படி ஏற்பார்கள்? திருமணச் சந்தையில் வெள்ளைத் தோலுக்கு இருக்கும் மதிப்பு கறுப்புத் தோலுக்கு ஒருபோதும் இருப்பதில்லை. என்னதான் படித்திருந்தாலும், உயர் பதவியில் இருந்தாலும் கறுப்புப் பெண்கள் இரண்டாம் படி நிலையினர்தாம். கறுப்பு நிறமுள்ள மாப்பிள்ளைப் பையன்கூட அப்படியான பெண்ணை ஏற்றுக்கொள்ளத் தயங்குவது வழக்கமாக உள்ளது. பெண் கறுப்பானால், அதை ஈடுகட்டக் கொஞ்சம் அதிகப்படியாக சீதனம் கொடுக்கவேண்டும் என்ற நிபந்தனைகளும் வழக்கில் உண்டு. அப்படி அதிகப்படியாகக் கொட்டியழுதால் மட்டும் கறுப்புத் தோல் வெளுத்துவிடுமா? இப்படிக் கேள்விகள் எதுவும் கேட்டுவிட்டால், அவளுக்கு அதிகப்பிரசங்கி என்ற பட்டமும் கூடுதலாகச் சேர்ந்துவிடும்.

## சிவப்புப் பெண்தான் அழகா?

உண்மையிலேயே கறுப்பு என்பது சற்று மாற்றுக் குறைவானதுதானோ என்ற சந்தேகத்தில் உலகிலுள்ள அத்தனை அறிவியல், மருத்துவ அகராதிகளையும் புரட்டிப் போட்டாயிற்று. 'ம்ஹூம்' அப்படி ஒரு குறிப்பையும் காணோம்! இலக்கியங்களை எடுத்துக் கொள்ளுங்கள். எங்காவது கறுப்புப் பெண்ணைவிட சிவப்புப் பெண்தான் அழகு என்று ஏதாவது ஒரு உலக இலக்கியத்தில் தீர்மானமாகக் கூறப்பட்டதாக ஒரு வரி காட்டுங்கள்!

மானுடத் தோலின் நிறத்தைப் பொறுத்தவரை தீர்மானகரமான அம்சம் என்பது அட்சரேகையும் சூரியனும்தான் தீர்மானிக்கும் சக்தி! பொதுவாக வெப்ப மண்டலப் பகுதி என்றழைக்கப்படும் நாடுகளில் வாழ்பவர்கள் அடர்வண்ணமாக இருப்பார்கள். துருவங்களை நெருங்க, நெருங்க இது வெளுப்பு வண்ணமாக மாறுகிறது. கொளுத்தும் வெயிலில் வயல் வெளிகளிலும் கட்டுமானத் தொழிலிலும் ஈடுபடும் தொழிலாளர்கள் ஐரோப்பியர்களைப்போல் இருந்தால் நம் சூழலுக்குத் தாக்குப் பிடிக்கமுடியுமா? அதாவது பாலும் டிகாக்ஷனும் கலப்பதுபோல. வெளுப்பான தோலைக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களை வெளுப்பு என்று சொல்லுவதை ஐரோப்பியர்கள் ஏற்பதில்லை. அவர்களைப் பொறுத்த வரை நாம் அனைவருமே அடர் வண்ணம்தான். நம்மைவிட ஆபிரிக்கக் கறுப்பினத்தவர் இன்னும் அடர் வண்ணம்.

இதெல்லாம் மானுடச் செயற்பாட்டில் எதையும் தீர்மானிக்கும் சக்தியல்ல. வில்லியம்ஸ் சகோதரிகள் அமெரிக்கக் கறுப்பினத்தவர்கள். அவர்கள் டென்னிஸில் ஐரோப்பியவர்களைத் தோற்கடித்துச் சாதனைகள் புரியவில்லையா? பழமைப் பழக்கங்க ளால் பிறப்புறுப்பு சிதைக்கப்பட்ட சோமாலியா நாட்டுக் கறுப்பினப் பெண் வாரிஸ் டெய்ரி... இன்று உலகின் தலைசிறந்த மொடல் அழகியாகக் கொண்டாடப்படவில்லையா?



## டி.ஆர். ராஜகுமாரியை மறக்க முடியுமா?

தமிழ்த் திரையுலகின் முதல் கனவுக் கன்னி டி.ஆர். ராஜகுமாரியை மறக்க முடியுமா? இவர்தான் தனது படத்தின் கதாநாயகி என கே.சுப்பிரமணியம் முடிவு செய்தவுடன் அவருக்குப் பைத்தியமா எனக் கேலி செய்தனர். காரணம் ராஜகுமாரி கறுப்பு. அவருக்கு ஒப்பனை செய்யவே ஒப்பனைக் கலைஞர் மறுத்தாராம். இயக்குனரின் பிடிவாதத்தால்தான் நமக்கு டி.ஆர். ராஜகுமாரி என்ற கலையுலகத் தாரகை கிடைத்தார்.

அவரை அழகில்லை என்று யாராவது சொல்லமுடியுமா? ஏன் சாவித்திரியை எடுத்துக்கொள்ளுங்கள். அந்தக் கறுப்பு வைரம்தானே தன் ஒப்பற்ற நடிப்பால் நம்மை இன்றும் கட்டிப்போட்டுள்ளது. இன்றும் நாம் புன்னகை அரசி என்று கொண்டாடும் கே.ஆர்.விஜயாவும் நம் நிறம்தானே! நம் காலத்து நாயகி நந்திதா தாஸை மறக்கலாமா?

அழகு என்பது பார்ப்பவர் கண்களில் அல்லவா இருக்கிறது. கம்பராமாயணத்தில் ராமனின் அழகில் மயங்கிய கம்பன், "மையோ மரகதமோ மறிகடலோ" என்று கவி பாடவில்லையா? ராமன் கறுப்பானாலும் கடவுள் இல்லையா? அதனால் ஓரம் கட்டமாட்டோம். இராமன் மட்டுமல்ல, கிருஷ்ணனும், சிவனும்கூட இந்தக் கறுப்பு வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் தானே! கிராமத்து தெய்வங்களான கறுப்பு, கறுப்பண்ண சாமி, கறுப்பு சாமி என பலரையும் ஏற்கிறோம். இல்லாவிட்டால் "விடாது கறுப்பு" என்ற பயம்கூட காரணமாய் இருக்கலாம்.

உலகின் மக்கள் தொகையில் அடர்வண்ணத்தினரே எண்ணிக்கையில் அதிகம். தென்னாபிரிக்காவில் வெள்ளையர்களால் காந்தி கறுப்பர் என்பதாலேயே அவமானப்படுத்தப்படவில்லையா? உதைத்துக் கீழே தள்ளப்பட்டதில், குப்புற விழுந்து உடைந்த பற்களுடன் தானே அவர் கடைசிவரை காலம் தள்ளினார்.

தென்னாபிரிக்க நாட்டில் தன் கறுப்பர் இனமக்களின் விடுதலைக்காகக் கால் நூற்றாண்டு காலம் சிறையில் கழித்த நெல்சன் மண்டேலா கொண்டாடப்படவில்லையா? இன்னும் எத்தனை எத்தனை சாதனையாளர்கள் பல துறைகளிலும் சாதனை படைத்திருக்கிறார்கள்.

கர்ப்பிணிப் பெண்கள் குங்குமப் பூவைப் பாலில் கலந்து சாப்பிட்டு வந்தால் பிறக்கும் குழந்தை சிவப்பாக இருக்கும் என்ற ஒரு நம்பிக்கையும் நம்மிடம் இருப்பதுதானே? அப்படியானால், குழந்தையின் தோல் நிறத்தைத் தீர்மானிப்பது மரபணுக் கூறுகள் இல்லையா? சிவப்பழகு க்ரீம்களின் மேல் மோகம்கொண்டு ஆண்டுக்கணக்கில் அதைத் தொடர்ந்து பூசிக்கொள்வதாலேயே யாராவது சலவைக்குப் போட்ட வெள்ளைத் துணியைப்போல பளீர் வெள்ளைக்கு மாறியிருக்கிறார்களா? இப்படிச் சில கேள்விகளுக்கான விடைகளைத் தேடினாலே, அதற்கெல்லாம் ஒரு பெரிய கும்பிடு போட்டுவிடமாட்டோமா? கொஞ்சம் யோசிப்போமே.

அழகு என்பது நிறத்தில் மட்டுமே இல்லை. நிறத்தால் மனிதனை மனிதன் ஒதுக்கும் எண்ணம்தான் இந்தப் பொதுப்புத்தி உருவாவதற்குக் காரணம் என நான் நினைக்கிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

• பா.ஜீவசுந்தரி •




# நெடுந்தீவு தனுவின் 'கீறலின் முனையில்'

## கவிதைத் தொகுப்பு

அநேகமாக ஒவ்வொருவரிடமும் எத்தனையோ கதைகள், கவிதைகள், வாழ்ந்து வெளியிடப்படாமல்; வெளியிட முடியாமல் இருந்து மறைந்து விடுகின்றன.

பெறுமதி இல்லாப் பொருளொன்றை சொல்வதாக வும் அடைந்தும்விடுகின்றன.

இளம் படைப்பாளிகள் இடத்தில் மிகக் குறைவானவர்களே எழுத்துகளில் அவற்றைக் கொண்டுவரவும் முடிந்துள்ளன. மில்லேனியத்தில் சிந்தனை களை வெளியிடக்கூடிய அச்சு ஊடகங்களுடன் இலத்திரனியல் ஊடகங்களும் போட்டிபோட்டு வளர்ந்து உள்ளதால் கணிசமானோருக்கு தங்கள் சிந்தனைகளை ஏதோ ஒரு வடிவத்தில் வடிகாலிடவும் முடிந்துள்ளது.

அதனில் மிகக் குறுகிய வட்டத்தினர் தேறவும், அதிகப்படியானோர் முடி யாமல் திண்டாடுவதையும் அவர்களது படைப்புகளூடாக அவதானிக்கலாம்.

படைப்பாற்றல் கொண்டவர்களும் மிகச் சிறந்த சிந்தனையைப் பொறியாக தத்தமது படைப்புகளில் வழங்க முடியாமல் முன்னதாகப் பல படைப்புகளில் நுகரப்பட்ட விடயங்களைத் திரும்பத் திரும்ப ஒப்புவிக்கும் பலவீனங்களையும் அல்லது தற்கால வாழ்வு முறைகள் ஆயிர்மாயிரம் சிந்தனைப் பொறிகளை தோற்றுவித்தாலும் அவற்றை அதற்குரிய இலக்கிய வடிவங்களில் கொண்டு வருகின்ற திராணி இல்லாமல்போய் விடுவதையும் பரக்கக் காணலாம்.

அந்தவகையில் நெடுந்தீவு தனுவின் 'கீறலின் முனையில்' கவிதைத் தொகுப்பு மிகப் பிந்திக் கிடைத்த நூல்களில் ஒன்று. அவரது படைப்புகளில் கவிதையை என்னால் நுகர முடியாமல்போனாலும் மிகச் சிறந்த சிந்தனைப் பொறிகள் நூலின் முக்கால் பங்கையும் ஆக்கிரமித்துள்ளதை ஆச்சரியத்துடன் நோக்கவைத்துள்ளது.

இந்தச் சின்னவயதிலேயே இத்தனை அனுபவ முதிர்ச்சியா என்ற ஒவ்வொரு படைப்புகளும் வியக்கவைத்துள்ளன. நூலில் பக்கங்கள் அணிவகுக்கவில்லை. பதிலாக ஒவ்வொரு படைப்புக்களுக்கும் இலக்க அணி வழங்கப்பட்டுள்ளது.

வள்ளுவர்புரம் செல்லமுத்து வெளியீட்டகம் வடபுலத்தில் நூல் வெளியீடுகளில் புதிய வரலாற்றைத் தோற்றுவித்துள்ள நிறுவனமாக உருவாகி வருகிறது. அதனுடைய வெளியீடுகள் அறிவதற்கு ஒவ்வொரு நூல்களிலும் வெளியீட்டு இலக்கம் பொறிக்கப்படுவதும் வரவேற்கத்தக்கது.

இந்நூல் விலை அதிக வழுவழுத்த 'ஆர்ட் தாளில்' மொத்தம் 56, பக்கங்களில் 180, ரூபா விலையில், வெளியிடப்பட்டுள்ளது. 13 பக்கங்கள் அணிந்துரை, என்னுரை, பாராட்டுகள் தவிர 43 பக்கங்களில் தனுவின் கருமூலங்கள் வெளிவந்துள்ளன.

அவற்றில் சிலவற்றை மாதிரிக்குப் பார்க்கலாம். இல :03 'என் அன்னை'யில் இருந்து

உயிரென்ற இலக்கணமும்...
உறவென்ற சொந்தங்களும்...
கருவினில் நான் அசைந்தபோது
எனைக் காத்ததும் தாய் நீயே...
முதுமை முழுவதும் நான் மட்டும்
அவளருகே சேவகனாய்...

இல:10 பலகதையுண்டு!
முட்கம்பி சுற்றப்பட்டது
எல்லைகளில்...
வெடிகள் புதைக்கப்பட்டது
வீட்டுத் திண்ணைகளில்...

**தேவி பரமலிங்கம்**

இல:13, முட்கம்பி!
குனிந்து தவழ்ந்தால் குற்றவாளி,
ஏறிப் பாய்ந்தால் பயங்கரவாதி...
பாய்ந்து தவழ்ந்து நீந்தி
அயற்கரை எட்டினால்
அங்கும் கூண்டைச் சுற்றி
முட்கம்பி...

இல:17 மரண முத்தம்!
ஆடொன்று வேலிதாண்டி
கயிறறுத்து ஓடுகின்றது!
மரணாங்கள் முத்தமிடக்
கூடாதென...

இல: 23 புரிந்திடுங்கள்!
என் கனவுகளை கொஞ்சம்
நகல் எடுங்கள்
எம் பெற்றோரை நாம்
உதறாமலிருக்க...

இவ்விதம் நெடுந்தீவு தனுவின் கவிதையெனும் ரதமேறிய கருவூல முத்துக்கள் நூலின் பக்கங்கள் எங்கும் செறிந்து காணப்படுகின்றன.

இளம் கவிஞனிடம் நிறையச் சமூகப் பார்வையுடனான சிந்தனைப் பொறிகள் வீறிட்டு பாய்கின்றன. சிந்தனைப் பொறிகளை அழகிய வடிகாலில் கொண்டு சென்று நாடெங்கும் பரவவிட வேண்டுமென ஆசிக்கலாம்.

---

# பதின் பருவம்

## என் வழி தனி வழி



"**வர** வர அவன் சொன்ன பேச்சைக் கேட்கவே மாட்டேங்கிறான்" "எப்பப் பாரு இவளுக்குக் கண்ணாடி முன்னாடி நின்னுக்கிட்டிருக்கணும்"... பதின் வயதுப் பிள்ளைகள் உள்ள எல்லா வீடுகளிலும் இந்த வசனங்களைக் கேட்க முடியும். வளரிளம் பருவத்தில் வெளிப்படையாகத் தெரியும் மாற்றங்களில், இதெல்லாம் சில உதாரணங்கள் மட்டுமே.

இதுவரை பெற்றோரோடு தூங்கிய மகன் அல்லது மகள், தனி அறையை நாடத்தொடங்குவார்கள். இவ்வளவு காலம் தாயின் கையைப் பிடித்து வீதியில் நடந்து சென்றிருந்தாலும், இப்போது வெட்கமாகத் தோன்றும். பெற்றோரின் ஆலோசனையைவிட நண்பர்களின் சொற்கள் வேதவாக்காகத் தெரியும்.

ஆனால், இந்தப் பருவம்தான் தனக் கென்று ஒரு தனித்தன்மை (Identity) மற்றும் அகநிலையை - சுயத்தை (Self) உருவாக்கிக்கொள்ளும் காலம். இது ஆரோக்கியமான மாற்றம்தான்!

### பெற்றோரின் பங்கு

இந்த நேரத்தில் "ஐயையோ... அவன் அப்படிச் செய்யுறான்.. இவள் இப்படிப் போறா.." என்று பெற்றோர்கள் புலம்புவதால், பயனில்லை. பிள்ளைகளின் வளர்ச்சி மாற்றத்தைப் புரிந்துகொண்டு, அவர்களுடைய உலகத்தில் பங்கேற்று, அவர்களுக்கு ஆதரவாக இருப்பதுதான் அவசியத் தேவை.

உதாரணமாக, "அந்தப் பசங்களுடன் சேராதே" எனக் கட்டளையிடுவதைவிட, பிள்ளைகள் யார் யாருடன் நட்புக் கொண்டிருக்கிறார்கள், அவர்களுடன் எப்படிப் பழகுகிறார்கள் என்று சற்றே விலகி நின்று கண்காணிப்பது பலன்தரும். தாங்கள் புறக்கணிக்கப்படு வதாகவோ அல்லது அடக்குமுறைக்கு உள்ளாக்கப்படுவதாகவோ வளரிளம் பருவத்தினர் நினைத்துவிட்டால் கொஞ்சம் ஆபத்துதான்.

அப்படி நம்பிவிட்டால், பெற்றோரை எதிரியாகப் பார்க்க ஆரம்பிப்பார்கள். உறவு சிக்கலுக்கு உள்ளாகும். இந்தக் கட்டத்தில் அவர்களை அதிகம் சந்தேகப்படுவதோ அல்லது அதிகம் நம்புவதோ, இரண்டுமே அவர்களுடைய மனதைப் பாதிக்கும்.

### புதிய பிரச்சினைகள்

"கூகுள்" யுகத்துக்கு முன்னால் விடலைப் பருவத்தினரின் நட வடிக்கை மாற்றங்கள் கொஞ்சம் வித்தியாசமாகத்தான் இருந்தன. அதுவரை கசங்கிய சட்டை அணிந்த வன், திடீரென்று அயர்ன் செய்து நீட்டாக அணிய ஆரம்பிப்பது, எண்ணெய் வழியத் தலைசீவி சென்றவள் சிகை அலங்காரத்தை மாற்றச் சிரத்தையெடுப்பது போன்றவையெல்லாம் நடக்கும். அதையெல்லாம் தாண்டி அதிக பட்சமாக சைக்கிள் கேட்பார்கள். ஆனால், இப்போதோ "டொக்டர், என் பையன் மொபைல் போன் வாங்கிக்கொடுத்தால்தான் ஸ்கூலுக்குப் போவேன் என்று அடம்பிடிக்கிறான்" என்றோ, "ஒன்றரை லட்ச ரூபாய்க்குப் பைக் வாங்கித் தரவில்லையென்றால், வீட்டைவிட்டு ஓடிப்போய்விடுவேன் என்று மிரட்டுகிறான்" என்றோ மனநல மருத்துவரிடம் புகார் சொல்லும் அளவுக்குப் பிரச்சினைகள் சகஜமாகி வருகின்றன.

### கஷ்டப்படவிடலாமா?

சிறுவயதிலேயே குடும்பச் சூழ்நிலை, பொருளாதார நிலையைப் பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொடுத்து வளர்ப்பதில் தவறே இல்லை. "நான் பட்ட கஷ்டத்தை, என் பிள்ளைகள் அனுபவிக்கக் கூடாது" என்ற எண்ணம், பெற்றோரிடம் இருப்பது இயல்பான ஒன்றுதான். இந்த வயதில் இது தேவையில்லை என்று பெற்றோர் நினைத்தால், அதைத் தைரியமாகப் பிள்ளைகளிடம் சொல்லப் பழகவேண்டும். மிக இன்றியமையாததாகவும், அதேநேரம் விலை உயர்ந்ததாகவும் இருந்தால், அதன் மதிப்பைச் சுட்டிக்காட்டிக் கையில் கொடுப்பதில் தவறில்லை.

### நான் யார்?

பாட்ஷா படத்தில் ரஜினி, "எட்டு எட்டா மனுஷ வாழ்க்கையைப் பிரிச்சுக்கோ" என்று பாடியதைப் போல, நூறு வருடங்களுக்கு முன்னரே புகழ்பெற்ற ஜெர்மன் உளவியல் நிபுணர் எரி எரிக்சன் வாழ்க்கையை எட்டு நிலைகளாகப் பிரித்து, ஒவ்வொன்றிலும் மனதளவில் ஏற்படும் மாற்றங்களைக் கூறியிருக்கிறார்.

அதில் ஐந்தாம் நிலையான பதிமூன்று வயதில் ஆரம்பித்து இருபத்தியொரு வயதில் முடியும் பருவத்தில் ஏற்படும் முக்கிய மாற்றமாக Self என்றழைக்கப் படும் தனித்துவமும் சுயமும் உருவாவதைக் குறிப்பிடுகிறார். இந்தக் காலகட்டத்தில் தான் "தான் யார், இந்தச் சமூகத்தில் தன் பங்கு என்ன?" என்ற குழப்பம் ஏற்படும். இதற்கு Identity crisis (அடையாளச் சிக்கல்) என்று பெயர்.

அந்தக் குழப்பத்தைத் தீர்ப்பதற்காக மனம் எடுக்கும் பல முயற்சிகளில் ஒன்றுதான், தனக்குப் பிடித்த ஒருவரோடு தன்னை அடையாளப்படுத்திக் கொள்வது. விளைவாக ஒரு நடிகர், நடிகை அல்லது விளையாட்டு வீரரின் தீவிர ரசிகராக அடையாளப்படுத்திக் கொள்வது, அரசியல் தலைவரின் மானசீகத் தொண்டனாக மாறுவது, மதரீதியான நம்பிக்கைகளில் ஐக்கியமாவது போன்ற மாற்றங்கள் நடக்கும். பச்சை குத்திக்கொள்வது முதல் பாலாபிஷேகம் செய்வதுவரை, எல்லாமே இதன் வெளிப்பாடுதான்.

### தடம் மாறும் நிலை

இந்த மாற்றங்களில் பெரும்பாலானவை போகப்போக ஆரோக்கியமான முதிர்ச்சியை அடைந்துவிடும். இந்த அடையாளப்படுத்திக்கொள்ளுதல் சில நேரங்களில் எதிர் பாலின ஈர்ப்பாக மாறி, காதல் வயப்படுவதிலும் முடியும்.

சிலவேளைகளில் சமூகவிரோதக் கும்பலுடன் சேர்வது, சாதி அடிப் படையில் அடையாளம் காண்பது அல்லது போதைப்பொருள் பயன்படுத் துவது போன்ற ஆரோக்கியமற்ற செயல்பாடுகளிலும் முடிவடையலாம். பெற்றோரின் சரியான வழிகாட்டுதல், சாதகமான குடும்பச் சூழ்நிலை, ஆரோக்கியமான கல்வி போன்றவை, இந்தக் காலகட்டத்தில் சரியான பாதையைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்குவகிக்கும்.



Dr. சி.யமுனாநந்தா

# நீர் வெறுப்பு நோய்



நீர் வெறுப்பு நோய் எமது சமூகத்தில் உருப்பெருக்கம் அடையும் உயிர்க்கொல்லியாக மாறுபட்ட பரிமாணத்தில் உருவெடுத்துள்ளது. பொதுவான சுகநலப் பிரச்சினையான நாய், பூனை போன்ற செல்லப்பிராணிகளின் தீண்டல்களின் பாதிப்பினை இக்கட்டுரை விளங்குகின்றது. இந்நோய் தொடர்பான விழிப்புணர்வினை மக்கள் அறியவேண்டியது அவசியமாகிறது.



* கர்ப்பவதிகள், பாலூட்டும் தாய்மார்கள், சிறுகுழந்தைகள், முதியோர்கள், நாயினால் அல்லது பூனையினால் தீண்டப்படினும் சிகிச்சையினை எந்தத் தவிர்ப்பும் இன்றிக் கருதல் வேண்டும்.

* தொற்றுக்கு ஏதுவான நிலையில் தடுப்பு மருந்தினை எவ்வளவு விரைவாக வழங்கமுடியுமோ அவ்வளவு விரைவாக வழங்கவேண்டும். ஆனால் நோயாளி காலம் தாழ்த்திவந்தாலும் எவ்வித தடங்கலுமின்றி வழங்கப்படல் வேண்டும்.

* காயத்தினை வெறும் கைகளால் தொடக்கூடாது.

* ஏற்புத்தடை மருந்துகள் தேவைப் படுமிடத்து அளிக்கப்படல் வேண்டும்.

* நுண்ணுயிர் கொல்லி மருந்துகள் வழங்கப்படல் வேண்டும்.

சிறுவர்களில் நாய் பல இடங்களில் காயப்படுத்தி இருந்தால் அவற்றிற்கு RIG இனை 2-3 மடங்கு சேலைனில் ஐதாக்கிப் பயன்படுத்தலாம்.

* ARV கொடுத்து, ARS கொடுபடா விடின் ஒரு கிழமைவரை ARV கொடுக் கலாம். ஒரு கிழமைக்குப் பின் ARV இனால் நோய் எதிர்ப்புத் தாக்கம் உடலில் ஏற்பட்டுவிடும். ARS கொடுக்க வேண்டியதில்லை.

* RIG கொடுக்கும்போது வெறும் வயிற்றில் நோயாளி இருக்கக்கூடாது. RIG இனை அரை வெப்பநிலை அல்லது உடல் வெப்பநிலையிலேயே செலுத்தல் வேண்டும்.

* குருதிமூலம் ரேபிஸ் கிருமி பரவுவதில்லை.

* ARS ஆரம்பத்தில் கிருமித் தொற்றுதலின்போது வைரசுடன் இணைந்து வைரசு செயற்படுதலைத் தடுக்கும்.

* தடுப்பு மருந்துபோட்ட இடத்தினை உடனே தடவக்கூடாது.

* ஸ்ரொயிட் மருந்து எடுப்பவர்கள், புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள், நாட்பட்ட சிறுநீரக செயலிழப்பிற்கு உட்பட்டோருக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவு. இவர்களிற்கு தசைகளிற்கூடான தடுப்பு மருந்து அளிக்கப்படும்.

* பிராணிகள் கடிக்கும்போது உமிழ்நீருடன் உட்செல்லும் ரேவிஸ் வைரஸ் தசைக்கலங்களில் பெருகும். பின் நரம்புக்கலங்களின் ஊடாக மூளைக்குச்சென்று நோய் அறிகுறி களைக் காட்டும். பின் உமிழ்நீர் சுரப்பியில் பெருகும். உமிழ்நீரினால் கிருமி பரவும். இது கடித்தலின்மூலமும் நகக்கீறலின் மூலமும் உமிழ்நீரால் பரவும்.



* குட்டி நாய்களுக்கும் பூனை களுக்கும் நீரப்பீடனம் குறைவு. ஆதலால் விலங்கின் விசர்நோய் ஏற்படும் சாத்தியம் அதிகம்.

* ARS தடுப்பூசி பெருகும் வைரஸ் கிருமியினை நடுநிலையாக்கி அழிக்கும் ARS தடுப்பூசி உடலில் நீரப்பீடனத்தை ஒரு கிழமையில் ஏற்படுத்தி வைரசினை எதிர்த்தழிக்கும்.

* விலங்கின் விசர்நோய்க் கிருமிகள் உமிழ்நீரினால் பரவப்படுகின்றது. இது நோயுற்ற விலங்கு கடிப்பதினால் பெரும்பாலும் பரவும். முலையூட்டிகளில் இக்கிருமி வாழக்கூடிய தன்மை உடையது. ஊனுண்ணிகளிலேயே தொற்றுதல் அடையும்நிலை காணப்படும்.

* ஊனுண்ணிகளின் எச்சில் அவற்றின் நகத்தில் படும்போது அவற்றில் ரேபிஸ் கிருமி காணப்படின் நகத்தீண்டலின் பொது கிருமித் தொற்றுதலுக்கு ஏதுவாக அமையும்.

**15.நீர்வெறுப்பு நோய் தொடர்பான ஐயங்களும் விடைகளும்**

01.எந்த மிருகங்களிற்கு விலங்கின் விசர்நோய் ஏற்படுகின்றது? பொதுவாக நாய்களிற்கும், ஊனுண்ணிகளுக்கும் விலங்கின் விசர்நோய் ஏற்படலாம்.


02. மனிதன் எவ்வாறு விலங்கின் விசர்நோய்த் தொற்றுக்கு ஆளாவார்?

விலங்கின் விசர்நோயுடைய நாய் கடிப்பதால், மூளைக்கு கிருமி சென்று பருக ஆரம்பித்தால் இறப்பு நிச்சயம்.

(தொடரும்...)



# தொப்பையை குறைக்க 3 டிப்ஸ் !!



✷ காலை எழுந்தவுடன் மிதமான சுடுநீரில் தேன்கலந்து பருகிவந்தால், இரண்டு மாதங்களில் உடல் இளைத்து விடும். உடம்பிலுள்ள கூடுதல் கொழுப்பை தேன் எளிதில் கரைத்துவிடும்.

✷ இஞ்சியை சாறு பிழிந்து, தேன்விட்டு சூடுபடுத்தி, ஆறவைக்க வேண்டும். காலை உணவுக்கு முன் ஒரு கரண்டியும், மாலையில் ஒரு கரண்டியும் உட்கொண்டு, வெந்நீர் அருந்திவந்தால், 40 நாட்களில் தொப்பை குறைந்துவிடும்.

✷ இளம்பெண்கள் உட்பட அனைவரின் தொப்பையும் கரைக்கும் சக்தி அன்னாசிக்கு உண்டு. ஓர் அன்னாசிப்பழத்தை சிறு துண்டுகளாக நறுக்கி நான்கு தேக்கரண்டி ஓமத்தை பொடிசெய்து அதில் போட்டு நன்றாகக் கிளறி ஒரு டம்ளர் தண்ணீர் ஊற்றிக் கொதிக்கவிடவும். இரவில் அதை அப்படியே வைத்திருந்து மறுநாள் காலை யில் அதைப் பிழிந்து சாறு எடுத்து வெறும் வயிற்றில் சாப்பிடவும். இந்த முறைப்படி பத்து நாட்கள் தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் உங்கள் தொப்பை கரைய ஆரம்பிக்கும்.

# இளநரை போக்கும் முசுமுசுக்கை தைலம்



கொடி வகையைச் சேர்ந்த முசுமுசுக்கை, சுவர்களிலும், தரைகளிலும் தானாக வளர்ந்திருக்கும். இது நுரையீரல் நோய்கள், சுவாசக் கோளாறு களை நீக்கவல்லது. சுவாசக்குழல், சுவாசப்பையில் நுண்ணறைகளில் ஏற்படும் ரணம், அழற்சி ஆகியவற்றை ஆற்றிவிடும் ஆற்றல்கொண்டது.

மேலும் சுவாசப்பைகளில் உண்டாகும் கபத்தை அகற்றி அதனை சுத்தம் செய்யும் சக்தி உடையது. அமைதியின்மை போக்கும் இக்கீரையை நன்றாக ஆய்ந்து புழுங்கல் அரிசியுடன் சேர்த்து மாவாக அரைத்து தோசை, அப்பம் சுட்டு சாப்பிடலாம்.

இதனை வழக்கமாக உணவில் சேர்த்துக்கொள்ள நாட்பட்ட நோய்களால் தளர்ந்துபோன உடல் பலமடையும், மனதில் அமைதியின்மை, கோபம் ஆகியவற்றையும் சரி செய்யக்கூடியது இந்த முசுமுசுக்கை கீரை. உயர் ரத்த அழுத்த நோயினை இது குணப்படுத்த வல்லது. சளி, இருமல், வரட்டு இருமல், இழுப்பு வலிகள் போன்றவற்றையும் ஒழித்துக்கட்டும். ஆஸ்துமா குணமாகும் முசுமுசுக்கையை சூரணமாக செய்து உட்கொள்ள நாட்பட்ட எலுப்புருக்கி, ஆஸ்துமா, காசநோய், இளைப்பு நோய், இரத்த சுவாசநோய் போன்றவை குணமடையும்.

முசுமுசுக்கை இலை எடுத்து சமஅளவு நல் லெண்ணெய் சேர்த்து காய்ச்சி வைத்துக்கொண்டு அந்த எண்ணெயைத் தலைக்குத்தேய்த்து வந்தால் இளநரை மாறும். ஆஸ்துமா, காசநோய், இளைப்பு நோய், இரத்த சுவாசநோய் போன்றவை குணமடையும்.



துளசி இலைக்கு மன இறுக்கம், நரம்புக் கோளாறு, ஞாபகசக்தி இன்மை, ஆஸ்துமா, இருமல் மற்றும் பிற தொண்டை நோய்களை உடனு க்குடன் குணமாக்கும் சக்தி உண்டு. துளசி இலைச்சாறில் தேன், இஞ்சி முதலியன கலந்து ஒரு தேக்கரண்டி அருந்தலாம். சளி, இருமல் உள்ள குழந்தைகளுக்கு தினமும் மூன்று வேளை மூன்று தேக்கரண்டி இந்த துளசிக் கஷாயம் கொடுத்தால் போதும், ஆங்கில மருத்துவத்தில் தரப்படும் அன்ரிபயோட்டிக்குகள் நல்லதல்ல.

குகன்

# முதியோர் இல்லம்



என்ன தான் சுதந்திரமாக திரிந்தாலும், சிவகாமிக்கு இந்த இடம் திறந்த சிறைவாசமாகத்தான் இருந்தது. உறவுகள் இருந்தும் அநாதையாக வாழ்வது எவ்வளவு கொடுமை. வாழும் வயதில் கணவனை இழந்து, இரண்டு மகன்களை கஷ்டப்பட்டு படிக்கவைத்து கரைசேர்த்ததற்கு அவளுக்கு கிடைத்த பரிசு "முதியோர் இல்லம்" என்ற சிறைதான்.

"என்ன சிவகாமி அம்மா... காலையில இருந்து ஒன்னும் சாப்பிடாம இருக்கீங்க...?" என்று காமாட்சி பரிவுடன் கேட்டாள். இந்த முதியோர் இல்லத்தில் புதிதாக சேர்ந்தவள். மகள் திருமணத்தை முடித்து யாருக்கும் தொல்லைக் கொடுக்க கூடாது என்று அவளே இங்கு வந்து சேர்ந்துவிட்டாள். இந்த இல்லத்தில் வந்துசேர்ந்ததில் கவலைப்படாத ஒரே ஜீவன் இவளாகத்தான் இருக்க முடியும்.

காமாட்சி வந்துசேர்ந்த பிறகு தான், அங்கு தங்கி இருந்த மற்றவர்கள் மனதில் புதுநம்பிக்கை பிறந்தது. குறிப்பாக சிவகாமிக்கு. தன் பிள்ளைகள் தோள்கொடுக்க வேண்டிய வயதில் சிவகாமிக்கு கிடைத்த சக வயது தோழி தான் காமாட்சி.

"என்ன சிவகாமி அம்மா... எதுவுமே பேசமாட்டீங்றீங்க.." என்றாள்.

"இன்னையோட நான் இங்க வந்து நாலு வருஷம் ஆகுது.." என்று கண்களில் நீர் தழும்ப சிவகாமி கூறினாள்.

"நாள் போற வேகத்துல இன்னுமா இந்த திகதி உங்களுக்கு ஞாபகம் இருக்கு.." என்றாள் காமாட்சி.

சிவகாமி எதுவும் பேசவில்லை. தன் வலி பற்றி அவளுக்கு தெரியாது. தெரிந்தாலும் பெரிதாக பாதிப்பு ஒன்று அவளுக்கு இருக்கப்போவதில்லை. சிவகாமியை போல பல கதைகள் காமாட்சிக்கு கேட்டு பழகிவிட்டது. ஆனால், சிவகாமி அப்படியில்லை. தன் கதையே பெரிய கதை என்று நினைத்து வருந்திக் கொண்டு இருந்தாள்.

சிவகாமி நினைவலைகள் பின்னோக்கி சென்றன.

தன் கணவன் அரசாங்க உத்தியோகம் பார்த்ததால், அவர் இறந்ததும் அந்த வேலை சிவகாமிக்கு கிடைத்தது. அந்த வேலை கிடைத்ததால் தன் இரண்டு மகன்களை நன்றாக வளர்த்தாள். முத்த மகன் பெயர் "ராஜசேகர். இரண்டாவது மகனின் பெயர் ராஜமோகன். ராஜா மாதிரி வளர்க்கவில்லை என்றாலும் பெயரிலாவது ராஜா இருக்கட்டும் என்று வைத்துவிட்டாள்.

தன் மூத்தமகன் ராஜசேகர், தன் மகன் சத்யா வெளிநாட்டில் படிப்பதற்காக கூட்டுக்குடும்பம் நடத்தும் வீட்டை விற்று பணம் தரச்சொன்னான். ஆனால், இளைய மகன் ராஜமோகன் முதலில் விற்க மறுத்தான். ஆனால், அவன் மனைவி தனிக்குடித்தனம் போகுவதற்கு இது சரியான சந்தர்ப்பம் என்று அவனை சம்மதிக்க வைத்துவிட்டாள். தன் காலம் முடியும்வரை வீடு விற்கக்கூடாது என்று பிடிவாதமாக இருந்தவள் தன் பேரன் படிப்புக்கு உதவியாக இருக்கும் என்று வீடு விற்க சம்மதித்தாள்.

வீடு விற்ற பிறகு பணத்தை பிரித்துக் கொண்டார்கள். ஆனால், சிவகாமியை.... ??

"அண்ண வீட்டில் இரும்மா" என்று தம்பியும், "தம்பி வீட்டில் இரும்மா" என்று அண்ணனும் கூறி, கடைசியில் அவளை முதியோர் இல்லத்தில் சேர்த்துவிட்டனர்.

"சிவகாமி அம்மா... இந்த உலகத்துல தான் இருக்கீங்களா...." என்று காமாட்சி கூறியதும், தன் நினைவலைகளில் இருந்து விடுபட்டாள்.

"சின்ன வயசுல என் இரண்டு பசங்க பொம்மைக்காக சண்டபோடுவாங்க. நான் போய் சமாதானம் பண்ணுவேன். பேரன் பேத்தி கல்யாணத்த பார்க்கலாம்னு இருக்குறப்போ... சொத்துக்காக அடிச்சிக்கிட்டவங்க. அம்மாவ பத்தி யோசிக்கவே இல்ல..." என்று சொல்லும் போது சிவகாமி கண்கள் கலங்கியது.

"விடுங்க சிவகாமி அம்மா... பந்தயத்துல ஓடமுடியாத குதிரைய சுட்டுக்கொல்லுற உலகம். வயசான மனுஷங்களுக்கு வாழ இந்த மாதிரி இடமாவது இருக்கே! சந்தோஷப்படுங்க..." என்று ஆறுதலாக காமாட்சி கூறி சிவகாமியை தேற்றினாள்.

இவ்வளவு பெரிய வார்த்தை. பந்தயத்தில் ஓடும்வரைக்கும் தான் குதிரைக்கு பெருமை. மனிதனுக்கு அப்படித்தான். ஓட்டம் அடங்கிவிட்டால், இறந்துவிடுவது நல்லது. இல்லை என்றால் இதுபோன்ற இடங்களை எல்லாம் பார்க்கவேண்டும் என்று சிவகாமி மனதில் நினைத்துக் கொண்டாள்.

"சிவகாமி மேடம்... உங்கள பார்க்க யாரோ வந்திருக்காங்க..." என்றாள் காப்பாளர் சுதா.

இந்த நான்கு வருடங்களில் தன்னை யாரும் பார்க்க வராதபோது இப்போது யார் வந்தது என்று சிவகாமி குழப்பமாக இருந்தது. சிவகாமி வெளியே வந்த பார்த்தும் தன்னை அறியாமல் வந்தவனை கட்டிப்பிடித்து முத்தமிட்டாள். வந்தவன் அவள் பேரன் சத்யா.

சந்தோஷத்தில் சிவகாமியால் எதுவும் பேசமுடியவில்லை. அவன் பேரன் சத்யா நலம் விசாரித்தும் பதில் அளிக்காமல் இருந்தாள். கொஞ்ச நேரத்தில் காப்பாளர் சுதா அங்கு வந்தாள். "சிவகாமி மேடம். உங்க பேரன் உங்கள அழைச்சிட்டு போக தான் வந்திருக்காரு.." என்றாள்.

சிவகாமிக்கு என்ன சொல்லுவதென்றே தெரியவில்லை. ஆனால், சிவகாமி அந்த இடத்தை விட்டுவர அவளுக்கு மனமில்லை.

"பாட்டி..! எங்க அப்பா, அம்மா பண்ண தப்புக்கு நான் பிராயச்சித்தம் பண்ணுறேன். என்கூட வாங்க... என்றான். நான் வரல. இங்கையே என் கடைசி காலத்துல இருந்துடுறேன்." என்று பிடிவாதம் பிடிக்கும் குழந்தை போல் கூறினாள். பல ஆறுதலான வார்த்தைகள் சத்யா கூறியும் சிவகாமி கேட்கவில்லை.

கடைசியில், "நீங்க இப்ப வரல... உங்களுக்கு கம்பேனியா எங்க அப்பா, அம்மாவையும் இங்க வந்துவிட்டுவேன்" என்றான்.

"டேய் அப்படியெல்லாம் சொல்லாத. என் மகன் கேட்டா தாங்கமாட்டான்!" என்று சிவகாமி கூறி, தன் மகனுக்கு இல்லாத அன்பும், பாசமும் தன் பேரனுக்கு இருப்பதை சந்தோஷப்பட்டாள்.

பிறகு, காப்பாளர் சுதா, காமாட்சி என்று பலர் சிவகாமியிடம் பேசி சம்மதிக்க வைத்தனர். சத்யா தன் பாட்டியை காரில் முன் பக்கம் அமர வைத்து ஓட்டி சென்றான்.

பிணங்களாக முதியோர் இல்லத்தில் விட்டு செல்பவர்கள் மத்தியில், முதல் முறையாக உயிருடன் செல்லும் சிவகாமியை பார்த்து காப்பாளர் சுதா சந்தோஷப்பட்டாள்.

# அம்மா



**காலை** எழுந்தவுடன் ராமு கோபமானான். அன்றும் அவனின் அம்மாவிற்கும் மனைவிக்கும் சண்டை. காலையில் சூரியஒளி தாக்கி அவன் எழுந்ததைவிட சத்தத்தில் எழுந்ததுதான் அதிகம். அது தினமும் நடக்கும் ஒரு நிகழ்ச்சி. என்ன செய்வது என்று தெரியவில்லை அவனுக்கு.

ராமுவின் மனைவியின் பெயர் சீதா. அவள் அன்று இரவு தன் கணவனிடம் அவனின் அம்மாவை முதியோர் இல்லத்தில் சேர்த்துவிடச் சொன்னாள். முதலில் மறுத்த ராமு பின்பு தன் மனைவியின் வற்புறுத்தலால் ஒத்துக்கொண்டான்.

மறுநாள் காலையில் அவனின் அம்மாவிடம் அதை சொன்னான். அவள் உடைந்தேபோனாள். தன் மகனுக்காக அவளின் வாழ்க்கையை முழுவதாக அர்ப்பணித்தவள். அவனுக்காகவே வாழ்ந்தவள். வேண்டாம் என்று கெஞ்சினாள். பலன் இல்லை.

அன்று மாலையிலேயே அது நடந்தது. ராமு தன் தாயை முதியோர் இல்லத்தில் விட்டுவிட்டு வந்தான்.


மூன்று நாட்களுக்கு பிறகு ராமு முதியோர் இல்லம்வந்து தன் தாயை வீட்டிற்கு அழைத்துச்சென்றான். அவளுக்கு ஒன்னும் புரியவில்லை. தன்னை விட்டுச்சென்ற மகனே வந்து அழைத்து செல்கிறானே என்று.

வீட்டிற்கு வந்தவளுக்கு மேலும் ஒரு அதிர்ச்சி. எப்பொழுதும் தன்னுடன் சண்டைபோடும் மருமகள் இப்பொழுது கனிவுடன் நடந்துகொள்கிறாள். அன்புடன் பேசுகிறாள். இந்த திடீர் மாற்றம் ஏனென்று அவளுக்கு புரியவில்லை. எல்லாம் கடவுளின் செயல் என்று நினைத்தாள். கடவுளுக்கு நன்றிகூறினாள்.

ஆனால் உண்மையில் நடந்தது. அந்த நாளுக்கு முன்னால் இரவில் ராமுவும் சீதாவும் டி.வி பார்த்துக்கொண்டிருந்தனர். அப்பொழுது அவர்களின் பத்து வயது மகன் ரவி வந்தான்.

அவனின் பெற்றோரிடம் சென்று அவர்களிடம் ஒரு கேள்வி கேட்கவேண்டும் என்று சொன்னான். அவனின் தந்தையும் கேளு என்று சொன்னான். ரவிகேட்ட கேள்வி. "அப்பா நீங்களும் அம்மாவும் வயசான பிறகு, ஏனக்கு கல்யாணமான பிறகு உங்களையும் அம்மாவையும் நான் முதியோர் இல்லத்தில் சேர்த்துடனுமாபா?"





# தாயை நினைத்துக்
# கண்ணீர் உகுத்தார் பிரதமர் மோடி

அமெரிக்கச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய பிரதமர் மோடி பேஸ்புக் தலைநகரான மெல்னோ பார்க்கில் அந்நிறுவனத்தின் முதன்மை இயக்குநர் மார்க் ஷூக்கர்பேர்க் அவர்களுடன் ஒரு சந்திப்பு நிகழ்வில் கலந்து கொண்டார்.

இந்தியாவை 20 ட்ரில்லியன் பொருளாதார இயங்குதளமாக மாற்றுவதே இச்சந்திப்பின்மூலம் தெரிவிக்க விரும்பும் தனது இலட்சியம் என்று தெளிவுறுத்தினார், பிரதமர்.

இச்சந்திப்பைப் பொதுவெளியில் வைத்துக்கொள்ளச் சம்மதித்தத் மோடி அவர்கள் ஐந்து கேள்விகளுக்கு விடையளிக்கவும் சம்மதித்தார். அந்தக் கேள்வி பதில் கலந்துரையாடலின் விவரங்கள் இதோ:

**கேட்பவர்:** மார்க் ஷூக்கர்பேர்க்

இந்திய அரசியலிலும், அரசு செலுத்துவதிலும், திட்டங்கள் தயாரிப்பதிலும், சமூக வலைதளங்களின் பங்களிப்பு என்ன?

**பதில் :** 'ரியல்டைம் நியூஸ்' எனப்படும் உடனடிச் செய்திகளைப் பகிர்வதில் பெரும் பங்காற்றுகின்றன சமூக வலைத்தளங்கள். முன்பெல்லாம் ஆட்சியாளர்கள் தவறு செய்தால், மக்கள் ஐந்தாண்டுகள் காத்திருக்க வேண்டும். தற்போது ஐந்து நிமிடங்களில் மக்கள் தீர்ப்பளித்துவிடுகின்றனர். என் செயல்பாடுகளையே கூட, சமூக வலைத்தளங்களில் தொடர்ந்து மதிப்பிட்டு வருகின்றனர்.

பன்னாட்டுக் கொள்கைகளிலும் சமூக வலைத்தளங்கள் பெரும் பங்குவகிக்கின்றன. இஸ்ரேல் பிரதமரை நான், ஹீப்ரியூ மொழியில் வாழ்த்தியதும், அவர் எனக்கு ஹிந்தியில் நன்றி தெரிவித்ததும் சமூக வலைத்தளங்களின் சாதனையே.

**கேட்பவர் : வீர் கஷ்யப், பாபாஜாப்ஸ் நிறுவனம்**

டிஜிட்டல் பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் இன்றைய உலகில், இந்தியாவில் டிஜிட்டல் கட்டுமானங்களுக்காக நீங்கள் செய்யவிருக்கும் முதலீடு என்ன?

**பதில் :** இன்றைய சூழலில், 'ஹை-வே' எந்த அளவு முக்கியமோ அதே அளவு 'ஐ-வே' வும் முக்கியம். அதாவது, வெளியுலகக் கட்டுமானக்களுக்கு இணையான முக்கியத்துவம் வாய்ந்ததாக இணையக் கட்டுமானம் விளங்குகிறது.

இந்தியாவிலுள்ள 600.000 கிராமங்களுக்கும் அடுத்த 5 ஆண்டுகளுக்குள் 'அப்டிக் ஃபைபர்' வசதியுடன்கூடிய இணையத்தின் வசதி ஏற்படுத்தித்தருவதே எனது திட்டமாகும்.

பணத்தை எங்கு முதலீடு செய்வதென்று தெரியாமலிருக்கும், உலகப் பெருமுதலீட்டாளர்களுக்கு நான் இந்தியாவின் விலாசத்தை வழங்குகிறேன்.

**கேட்பவர்: டி.எஸ். கரோனா, அமெரிக்க வணிகர்**

'மேக் இன் இந்தியா' திட்டம் வெற்றி அடையும் என்று நினைக்கிறீர்களா?

**பதில் :** தடம்புரண்ட இரு சக்கர வாகனத்தைத் திருப்புவது எளிது. ஒரு பெரிய ரயிலைத் தடம் திருப்புவது கடினம். அரசாங்கத்திற்கு கொஞ்சம் அவகாசம் தேவை.

40 ஆண்டுகளாக வங்கிக் கணக்குக் கூட இல்லாத, 180 மில்லியன் குடிமக்களுக்கு, இந்த அரசு, 100 நாட்களுக்குள் வங்கிக் கணக்குத் திறந்து கொடுத்திருக்கிறது.

இந்தியப் பொருளாதாரத்தைப் பொறுத்தமட்டில் 3டி மந்திரத்தை நம்புகிறோம்

அது முறையே, டெமாகிரஃபி, டெமாக்ரசி, டிமாண்ட் அதாவது, மக்களியல், குடியரசு, மற்றும் பொருளாதாரத் தேவை இங்கு நிறைந்திருக்கிறது.

நான்காவது 'டி' யாக 'டி-ரெகுல்ரைசேஷன்' அதாவது, முறைச்சுருக்குதல் யுக்தியைக் கையாள்கிறேன். இதன் மூலம் அரசாங்கத்தைச் சுருக்கி, வளர்ச்சியை மேம்படுத்துவேன். எனவே 'மேக் இன் இந்தியா' திட்டம் நிச்சயம் வெற்றியுடன் நிறைவேறும்.

**கேட்பவர் :**
**முனைவர் இரஞ்சனா குமாரி**

பாரதத்தின் வளர்ச்சிப் பாதையில் பெண்களின் பங்கு என்ன?

**பதில் :** உலகிலேயே, பெண்களைத் தெய்வமாக வழிபடும் நாடு நம் பாரத பூமிதான். 50 விழுக்காட்டிற்கும் மேலாக இருக்கும் இந்த மனித சக்தியை, வீட்டிற்குள் பூட்டிவைக்க இயலாது. 'பேட்டி பசாஓ, பேட்டி படாஓ' திட்டத்தின் மூலம் எத்தனையோ கிராமத்துப் பெண்கள் கல்வி பெற்று முன்னேறி வருகின்றனர். அடுத்தகட்டமாக, முடிவெடுக்கும் பொறுப்புகள் இருக்கும் பணியிடங்களுக்குப் பெண்கள் வர வேண்டும் என்பதே என் கனவு.

**கேட்பவர் : மார்க் ஷூக்கர்பேர்க்**

எனக்கும் உங்களுக்கும் ஒரு ஒற்றுமை. நாம் இருவருமே குடும்பத்திற்கு முக்கியத்துவம் தருபவர்கள். எனவேதான் என் தாய் தந்தையரை இங்கே அழைத்து வந்திருக்கிறேன். உங்கள் தாயைப் பற்றிய உங்கள் நினைவுகளை எங்களோடு பகிர்ந்துகொள்வீர்களா?

**பதில் :** முதலில் உங்கள் தாய்க்கு என் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். உலகத்தையே இணைக்கும் ஒரு மகனைப் பெற்றெடுத்ததற்காக அவர் பெருமைப்பட வேண்டும்.

என் வாழ்வில் மட்டுமல்ல எல்லோர் வாழ்விலும் இரண்டுபேரை மறக்க முடியாது.

ஒன்று ஆசிரியர் மற்றொன்று தாய்.

என் தாய் தான் என் வாழ்வின் ஆக்கசக்தி. சிறிய வயதில், நான் டீ விற்றுக் கொண்டிருந்தேன். இன்று உலகின் மாபெரும் குடியரசின் பிரதம மந்திரியாக வீற்றிருக்கின்றேன் என்றால் அதற்குக் காரணம் என் தாய்தான்.

என்னைப் பொறுப்புடன் வளர்ப்பதற்காக அவர் உழைக்காத நாளேயில்லை.


இந்தச் சொற்களை உதிர்க்கையில் தன்னையும் மீறித் தொண்டை செருமி, கண்ணில் சிறு துளிகள் பனிக்கின்றன. அதைக் கட்டுப்படுத்திக் கொண்டு பதிலளிக்கிறார் பிரதமர்.

என் தாய்க்கு எழுதப் படிக்கத் தெரியாது. ஆனால் எல்லோரும் படிக்கவேண்டும் என்று சொல்லுவார்.

தள்ளாத இந்த வயதிலும் தன் வேலைகளைத் தானே பார்த்துக்கொள்வார். தினந்தோறும் செய்திகள் கேட்பார்.

என் தாய் மட்டுமல்ல. நம் நாடு முழுவதும் இலட்சக்கணக்கான தாய்மார்கள், தங்கள் பிள்ளைகளின் கனவுகளை நிறைவேற்றத் தங்கள் வாழ்க்கையையே அர்ப்பணித்து வருகின்றனர். அந்தத் தாய்மார்களின் ஆசீர்வாதம் நம் நாட்டிற்குச் சக்தியளிக்கட்டும் என்று, பிரதமர் தன் பதிலை நிறுத்திக்கொண்டவுடன், அரங்கத்தில் அனைவரும் எழுந்து நின்று கைதட்டினர்.

முகநூலுடன் இணைந்திருப்பது உலகத்துடன் இணைந்திருப்பதற்குச் சமம் என்று கூறிய பிரதமர், இந்த சந்திப்பின்மூலம் மிகுந்த மகிழ்ச்சியடைந்ததாகத் தெரிவித்தார்.



# மரணத்திற்குப் பிறகு நாம் எங்கு போகிறோம்?

**கேள்வி:** சத்குரு, மரணத்திற்குப் பிறகு நாம் எங்கு போகிறோம்? ஏற்கனவே மரணம் அடைந்தவர்களுடன் பேச சிலர் உதவிசெய்வதாக விளம்பரம்கூட செய்கிறார்களே, அதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?

**சத்குரு:** மரணம் அப்புறம்..

மரணத்திற்குப் பிறகான வாழ்க்கை பற்றி ஏன் கவலைப்படுகிறீர்கள்? ஏறக்குறைய 99வீதம் மனிதர்களுக்கு தங்கள் தற்போதைய வாழ்க்கையையே சரிவரக் கையாளத் தெரியவில்லை. ஆனால் மரணத்திற்குப் பிறகு வாழ்க்கை என்னவாகும் என்று ஆராய்ச்சி செய்கிறார்கள். அதில் என்ன பயன் இருக்கிறது? இப்படி ஒரு எண்ணம் ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணமே மனிதர்களுக்கு எங்கோ மரணமில்லாத வாழ்க்கை வாழவேண்டும் என்கிற ஆசை இருக்கிறது. அவர்கள் ஒரு பெரிய அட்டவணையே வைத்துக்கொண்டு அத்தனையையும் வாழ்ந்து பார்த்துவிட எண்ணுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு வருகிற ஞாயிற்றுக்கிழமை காலையில் என்ன செய்வது என்று இன்னமும் திட்டமிட்டிருக்கமாட்டார்கள். இல்லையா?

பலபேருக்கு அவர்களுடைய அன்றாட வாழ்க்கையில் ஒரு விடுமுறை வந்தால் அப்போது என்ன செய்வதென்றே புரிவதில்லை. இத்தகைய மனிதர்களுக்கு மரணமில்லாமல் நிலையாக இருப்பதற்கு ஆசை. இந்த 50 ஆண்டுகால வாழ்க்கையையே எப்படி வாழவேண்டும் என்று தெரியாத இவர்கள் நிலையாக வாழத் தொடங்கினால் எப்பேர்ப்பட்ட குழப்பத்தை ஏற்படுத்துவார்கள் என்று யோசிக்க வேண்டும். எனவே, மரணத்திற்குப் பிறகு வாழ்க்கை என்னவாகும் என்றெல்லாம் நீங்கள் கவலைப்படாதீர்கள்.

**ஆவிகளுடன் பேசுபவர்கள்...**

தங்களுக்குள் யோசிப்பதைத் தாண்டி சிலர் வேறுவகையான முயற்சிகளில் இறங்குகிறார்கள். தங்களை ஆவிகளுடன் பேசுகிற மீடியம் என்று கூறிக்கொள்பவர்களை அணுகி ஏற்கனவே மரணம் அடைந்தவருடன் தொடர்புகொண்டு மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கையைப் பற்றி அறிய ஆர்வம் காட்டுகிறார்கள். மீடியம் என்று சொல்லிக்கொள்பவர்களும் சரி, அவர்கள் மூலம் இறந்தவர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ள நினைப்பவர்களும் சரி, ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் விரும்புகிற எண்ணிக்கையில் பேய்களை, பிசாசுகளை, ஆவிகளை, கடவுள்களை எல்லாம் உருவாக்கிக்கொண்டே போகலாம். உங்களுக்குள் இது உண்மை என்றும் கூட தோன்றச் செய்யலாம். அத்தகைய மாயைகளை ஏற்படுத்துகிற ஆற்றல் மனதுக்கு உண்டு.

எனவே, இது வெறுமனே, உங்கள் மனதின் விளையாட்டு. நீங்கள் உங்களோடும், மற்றவர்களோடும் உளவியல் ரீதியாக விளையாடுகிற ஒரு விளையாட்டு. இது மனிதர்களின் வளர்ச்சிக்கு எந்த வகையிலும் துணை செய்யாது. இது உங்களுக்கு இன்னும் ஒரு பொழுது போக்கு. இன்னொரு திரைப்படம் பார்ப்பது போல. வாழ்க்கையில் உயர்நிலை எட்டாமல் தடைப்பட்டுப் போக இதுவும் ஒரு வழி. அவ்வளவுதான். இது உங்களை எந்தவகையிலும் வளரவிடாது.

எனவே, மீடியம் என்று சொல்லிக் கொள்பவர்களும் சரி, அவர்களை அணுகுகிறவர்களும் சரி, தங்களைச் சுற்றி உயிரோடு இருப்பவர்களுடன் நல்ல தொடர்பு வைத்துக்கொள்வது வாழ்க்கைக்கு நல்ல பயனுள்ளதாக இருக்கும்.





# காதல் காதல் போயின் சாதல் சாதல்

மனிதனின் அடிப்படை தேவைகள் மூன்று. அவை உணவு, உடை, உறையுள் என்று முன்னர் வந்த அறிஞர்கள் சொல்லிச் சென்றனர். அவற்றுடன் கல்வி, சுகாதாரம் என்று இன்னும் இரண்டை கோர்த்து கொண்டனர் பின்னர் வந்த புத்திசாலிகள். ஆனால் மனி தனின் அடிப்படை தேவை ஒன்றே ஒன்று. அதுதான் காதல் என்று சொல்லி நிற்கின்றது. உலகில் முதன்முதல் கடவுளால் படைக்கப்பட்ட மனிதர்கள் ஆதாம் என்கிற ஆணும், ஏவாள் என்கிற பெண்ணும் என்று பைபிள் சொல்கின்றது.

மனிதகுலம் தோன்றிய அன்றே தோன்றிவிட்டது காதல். இதனால்தான் ஆதிமனிதன் காதலுக்கு பின்னே அடுத்த காதலும் இதுதான், ஆதாம், ஏவாள் ஜோடிக்கு பின்னே அடுத்த ஜோடியும் இதுதான் என்று

கவிஞன் கண்ணதாசன். தமிழ் இலக்கிய வரலாற்றின் மிகவும் பழைமையான காலம் சங்க காலம். மனி-தனின் இயற்கை உணர்வுகள் இரண்டு. ஒன்று காதல். இன்னொன்று வீரம் என்று நம்பப்பட்ட காலம் இது. காதல் உள்ளம் சார்ந்த உணர்வு என்றும் வீரம் உடல் சார்ந்த உணர்வு என்றும் விசுவாசிக்கப்பட்ட காலம் இது. இதனால்தான் இக்காலம் இயற்கை நெறிக் காலம் என்று அழைக்கப்பட்டது. காதல்தான் ஒழுக்கம் என்று தமிழன் வாழ்ந்த காலம் இது. இதனால் இக்காலம் காதல் ஒழுக்கக் காலம் என்று பெயர் பெற்றது. கண்டது காட்சி. கொண்டது கோலம் என்று தமி ழன் இக்காலத்தில் வாழ்ந்தான் என்பார்கள்.

இக்காலகட்டத்தில் காதலுக்கு ஒழுக்கம் வகுத்தான் தமிழன். புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்பன அவை. தமிழன் வாழ்ந்த இடங்களின் இயல்புக்கு ஏற்ப இந்த ஒழுக்கங்களும் அந்தந்த இடங்களுக்கு உரித்தாகின. குறிஞ்சி என்று சொல்லப் படுகின்ற மலையும், மலைசார்ந்த இடத்துக்கு புணர்தலும், பாலை என்று சொல்லப்படுகின்ற வறண்ட இடத்துக்குப் பிரிதலும், முல்லை என்று சொல்லப்படுகின்ற காடும், காடுசார்ந்த இடத்துக்கு இருத்தலும், நெய்தல் என்று சொல்லப்படுகின்ற கடலும், கடல் சார்ந்த இடத்துக்கு இரங்கலும், மருதம் என்று சொல்லப்படுகின்ற வயலும், வயலும் வயல் சார்ந்த இடத்துக்கு ஊடலும் உரித்தான ஒழுக்கங்கள் ஆகின.

புணர்தல் என்பது கூடுதல். பிரிதல் என்பது விட்டு நீங்குதல். இருத்தல் என்பது காத்திருத்தல். இரங்கல் என்பது உருகுதல். ஊடல் என்பது பொய்யாக கோபித்தல். இவை ஐந்திணை ஒழுக்கங்கள் அல்லது காதல் ஒழுக்கங்கள் என்று பெயர் பெற்றன. காதல் ஒழுக்கங்களுக்கு என்று ஒவ்வொரு கடவுளர்கள் விளங்கினர்.

புணர்தலுக்கு முருகனும், பிரிதலுக்கு கொற்றவையும், இருத்தலுக்கு திருமாலும், இரங்கலுக்கு வர்ணனும், ஊடலுக்கு இந்திரனும் கடவுளர்கள் ஆனார்கள். இதனால்தான் "வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே என்று அருணகிரிநாதர் பிற்காலத்தில் முருகனைப் பாடினார். சங்க காலத்தில் கவிஞர்களால் பெரிதும் பாடப்பட்டவை காதலும், வீரமும்தான்.

இக்கால காதல் பாடல்கள் அகநானூறு என்கிற பெயரில் தொகுத்து வைக்கப்பட்டு உள்ளன. ஒவ்வொரு நிலங்களுக்கும் உரிய ஒழுக்கங்களை இக்கால காதல் பாடல்கள் பிரதிபலித்தன. காதல் முன்வினைத் தொடர்பு என்று சங்க காலத்தில் நம்பப்பட்டது. இதனால்தான் கால நேரம் பாராமல், காரணம் இல்லாமல் காதல் வருகின்றது என்கிற கருத்தில் அன்று முதல் இன்று வரை நிலைபெற்று நிற்கின்றது. Love Has No Reason And Season என்கிற சேக்ஸ்பியரின் வரிகளையும் நாம் இந்த இடத்தில்.நினைவில் கொள்ளலாம். ஒவ்வொரு மனிதர்களுக்கும் எந்தவொரு உறவும் மூன்று விதமாக வரலாம். தாய்வழி உறவு, தந்தை வழி உறவு, நண்பர் வழி உறவு என்பனவே. அவை. இந்த மூன்று வழி உறவுகளுக்கும் அப்பால் பட்ட நிலையில் வருவது காதல். தெய்வ சித்தம் அல்லது முன் வினைத் தொடர்புதான் காதல்.

வானத்தில் இருந்து பெய்கின்ற மழைக்கும், செம்மை நிறம் உடைய மண்ணுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. ஆனால் அம்மழை செம்மணலில் வந்து பட்ட கணத்திலேயே மழைநீர் சிவப்பு நிறத்தை பெற்றுவிடுகின்றது. இது போல தான் காதல் என்று நம்பப்பட்டது. செம்புலப் பெயல் நீர் போல் அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே என்பது சங்க காலப் பாடல்களில் ஒன்று.




**✪ ஐக்கிய நாடுகள் சபையின் நாடகம் முடிந்து விட்டதாக நினைக்கின்றீர்களா சிந்தியா?**

**என்.அஸ்வத், அக்கரைப்பற்று.**

பதில்: சரியாகச் சொன்னீர்கள். ஐ.நாவின் மனித உரிமைகள் எனும் நாடகம் முடியாது. அது மெகா மெகா தொடர்நாடகம். எந்தவொரு நாட்டிலும் போர் நடக்கும்போதும், மனித உயிர்கள் பறிகொடுக்கப்படும்போதும் பார்வையாளராக இருந்துவிட்டு, பிறகு ஒரு திரைக்கதையை எழுதி நாடகத்தை அரங்கேற்றுவார்கள். அடங்கிப்போனால் அந்த அரசை கதாநாயகர்களாக்குவார்கள், முரண்டுபிடித்தால் அந்த அரசை கோமாளியாக்கிவிடுவார்கள்.

**✪ ஐ.நா விவகாரம் தமிழர்களுக்கு எவ்வாறான ஆயுதமாக இருக்கப் போகிறது?**

**அ.நிசாந்தன், வவுனியா.**

பதில்: ஐ.நா.வின் அறிக்கை பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் அபிலாஷைகளை உள்ளடக்கியோ, தமிழ் மக்களின் நியாயங்களை அடைந்து கொள்வதற்காகவோ தயாரானதல்ல. ஆனால் யாருடைய நோக்கங்களுக்காக அந்த அறிக்கை தயாராகியிருந்தாலும், இலங்கை தமிழ் மக்கள் தொடர்பான பதிவுகளை ஐக்கிய நாடுகளின் சபையில் எதிரொலிக்கச் செய்துள்ளது. அதே போல் இலங்கையில் அரசியல் அமைப்புத் திருத்தம் ஒன்று கொண்டுவரப்பட்டு அரசியல் முரண்பாட்டுக்கு தீர்வொன்று காணப்படவேண்டும் என்ற வலியுறுத்தலையும் கொண்டு இருக்கின்றது. இவ்விரண்டு குறிப்புகளையும் தமிழ் மக்கள் சரியாக பயன்படுத்திக் கொள்ளவேண்டும். எவ்வாறான ஆயுதமாக அந்த அறிக்கை இருக்கமுடியும் என்பதை தமிழ் மக்கள் ஒற்றுமைப்பட்டு கலந்துரையாடி தீர்மானிக்க வேண்டும்.

**✪ அண்மைய நாள் சுவாரசிய அரசியல் ஜோக் ஒன்று கூறுங்கள் சிந்தியா?**

**சு.பவானி, திருமலை.**

பதில்: இறுதி யுத்தத்தில் என்ன நடந்தது என்ற உண்மையைக் கண்டறியவேண்டும் என்பதற்காக யாரையும் வேட்டையாடமுடியாது என்று பிரதமர் ரணில் கூறியிருந்தது தான். ஒரு பக்கமாக இல்லாமல் யுத்தத்தில் அதிக அழிவுகளை ஏற் படுத்திய பிரபாகரனுக்கு எதிராகவும் வழக்குத் தொடரவேண்டுமாம். பிரபாகரன் கொல்லப்பட்டுவிட்டார் என்றால் அவருக்கு எதிராக எப்படி வழக்குத்தாக்கல் செய்வது? இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டவர்களை விடவும் சிரித்தவர்கள்தான் அதிகம்.

**✪ மக்காவில் உயிர்நீத்த புனித யாத்திரிகர்களின் மரணம் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

**எம்.இக்பால், நிந்தவூர்.**

பதில்: மக்காவுக்கு ஹஜ் யாத்திரை செல்லும் ஒவ்வொருவரும் யாத்திரை முடிந்து மீண்டும் வீடு வந்து சேர்வோம் என்ற நம்பிக்கையோடு செல்வதில்லை. மக்காவுக்குச் சென்று மரணித்தால் அதை சொர்க்கத்துக்கான அழைப்பாகவே கருதுகின்றார்கள். மக்காவுக்கு பயணம் செய்வோர் தமது அசையும், அசையா சொத்துக்களை தமது நம்பிக்கைக்குரியவர்களுக்கும், அன்புக்குரியவர்களுக்கும் எழுதி வைத்துவிட்டே செல்கின்றார்களாம்.

மக்கா ப்பயணத்தின்போது, கிரேன் விழுந்து பல நூறுபேர் பலியாகியது ஒரு விபத்து அதற்கு நஷ்டஈடு வழங்கவும் சவுதி மன்னர் முன் வந்திருக்கின்றார். ஆனால் நெரிசலில் அகப்பட்டு உயிரிழந்தது விபத்தாக



இன்னும் ஏற்றுக் கொள்ளப்பட வில்லை. இரண்டு சம்பவத்திலும் இம்முறை சுமார் 1000பேருக்கு மேலானவர்கள் பலியாகி இருக்கின்றார்கள்.

சுமார் இருபது இலட்சம் பேர் ஒரே நேரத்தில், ஒரு இடத்தில் கூடி ஹஜ் கடமையை நிறைவேற்ற எத்தனிப்பதால் இவ்வாறான இழப்புக்கள் நடைபெறுகின்றன. நெரி சலில் 820 பேர் பலியாகும்படி நடந்த சம்பவமானது, திடீரென சவுதி மன்னரின் மகன் அந்த இடத்துக்கு வந்ததால் ஏற்பட்ட பரபரப்பினா லேயே ஏற்பட்டது என்றும் தகல்கள் கூறப்படுகிறது.

**✪ நயன்தாராவின் மாயா எப்படியிருக்கிறது சிந்தியா?**

**என்.கவி, கோப்பாய்.**

பதில்: அண்மையில் வெளிவந்த பேய்ப்படங்களிலேயே நயன்தாரா நடித்திருக்கும் மாயா படம் சிறப்பான வெற்றியைப் பெற்றிருக்கின்றது. நயன்தாராவின் அழுத்தமான நடிப்பும், புதிய இயக்குநர் அஸ்வின் சரவணனின் புதுப்பாணியான கதைசொல்லும் விதமும் இசையும், கலை இயக்குநரின் உழைப்பும் இரசிகர்களை மிரட்டி இருக்கின்றது.

கணவனைப் பிரிந்து கைக்குழந்தை யோடு, தோழியின் வீட்டுக்கு வரும் நயன்தாரா பணக்கஷ்டத்திற்காக ஐந்து இலட்சம் ரூபாய் பரிசுக்காக பேய்ப்படத்தை தனிமையில் பார்க்க சம்மதிக்கின்றார். அந்தப் பேய்க் கதையில் பல மர்மங்களும், கொலை களும் நடக்கின்றது. கொல்லப்படு வோரில் முக்கியமான ஒருத்தியாக திரையில் நயன்தாராவே தோன்றும் போது, படத்தைப் பார்த்துக் கொண்டு இருக்கும் நயன்தாரா விறைத்துப் போகின்றார். முன்ஜென்மத்தில் ஒரு கைக் குழந்தையோடு தன்னை ஏன் கொலை செய்கின்றார்கள். நான் யார்? என்ற வியப்போடு நயன்தாரா இருக்க படம் முடிகின்றது. தொடக்கத்திலிருந்து முடிவுவரை மிரட்டியதால் மாயா வெற்றி பெற்றது. படத்தை இரண்டாம் பாகமாகவும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மாயா தொடர்வாள்.

# காதிலை பூதந்தசாமி

**வணக்கமுங்கோ! காலுக்கு கீழே பாம்பு கிடந்தாலும் எல்லோருடைய பார்வையும் ஐக்கிய நாடுகள் சபையில என்ன நடக்குது எண்டதிலதான் இருக்குதுங்கோ. இலங்கையில நடந்த போர்க் குற்றங்களையும், மனித உரிமை மீறல்களையும் விசாரிப்பதற்கு சர்வதேச விசாரணைதான் வேணும் எண்டு நாங்கள் போராட்டம் நடத்தியும், கையெழுத்துப் போட்டும் ஆகியது ஒண்டுமில்லையுங்கோ. ஆனால் ஐ.நாவின்ர அறிக்கையும், அமெரிக்காவின்ர தீர்மானமும் தமிழ் மக்களினீண்ட நாள் கோரிக்கைகளை உள்ளடக்கியதாக இருக்குதுங்கோ. ஆகவே சர்வதேசம் குறிப்பிட்டுள்ள சர்வதேச பங்களிப்புடனான கலப்பு உள்ளக விசாரணை ஒன்றை நடத்துவதை நாங்கள் ஏற்றுக்கொண்டு எங்கட அடிப்படைப் பிரச்சனைக்கு தீர்வைக் காணவேணுமுங்கோ.**

உந்த ஐ.நா. காய்ச்சல் எல்லோருக்கும் பிடித்திருப்பது உண்மைதானுங்கோ. இதற்கிடையே நம்மைச் சுற்றி நடக்கின்ற சில விடயங்களையும் நாங்கள் கவனிக்காமல் இருக்கக்கூடாதுங்கோ.

நான் என்ன சொல்லுறன் எண்டால் பாருங்கோ, யாழ்ப்பாணத்தில நடக்கும் வாள்வெட்டுக்கள், வன்முறைகளை கட்டுப்படுத்தி குற்றவாளிகளை தேடிப்பிடித்து சட்டத்தின் முன்னால் நிறுத்துவதற்கு விசேட அதிரடிப் படையை நீதிபதி கடமைக்கு அழைத்து இருக்கிறாருங்கோ.

நிலைமையைப் பார்த்தீங்களோ, முன்னம் புலிகள் ஊருக்கேக்கையும், பிறகு ஆமி ஊருக்க இருக்கேக்கையும் உந்த மாதிரி வாள்வெட்டுக் கோஸ்ட்டிகள் அட்டகாசம் இருக்கவில்லையுங்கோ.

இயல்புநிலை வந்திட்டுது, ஆமி ஊருக்குள்ள இருந்து போங்கோ எண்டு ஆமியை வெளியால அனுப்பிக்கொண்டு இருக்கும்போது, ஊருக்குள்ள திரிஞ்ச காவாலிகள் ஆளுக்கொரு கத்தியை தூக்கிக்கொண்டு சண்டித்தனம் பண்ணத் தொடங்கிட்டினமுங்கோ.

இப்ப தூரத்தேபோன ஆமியைக் கூப்பிட்டு, தெருச்சண்டியன்களை கட்டுப் படுத்தும் தேவை உருவாகியிருக்கு துங்கோ. ஆயுதப் போராட்டங்கள் வளர்ச்சிபெற்ற காலத்திலையும், எங்கட இயக்கப்பெடியள் ஆமிக்காரரை தாக்கிப்போட்டு ஊருக்குள்ள ஓடிவந்து ஒழிஞ்சு கொள்ளுவினம், அவையைத் தேடி ஆமிக்காரன் ஊருக்குள்ள வருவான். பிறகு முகாமுக்குள்ளிருந்த ஆமி ஊருக்குள்ள வந்து இருக்கத் தொடங்கிட்டான்.

பிறகு ஆமியை வெளியேற்றுங்கோ, ஊருக்குள்ள ஆமி நிக்குது என்று புலம் பினோம். இப்போது காவாலிகள் சில பேரின் செயற்பாடுகளால் ஊருக்கு வெளி யால போயிருந்த ஆமியை மீண்டும் நாங்களே ஊருக்குள்ள வாங்கோ எண்டு கூப்பிடும்படியாக இருக்குதுங்கோ.

முன்னம் ஒரு காலத்தில ஆமிக்காரர் தெருவில போனாலே பயந்து நின்ற சனம், இப்ப இன்னும் ஆமிக்காரரைக் காணயில்லை எண்டும், ஆமிவந்தால், அதைப் பாதுகாப்பாக நினைத்து நிம்மதியாக இருக்கிற நிலைமையில இருக்கினமுங்கோ.

இதுதானுங்கோ, இண்டைக்கு நிலைமை. ஆயுதங்களுடன் ஆமிக்காரர் தெருவில நிக்காட்டில் வாள்வெட்டுக் கோஸ்ட்டிகள் வீதியில நிண்டு சண்டித் தனம் காட்டிக்கொண்டு நிப்பாங்கள். அவனுகள் நிண்டால் அந்த வீதியாலை போய்வர பயம். அதிலையும் பொம்பிளைப் பிள்ளைகள் வெளியால போயிட்டு வாறதெண்டால் அதுமுடியாத காரியம் எண்டு சொல்லினமுங்கோ.

எனக்கு ஒரு விசயம் புரியவில்லை யுங்கோ, வடக்கு, கிழக்கில யுத்தம் நடந்தது, கிழக்கு மாகாணத்தில நிலைமை இயல்புநிலைக்கு வந்திட்டுது. வடக்கிலையும் வன்னியில நிலைமை பெரிய மோசம் இல்லையுங்கோ.

யாழ்ப்பாணத்தில மட்டும் வாள்வெட்டு சம்பவங்களும், வன்முறைகளும், பாலியல் வன்முறைச் சம்பவங்களும் இப்படி நடைபெறுவதற்கு என்ன காரணமுங்கோ, முன்னமெண்டால் உதுகளுக்கெல்லாம், படையினர்தான் காரணம் எண்டு சொல்லிக் கொண்டு இருந்தோம்.

யாழ்ப்பாணத்தில இளைய தலைமுறை க்கும், மூத்த தலைமுறைக்கும் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுவிட்டதா? அல்லது யாழ்ப்பாணத்தின் இயல்புச் சூழலைக் குழப்பத்தில் வைத்துக்கொள்வதற்கு வேறு புலம்பெயர் சக்திகள் ஏதேனும் இதைத் திட்டமிட்டு செய்துகொண்டிருக்கின்றனவா?

நாட்டில் நடக்கின்ற பல குற்றவாளி களையும் விரைவாகவே கைதுசெய்து சட்டத்திற்கு முன்னால் கொண்டுவரும் பொலிஸாருக்கும், படையினருக்கும் யாழ்ப்பாணத்தில் உள்ள குற்றவாளிகளை மட்டும் தேடுதல் நடத்தி சட்டத்திற்கு முன்னால் கொண்டுவந்து நிறுத்தி, குற்றங் களை கட்டுப்படுத்த முடியவில்லையா? என்ற கேள்விகளும் இருக்கின்றதுங்கோ.

இல்லாவிட்டால் இதுபோன்ற குற்றவாளி கள் யாழ்ப்பாணத்தில் இருந்தால்தான், யாழ்ப்பாணத்திலிருந்து வேறு பெரிய போராட்டச் சிந்தனைகள் எழுச்சிபெறாது என்று சிலர் சில்லறைக் கணக்குப் பார்க்கின்றார்களா? என்ற சந்தேகங்களும் இருக்கத்தான் செய்யுதுங்கோ.


யாழ்ப்பாணத்தின்ர நிலைமையையிட்டு மிகவும் தெளிவுகொண்டிருப்பவராக நீதிபதி இளஞ்செழியன் கூடுதல் அக்கறைகொண்டு தீர்மானங்களை எடுப்பதை வரவேற்போடு மட்டுமில்லையுங்கோ. அவரோடு ஒத்துழைத்தும் நடக்கவேணுமுங்கோ. அவர் நீதிபதி, அவருக்கு அரசு சம்பளம் கொடுக்குது. அவர் அதைச் செய்யத்தானே வேணுமெண்டு யாழ்ப்பாணத்து பாரம்பரியச் சிந்தனையோடு இருந்துவிடாது, அவருக்கு ஒத்துழைப்பாக நடந்துகொண்டு, உண்மை யான இயல்புச் சூழல் உருவாக சனமும் பாடுபடவேணுமுங்கோ. சனம் பங்களிப்புச் செய்யாவிட்டால் கடமை எப்போது கடின மானதாகவும், சவாலானதாகவும் மாறிவிடுகின்றதுங்கோ.

**"யாவும் கலப்படமற்ற கற்பனை"**

---

## வரலாறு படைத்த வல்லுநன்ர்கள்

# ஒப்பற்ற தலைவன் மாசேதுங்



சியாங்ஸி மாகாணத்திலிருந்து யேனான் பகுதி 6000 மைல்களுக்கு அப்பாலிருந்தது. அவ்வளவு தூரத்தை எப்படிக் கடப்பது? சரித்திரப் புகழ்பெற்ற "லாங் மார்ச்" எனப்படும் நெடுந்தூரப் பாதயாத்திரையை மேற்கொள்ளும்படி கட்டளை யிட்டார் தம் தோழர்களுக்கு.

எவ்வளவு பேர்கள் தெரியுமா? 80,000 கம்யூனிஸ்டுகள் கால்நடையாகவே, 6000 மைல்களைக் கடந்து, யெனான் போகவேண்டும். போனார்கள். எத்தனை நாட்களில்? ஒரு வருஷத்தில். இதில் 60,000 பேர் வழியிலே இறந்தார்கள். இவர்களில் மாஸேதுங்கின் ஐந்து குழந்தைகளும் பலியா-கின. யேனான் மாகாணத்தின் வடக்குப் பகுதியிலுள்ள மலைக்குகைகளில் தஞ்சம்புகுந்தார்கள் எஞ்சியவர்கள். அங்கு புதிய சோவியத்தை அமைத்தார் மாஸேதுங். குடி யானவர்களுக்கு நிலங்கள் தரப்பட்டன.

பள்ளிக்கூடங்கள், வைத்தியசாலைகள், தொழிலாளர் கூட்டுறவுகள் அமைக்கப்பட்டன. இதனால் மட்டும் மாஸேதுங் தமது இலட்சியத்தின் உச்சத்தை அடைந்துவிடவில்லை. 1937 இல் ஜப்பானியர்கள் சீனாவைத் தாக்கினார்கள். இது மாஸேதுங்குக்குப் பெருமளவில் உதவியது. தேசிய சீனப் படைகள் பலத்த அடிவாங்கின. சியாங்கும், கோமிங்டாங் அரசி னரும் செக்வான் மலைப் பகுதியில் மாட்டிக்கொண்டார்கள். இந்த வேளையில் மாஸே துங்கின் செம்படை தாய்நாட்டின் கௌரவத்தைக் காக்க, அற்புதமான முறையில் போராடி யது. கம்யூனிஸ்டுகளின் கொரில்லாப் போர் முறைகள், முன்னேறித் தொல்லை தரும் ஜப்பானியர்களைத் திணறடித்தது. நாட்டுப்பற்றுமிக்க குடியானவர்களின் ஆதரவைத் தம் பக்கம் இழுத்துக்கொள்ள மிகவும் உதவியது.

(தொடரும்)

---

# இந்தவாரம் உங்கள் பலன்

**(01.10.2015 தொடக்கம் 07.10.2015 வரை)**

### மேடம்

பொருளாதாரத்தில் இருந்துவந்த நெருக்கடி நிலைகள் மாறிப் பொருளாதாரத்தில் முன்னேற்றம் காணப்படும். கண், காதுகளில் கவனம் தேவை. மாணவர்கள் கல்வியில் மிகுந்த கவனமுடன் பயின்றுவருதல் நல்லதாகும். தந்தை, மகன் உறவுகளில் இருந்துவந்த கருத்து வேறுபாடுகள் குறைந்து மனநிம்மதி அடைவீர்கள். நண்பர்களிடம் நாம் விட்டுக்கொடுத்துப் போவதால் மனக் கசப்புகளைத் தவிர்க்கலாம். புதிய தொழில்களை ஆரம்பம் செய்வதைச் சிறிதுகாலம் தள்ளிப்போடு தல் உகந்ததாகும். கருத்து வேறுபாடுகளுடன் இருந்துவந்த கணவன் - மனைவி உறவு களில் உள்ள பிரச்சினைகள் நீங்கி ஒற்றுமையுடன் காணப்படுவீர்கள். காதல் சம்பந்தமான விசயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் செயற்படவும்.

### இடபம்

வெளிநாடு சென்றுவருதல் போன்ற புதிய முயற்சிகளுக்காக கடன்கேட்டு எதிர்பார்த்து இருந்த பணம் கிடைக்க வாய்ப்பு உள்ளது. தொழிலாளர்களுடன் முன்கோபத்தை தவிர்த்து எச்சரிக்கையுடன் நடந்துகொள்வது நல்லது. விட்டுப்போன பழைய உறவுகள் மீண்டும் தொடர வாய்ப்பு உள்ள காலமாகும். வராத கடன்கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் சம்பந்தமாக வீண் பிரச்சினைகள் உருவாகலாம். மனஉற்சாகத்துடன் பெரிய மனிதர்களின் சந்திப்பின்மூலம் காரியங்களைச் சாதித்துக்கொள்ளுவீர்கள். குலதெய்வ ஆலய வழிபாடுகள் செய்துவருவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு மனநிம்மதியை அடைவீர்கள். பொதுவாக இது ஒரு நற்பலன் தரும் வாரமாகும்.

### மிதுனம்

புதிய கடன்கொடுப்பதைத் தவிர்த் தல் நல்லது. நண்பர்களின் வீட்டுச் சுப காரிய நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளுவீர்கள். குடும்பத்தில் தடைப்பட்டு வந்த சுபகாரியங்கள் நிறைவேற இன்னும் சற்று காலதாமதம் ஆகலாம். ஒரு சிலருக்கு வீடு மற்றும் தொழிற்சாலைகளை இடமாற்றம் செய்ய திட்டம் போடுவீர்கள். நீண்ட தூரப் பயணங்கள்மூலம் காரியங்கள் நிறைவேறும் காலமாகும். பொதுத் தொண்டுகளில் ஈடுபடுவோர்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் பணி செய்வது நல்லதாகும். கணவன் - மனைவி உறவுகளில் வெகுநாட்களாக இருந்துவந்த கருத்து வேறு பாடுகள் சற்றுக்குறைந்து மனநிம்மதி அடைவீர்கள்.

### கடகம்

தந்தைவழி சொத்துக்களில் இருந்து வந்த பிரச்சினைகள் சற்று குறையும். வங்கிகள் மூலமாக எதிர்பார்த்து இருந்த கடன்கேட்டு இருந்த பணங்கள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. நீண்டகாலமாகத் தடைப்பட்டுவந்த திருமணம் போன்ற சுபகாரியங்கள் நடைபெறலாம். வெளி நாட்டில் இருந்து எதிர்பார்த்த பண உதவிகள் மற்றும் நல்ல செய்திகள் வந்துசேரும். கணவன் - மனைவி உறவுகள் சுமாராகக் காணப்படும். மறைமுக எதிரிகளால் இருந்துவந்த தொல்லைகள் குறைய வாய்ப்பு உள்ள காலமாகும். குலதெய்வ ஆலய வழிபாடுகள் செய்துவருவது சிறந்ததாகும். சொத்து சம்பந்தமான விசயங்களில் இருந்துவந்த மனக்கசப்புகள் குறைந்து ஒற்றுமை உண்டாகும்.

### சிங்கம்

வெளிநாடு சென்றுவருவதற்கான முயற்சி களில் நல்ல தகவல்கள் வந்துசேரும். காதல் விசயங்களில் நற்செய்திகள் வந்துசேரும். உடல்நிலையில்மூலம் மற்றும் வயிறு போன்ற உபாதைகள் வந்துபோகும். புதிய ஆடை மற்றும் ஆபரணங்கள் வாங்குவதைத் தவிர்த்தல் நல்லது. பிள்ளைகளுக்கு கல்வித்துறையில் பரிசுகள் மற்றும் பாராட்டுக்களைப் பெறுவதன்மூலம் குடும்பத்தில் மனமகிழ்ச்சி உண்டாகும். நண்பர்களின்மூலமாகப் புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடனைகள் அடைப்பீர்கள். பிரிந்துபோன கணவன், மனைவி இருவரும் திரும்ப ஒன்றுசேருவதற்கான வாய்ப்புக் கள் உள்ளன. பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### கன்னி

அண்டை அயல்வீட்டுக்காரர்களுடன் வீண் பிரச்சினைகள் உருவாகலாம். குடும்பத்தில் நீண்டகாலமாகத் தடைப்பட்டுவந்த சுபகாரிய நிகழ்ச்சிகள் நிறைவேறுவதற்காக புதிய கடன்கள் வாங்குவீர்கள். திருட்டுப்போன பொருட்கள் மற்றவர்களின் உதவியால் திரும்ப கிடைக்கும். வெளிநாட்டில் இருப்பவர்கள் நீண்டகால நினைவுகளாக இருந்த தாய்நாட்டிற்கு சென்றுவர வாய்ப்பு உள்ளது. நீண்டகாலமாக வராத கடன்கொடுத்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் நண்பர்களின் உதவியால் திரும்பக் கிடைக்கும். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

### துலாம்

பிள்ளைகளால் எதிர்பாராத சில தொல்லைகள் வந்துசேர வாய்ப்பு உள்ளதால் மிகுந்த கவனமுடன் பார்த்துக் கொள்ளுதல் நல்லது. அரசு சம்பந்தமான வழக்கு விசயங்களில் சாதகமான தீர்ப்புகள் கிடைக்க வாய்ப்பு உள்ளது. நீண்டகாலமாகத் தடைப்பட்டு வந்த திருமண விசயமாக நல்ல முடிவுகள் கிடைக்கலாம். கணவன், மனைவி உறவு-கள் நன்றாக இருக்கும். பிரிந்துபோன உறவுகள் மீண்டும் ஒன்றுசேர வாய்ப்பு உள்ளது. செய்யாத குற்றங்களுக்காக வீண் பழிச்சொல்லுக்கு ஆளாக நேரிட இருப்பதால் நண்பர்களிடம் கவனமாகப் பழகுவது சிறந்தது. கணவன் - மனைவி உறவு-களில் சற்று எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளவும். காதல் சம்பந்தமாக நல்ல செய்தி வரும்.

### விருச்சிகம்

குடும்பத்தில் இருந்துவந்துள்ள மருத்துவச் செலவுகள் சற்று குறைந்து காணப்படும். நீண்டகாலமாகத் தடைப்பட்டுவந்த சகோதர சகோதரிகளின் சுபகாரிய நிகழ்ச்சிகளுக்காக நடைபெற வாய்ப்பு உள்ளது. வராத கடன்கொடுத்து இருந்த பணம் மீண்டும் கைக்கு வந்து சேரும் காலமாகும். புதிய கடன்களை வாங்கி பழைய கடனை அடைக்க முயற்சிசெய்வீர்கள். பூமி, நிலம் சம்பந்தமான பிரச்சினைகளில் நல்ல முடிவுகள் கிடைக்கும். வங்கிகளில் இருந்து எதிர்பார்த்து இருந்த பணஉதவிகள் கிடைக்கலாம். வீடு வாகனங்களை பழுது பார்ப்பதன்மூலம் பொருட் செலவுகள் உண்டாகும். உடம்பில் கண், காது களில் கவனமுடன் இருக்கவும். காதல் சம்பந்தமான பெண்கள் விசயங்களில் மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொள்வது நன்றாகும்.

### தனுசு

நண்பர்களால் வீண் பிரச்சினைகளும், மனநிம்மதிக் குறைவும் ஏற்பட இருப்பதால் எச்சரிக்கையுடன் பழகிவருதல் சிறந்தது. பொதுநலத் தொண்டுகளில் பிரியமுடன் ஈடுபட்டு நற்பெயர் புகழ் அடைவீர்கள். பழுதுபட்ட ஆலயங்களை மற்றும் வீடுகளைப் புதுப்பிப்பதற்கான முயற்சிகளுக்காகப் புதிய கடன்வாங்குவீர்கள். உற்றார், உறவினர்களால் எதிர்பார்த்த ஆதாயம் இல்லை. குழந்தைகளின் மகிழ்ச்சிக்காக உல்லாசப் பயணங்கள் சென்றுவருவீர்கள். உற்றார் உறவினர்களின் திடீர்வரவுகளால் மனநிம்மதியுடன்கூடிய பொருட்செலவுகள் உண்டாகும். உடல்நிலையில் வயிறு சம்பந்தமான உபாதைகள் வந்துபோகும். பெண்களின் விசயங்களில் செய்யாத குற்றங்களுக்காக அவப்பெயர் ஏற்படலாம்.

### மகரம்

மற்றவர்களின் விசயங்களில் அநாவசியமாகத் தலையிட்டு வீண் பிரச்சினைகளில் மாட்டிக் கொண்டு மனநிம்மதி இழக்காதிருங்கள். தாயின் உடல்நிலையில் இருந்துவந்த பாதிப்புகள் சற்று குறைந்து காணப்படும். புதியதாக வீடு, நிலங்கள் வாங்குவதற்கான முயற்சிகளில் வெற்றிபெறுவீர்கள். சகோதர சகோதரிகளுடன் இருந்துவந்த நாட்பட்ட மனக்கசப்புகள் தீர்ந்து ஒற்றுமை அடைவீர்கள். குடும்பத்தில் களவுபோன பொருட்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் உதவியால் திரும்ப கிடைக்கும். பிள்ளைகளுக்கு உடல்நிலையில்வந்த பாதிப்புகளால் வெளியூர் பயணங்களும் மருத்துவச்செலவுகளும் உண்டாகும்.

### கும்பம்

தீராத நோய்களுக்குப் புதிய முறை மருத்துவங்களின் மூலமாக நோய்தீர வாய்ப்புள்ளது. பிரிந்துபோன பழைய உறவு-கள் மீண்டும் தொடரலாம். கண்களில் கவனம் தேவை. மனைவியின் உடல்நிலையில் பாதிப்புகள் ஏற்பட்டு அவர்களால் மருத்துவச்செலவுகள் உண்டாகும். பங்காளிகளுடன் சேர்ந்து நடத்தும் கூட்டுத்தொழில்களில் காரணமற்ற மனக்கசப்புகள் வர இருப்பதால் முன்கோபத்தை விலக்குதல் சிறந்தது. கணவன் - மனைவி உறவுகள் சுமாராக காணப்படும். மாணவர்கள் கல்விபயிலும் இடங்களில் வீண் பழிச்சொல்லுக்கு ஆளாகநேரிடும் என்பதால் மிகுந்த கவனமுடன் இருத்தல் நல்லதாகும். உத்தியோகத் துறையினருக்குப் பதவி உயர்வுகளும் பணி இடமாற்றங்களும் ஏற்படலாம்.

### மீனம்

வங்கிகள்மூலமாக வெகுநாட்களாக எதிர்பார்த்து இருந்த பணம் மற்றும் பொருட்கள் மற்றவர்களின் உதவியால் திரும்பக் கை வந்துசேரும். வேலை இல்லாதவர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் கிடைக்கும். அண்டை அயல்வீட்டுக்காரர்களுடன் விட்டுக்கொடுத்து போவதின்மூலம் சில ஆதாயத்தை அடைவீர்கள். அடிமையாட்களால் எதிர்பாராத ஆதாயங்களும் மனமகிழ்ச்சியும் ஏற்படும். அரசியல்வாதிகளால் எதிர்பார்த்து இருந்த ஆதாயம் கிடைக்கக்கூடிய வாய்ப்பு உள்ளது. சூதாட்டங்களில் பணம் பொருட்கள் ஏமாற்றம் அடையாமல் எச்சரிக்கையுடன் இருத்தல் நல்லது. யாத்திரையில் மற்றவர்களை நம்பி ஏமாற்றம் அடையவேண்டாம்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)

## நம்பிக்கை





லிபோர்னியாவை சேர்ந்தவர் கென்யா சீசர் (வயது 23) பிறக்கும் போதே கால்கள் இல்லாமல் பிறந்தவர். ஆனால் தற்போது இவர் ஒரு வெற்றிகரமான உள்ளாடை அழகியாக திகழ்கிறார். கென்யா கூறும்போது, கவர்ச்சியாக உணர கால்கள் தேவை இல்லை என கூறுகிறார். இந்த உள்ளாடை கவர்ச்சி மொடலிங் மூலம் தினமும் "650 வரை வருமான ஈட்டி வருகிறார் கென்யா. பேஷன் துறையின் தடைகளை உடைத்து இவ்வாறு இவர் புகழ்பெறுவதன்மூலம் பல பெண்களுக்கு முன் உதாரணமாக இருக்கிறார்.

இது குறித்து கென்யா கூறியதாவது:- நான் முக்கியமாக தடகள உள்ளாடைகள் விளம்பரங்களில் கலந்துகொள்கிறேன். இது சிலசமயம் வேடிக்கையாகவும் இருக்கும், இது என் கதையை காட்டுகிறது, நான் வித்தியாசமான மற்றும் கவர்ச்சியாக இருக்கிறேன், கவர்ச்சியை உணர கால்கள் தேவை இல்லை.

இதனை விரும்பிசெய்து நான் சம்பாதிக்கிறேன். நான் எனது அழகை மக்களிடையே காட்டுவதை விரும்புகிறேன். இது எனது பலத்தை காட்டுகிறது. நான் மொடலிங் செய்யவேண்டும் என்ற கனவு ஒன்று இருந்தது. அது தற்போது நிறைவேறி உள்ளது. அதை நான் பயன்படுத்திக்கொண்டேன் என்று கூறினார். அவருக்கு விளையாட்டுமீது உள்ள ஆர்வமும், அவரது மொடலிங் ஊக்குவிப்பு பேச்சாலும் தற்போது 2018 பார ஒலிம்பிக் போட்டிக்கு பயிற்சிபெறுகிறார். கென்யா 5 வயதாக இருக்கும்போது தாய்லாந்தை சேர்ந்த ஒரு அனாதை இல்லம் அவரை தத்துக்கொடுத்தது. அவர் தனது புதிய குடும்பத்துடன் ஒரேகான் போர்ட்லாந்து சென்றார். சக்கர நாற்காலி, மற்றும் சறுக்குமரம் மற்றும் கைகளை பயன்படுத்தி அவர் நடக்க கற்றுக்கொண்டார். இவரது புதிய காதலர் பிரைன் இவருடன் கடந்த மாதம் டேட்டிங் சென்றார் கென்யா. பிரைன் கென்யாவின் தீவிர ரசிகர் ஆவார். பிரைன் அறிவாளி, அவர் எனக்கு எல்லாவகையிலும் ஆதரவாக உள்ளார். அவர் சமீபத்தில் முதல்முறையாக என்னை மொடலிங்கில் வைத்து பார்த்தார். அவர் நீ மொடலிங்கில் அழகாகவும் தனிப்பட்ட ஒரு அழகாகவும் இருந்ததாகவும் கூறினார்.

## காதல் அழகா காதல் பெண் அழகா...



இங்கிலாந்தை சேர்ந்த ஹேவார்ட் செரேனொடெட் (93) லாரா (92) என்ற தம்பதியினர் பேரக்குழந்தைகளுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தநிலையில், புற்றுநோயின் தாக்கத்தால் வாழ்வின் இறுதிக்கட்டத்தை நெருங்கிய லாரா, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில், லாரா தனக்கு மிகவும் பிடித்த காதல் பாடலான "உண்மையான காதலை நீ உணரமுடியாது" என்ற பாடலை பாடமுடியாமல், அதன் வரிகளை முணுமுணுத்துக் கொண்டிருந்துள்ளார். இதனை கவனித்த கணவர், தனது அன்பு மனைவியின் கன்னங்களை வருடியபடி, கண்ணீர் வடித்துக்கொண்டு அந்த பாடலை பாடியுள்ளார்.

இந்த காட்சியை பார்த்த உறவினர்கள் அப்படியே மெய்சிலிர்த்துப் போயினர். மேலும் பேத்திகளில் ஒருவர் இதனை வீடியோ எடுத்து, பேஸ்புக் பக்கத்தில் பதிவேற்றம் செய்துள்ளார். இந்த வீடியோவை இலட்சக்கணக்கானோர் பார்த்துள்ளனர்.

இரண்டாம் உலகப்போரின்போது தனது கணவர் போர்க்களத்தில் இருந்த சமயத்தில், இந்த காதல் பாடலை பாடி, தனது தனிமையை லாரா தனித்துக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



பாடியுள்ளார்.

இந்த காட்சியை பார்த்த உறவினர்கள் அப்படியே மெய்சிலிர்த்துப் போயினர். மேலும் பேத்திகளில் ஒருவர் இதனை வீடியோ எடுத்து, பேஸ்புக் பக்கத்தில் பதிவேற்றம் செய்துள்ளார். இந்த வீடியோவை இலட்சக்கணக்கானோர் பார்த்துள்ளனர்.

இரண்டாம் உலகப்போரின்போது தனது கணவர் போர்க்களத்தில் இருந்த சமயத்தில், இந்த காதல் பாடலை பாடி, தனது தனிமையை லாரா தனித்துக்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.







## அதிவேகமான கார்

உலகில் அதி கவேகமாக 1000 மைல் வேகத்தில் (1600 கிலோமீற்றர்) செல்லும் ‘பிளட் ஹவுண்ட்’ கார் இங்கிலாந்தில் உருவாகியுள்ளது. ரிச்சர்ட் நோபிளின் தலைமையிலான குழு இந்த ‘பிளட்ஹவுண்ட்’ காரை தற்போது உருவாக்கியுள்ளது.

பிளட்ஹவுண்ட் நாற்பத்து நான்கு அடி நீளமும், ஆறு அடி அகலமும் கொண்டு, ஒரு இலட்சத்து முப்பத்தைந்தாயிரம் குதிரைத்திறனுடன் செயல்படும்வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. 2016ஆம் ஆண்டில் தென் ஆப்பிரிக்காவில் நடக்க இருக்கும் கார் பந்தயத்தில் இந்தக் கார் பங்கேற்கும் என இதை வடிவமைத்த ரிச்சர்ட் தெரிவித்துள்ளார்.



## கண்ணாடிப் பாலம்

சீனாவில் உயரமான இரண்டு மலை உச்சிகளை இணைக்கும்விதமாக கட்டப்பட்டுள்ள கண்ணாடி பாலத்தை சுற்றுலா பயணிகள் பீதியுடனே கடக்கும் காட்சி ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.

சீனாவின் ஹுனான் பகுதியில் உள்ளது ஷினுஷாய் தாவரவியல் பூங்கா. இங்குள்ள Stone Budha எனப்படும் மலையின் இரு உச்சிகளை இணைப்பதற்காக 590 அடி உயரத்தில் மரப்பாலம் ஒன்று கட்டப்பட்டிருந்தது. இந்நிலையில் சுற்றுலா பயணிகளை கவரும்விதத்தில் முழுக்க முழுக்க கண்ணாடியினாலான பாலம் தற்போது அங்கு கட்டப்பட்டுள்ளது.

சுற்றுலா பயணிகளில் பயன்பாட்டிற்காக அந்த கண்ணாடி பாலம் திறந்துவிடப்பட்டது. இந்த பாலத்தில் பயன்படுத்தப்பட்டு இருக்கும் கண்ணாடி வீட்டின் ஜன்னலில் பயன்படுத்தப்படும் கண்ணாடியைவிட 25 சதவீதம் உறுதியானது என்று பூங்கா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 600 அடி உயரத்தில் முழுவதும் கண்ணாடியினாலான அந்த பாலத்தை பலரும் பீதியுடனேயே கடந்து சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



[illegible]